தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௩	மலர்
௧௮	சுபகிருது, புரட்டாசி, ஐப்பசி 1962 அக்டோபர், நவம்பர்	௬, ௭

மெய்ப் பொருள்

வித்துவான். வை. தட்சிணாமூர்த்தி

வளர்ச்சி என்பது இடைவிடாதியலும் பெருக்கத்தொழில். தோன்றிய உயிர்கள் எல்லாம் வளர்ச்சி இயல்பினை உடையன. வளர்ச்சி, தோற்றம், முதிர்வு, முடிவு என முக்கூறுபடும். உடல் வளர்ச்சியைப் பொருத்தமட்டில் எல்லா உயிர்க்கும் இது பொதுமையாம். ஆனால் உள்ள வளர்ச்சியாகிய அறிவு வளர்ச்சி மட்டும் முடிவு அற்றதாம். அக்கருத்துடைமையான் வள்ளுவனார். "செறுவார்க்கும் உள்ளழிக்க லாகாவரண்" எனக்கூறினார், அறிவு தானேயும் அழியாததோடன்றிப் பிறரானும் அழிக்கமுடியாத தென்பதை 'செறுவார்க்கும்' என்ற இறந்தது தழீஇய எச்ச உம்மையான் விளங்க வைத்தார். தானே அழியாது பகைவரானும் அழிக்க இயலாதவாறு வல்லரணாக அமைந்த அறிவு, உடல் வளர்ச்சிக்கும் முடிவுவராமற் காக்குமென்பதை "அற்றங்காக்கும் கருவி" என்பதனாற் கூறினார்.

அத்தகைய அறிவு அறியுந்தொறும், அறியும்தொறும் முன் அறிந்தது அறியாமையாய் முடிய வளர்ந்து கொண்டே செல்கின்றது. இதனை 'அறிதோறறியாமை கண்டற்றால்' என்பதனால் கூறினார். ஆகவே அறிவு அறியாப் பருவத்தே காண்பன, கேட்பன, உற்றன எல்லாம் இஃதுண்மை. இஃதே உண்மை என உணர்ந்து, பட்டறிவுவளர, வளர முன்னுணர்ந்த அறியாமை நீங்கி உண்மை அறிவுபிறக்கும். அதனால்தான் அந்த மெய்யறிவினை அறிவுடைமை என்ற அதிகாரத்துள் அடக்காது மெய்யுணர் வென்னும் அதிகாரத்து "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு" என

(குறிப்பு:— திருநாவுக்கரசர் புராணம் பற்றிய சிறு ஆராய்ச்சிக் கட்டுரை இது)

மிகுத்துக்கூறியதோடன்றி மெய்யுணர்வு" என்றும் வேறு பெயரமைத்தார். மெய்யுணர்வு முதிர்வான் 'வாலறிவு' எய்தி மாந்தருண்மிக்காராய் மதிக்கப்பட்டு வணங்கப் பெறுவர் என்பதனை "வாலறிவன்" எனவும்கூறினர்.

ஆகவே காட்சியினும், கேள்வியினும், உணர்வினும் மெய்யுணர் வினை மயக்கும் கவர்ச்சி சூழ்ந்துள்ளன என அறியலாம். அத்தகைய கவர்ச்சி இருப்பதனால்தான் உலகாசையுட்பட்டு அலமலத்த லுறுகின்றோம். இதனைத் தெளிவாகத்தாயுமானர், "என்னை அறியாத பக்குவத்தே ஆசைப் பெருக்கைப் பெருக்கிக் கொடுத்தாய்" எனக் கூறலால் அறியலாம். இக்கவர்ச்சி இல்லாவிடில் உலகியல் இல்லை. அதைப் போலவே கவிஞனும் உண்மைச் செய்திக்குக் கவர்ச்சி யூட்ட கற்பனை மெருகேற்றி கற்பாரைத் தன்கவிக்குள் ஆழச் செய்கிறன். அத்தகைய கற்பனை இன்றேல் நன்மை பயக்கும் மருந்தாயினும் சருக்கரைக்குள் வைத்தாலன்றி விழுங்க இடர்ப்பா டுறுகின்றாற் போல, உண்மைப் பொருளும், கவர்ச்சியோடு கல்லாது ஒழிந்துபோம். அத்தகைய கற்பனைக்கவர்ச்சி தொன்றுதொட்டே இலக்கியமுடையார் இடத்து இயல்பின் இயைந்து நின்றது என்பதை அஃதுணர்ந்தார் அறிவர். அதினும் சங்ககாலத்துக் கற்பனை உள்பொருள் தழுவி ஒளிரும். அன்று தொட்டு வந்து பின்புரட்சியுற்ற சமய நூற்கள் பரம்பொருள் தழுவிய கற்பனை வாய்ந்தது. தன் தன் சமயத்தைச் சாரவேண்டுமென் றெண்ணிய புலவர்கள் இக்காலத்து தேர்தல் காலத்துப் பெறும் வாக்குச் சீட்டிற்காக பல்லாற்ருனும் கவர்பூட்டும் அரசியல் வாதியைப்போல, கற்பனைச் செறிவை அறிவியன்றவரை அளவுகடந் தேற்றிவிட்டனர்.

அவற்றுள் எவை சிறந்ததாக விளங்கினவோ அவற்றைப் படித்துப் பாராட்டி மகிழ்ந்தனர் கற்றவர். அவர் பாராட்டுதலோடு நின்றனரே ஒழிய அதன் உட்பொதி உண்மையினை உணர நுழைந்தார் இல்லை. அவ்வாறு நுழையாத காரணத்தால் கற்பனையே உண்மைஎனக்கூறி, பாராட்டி அதனைக் கல்லாரும் நம்புமாறு ஆக்கிவைத்தனர். கற்றவரிடத்தும் கல்லாதவரிடத்தும் ஒத்துப்பரவிய நீறுமேல்பூத்த நெருப்பாய உண்மைகள் நாளடைவில் இயல்பு குன்றி முற்றிலும் நீர்த்து, கற்பனையே நிலைஎனக் கொண்டாடும் பழக்கமுண்டாயிற்று, அதனல் எல்லை இல்லா இறைப்பெயர்களும் உருவங்களும், கதைகளும் அதன் அகத்து சமய, சாதி, உயர்வுதாழ்வுகளும் பிறவும் தோன்றி நிலைத்து விட்டன,

இதனை உணர்ந்த வடலூர் அடிகள்,

"கலையுரைத்த கற்பனையை நிலைஎனக்கொண்டாடும்
கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போகட்டும்"

என மனம்நைந்து பாடுகிருர். பாரதியாரும்

"பலவகையாகப் பரவிடும் பரம்பொருள் ஒன்றே
அதன் இயல் ஒளிவிடும் அறிவாம், அதன் நிலை
கண்டார் அல்லலை அகற்றினர், அதனருள் வாழ்த்தி
அமர வாழ்வு எய்துவோம்!

என மெய்யுணர்வால் வாலறிவனைக் காட்டினர்.

மெய்யுணராத் தன்மையால் மூடப்பட்டு—மூடிக்கிடப்பதிலே பழக்கப்பட்ட—அறிவு மாசு துடைப்பது எளிதன்று, எளிதில் இயலுவதும் அன்று. அதனுற்றான் தாயுமானுரும், சித்தர்களும், மறைமலை அடிகளும், திரு. வி. க. வும் பெரியாரும், குன்றக்குடி அடிகளாரும் பிறரும் அறிவுறுத்தும் நிலை உண்டாயிற்று.

அறிவாயகல்லை நம்பியகற்பனையாய பாசி மூட்டத்துள் எளிய மெய்யுணர்வென்னும் நீரினைக் காணமுடிகிறது. அவ்வாறு காணும்போது முன் நம்பியவை இழிக்கப்படுமாயினும், ஒருபுறம் இத்தகைய மாயை ஒன்றை மெய்என்றே நம்பவைத்த கவிஞனின் நுண்ணறிவாற்றலைக்கண்டு பாராட்டவும் செய்யும். அத்தகு நயங்கண்டு உண்மை உணரும் நோக்கத்தோடுதான் கடவுட் பன்மை முதலாயினவற்றை உணரல்வேண்டும்.

பெரியபுராணம் சிறந்த இலக்கியம். நயம் நோக்குவாருக்கு நயஞ்சான்றதேன், சமய நோக்குடையார்க்கு சமயப்பழம், கவியழகு நோக்குவார்க்கு கவிதைக் கடல், கற்பனை, கருத்து நோக்குவார்க்கு ஊற்று, முத்துக்குவையாகத் திகழும் வரலாறு எழுதாத பெருங்குறையை நீக்குபவர்போல சமயநோக்கொடு தொண்டர்களின் வரலாற்றைத் தந்திருக்கிறர் சேக்கிழார். வரலாறு வரண்டபாடம் (Dry Subject) என்ற எண்ணமே எழாமல் இன்சுவைப் பிழம்பாய் ஆக்கித்தந்தமையையும் படித்தவர் உணர்வர். அவர் கற்பனைச் சுவைக்குச் சமயப்பற்றும், அதனைப் பரப்பும் நோக்கமும், சொல்வேறு செய்கை வேறுடைய சமணம் பரவலைத்தடுத்து மன்னர், மக்களைத் தம்பால் இழுக்கும் கொள்கையும், புதுமைப்படஉரைத்து கேளார்ப்பிணிக்கும் தகைத்தாக்கவேண்டும் என்ற எண்ணமும் காரணங்கள் ஆகலாம். எந்தக்காரணத்தால் புனைந்துரைக்கப் பட்டாலும் உண்மைப் பொருளைக்காணலே அறிவென்க.

எடுத்துக்காட்டாக அப்பாடிகளின் சுருங்கியவரலாற்றைக் காண்போம். திருமுனைப்பாடி நாட்டில், திருவாமூரில், குறுக்கையர் குடியில் புகழனர், மாதினியார் இருவருக்கும் திலகவதி என்ற நங்கைக்கு இளவலாகப் பிறந்தவர் மருண்நீக்கியார் என்னும் திருநாவுக்கரசர். தந்தையும், தாயும், தமக்கைக்கு மணம்பேசிய கலிப்பகையாரும் இறப்ப மணம் வெறுத்த திலகவதியும் தானுமாக, நீர்ப்பந்தல் முதலாய அறங்களியற்றி வாழ்ந்தனர். அந்நாளில் துறவுமேல் பற்றுகொண்டு உளம்கொண்ட சமணநெறிசார்ந்து, சூலையுற்று, மீண்டும் சைவராகி, சம்பந்தரைப்போல் இளமையில்

துறவெய்தி மெய்யுணர்ந்து உலகாசை நீத்து இறைநிலை உணர்ந்தாற்போலல்லாமல் பல ஊர்களில் இறைவனைக்காணும் வேட்கையால் சுற்றி இறுதியில் தன்னுயிர் தானறப்பெற்று ஏனைய மன்னுயிர் எல்லாம் தொழ, புகலூரில் புகழுடல் எய்தினர். இஃதவர் வாழ்க்கைச்சுருக்கம். வாழ்க்கைவரலாற்றுள் காணும் கற்பனையும் அதனுள் பொதிந்த உண்மையும் சில காண்போம்.

"பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி" "நீ நானிரண்டில்லாமல்" "எல்லாமாய் அல்லதுமாய்" என்றெல்லாம் பிறர் இறைமைபற்றிக் கூறினாற்போலவே சேக்கிழார் பெம்மானும், நிகழும் செயல்கள், பொருள்கள், அடியார்கள் இடைஎல்லாம் இறைமைகண்டார்-புனைந்து உணர்ச்சி உவகைப் பெருக்கில் கூறி மகிழ்கிருர். இவ்வுலகமோ இன்று உருவத்தில் இறைமை இருப்பதாக எண்ணி மயங்குவது. முன்னது மெய்யுணர்வு பின்னது போலிஉணர்வு. முன்னதாய மெய்யுணர்வால் 'எங்கெங்கு காணினும் சக்தி' என்ற பான்மையால் எல்லாம் இறையாக சேக்கிழார் கண்டார், புனைந்தார் என்று உணர்ந்தவர் பெரிய புராணமோ? அதுபோன்ற பிறவோ நம்புந்திறத்ததன்று. புனைந்துரை, வெறும் கற்பனை என்றெல்லாம் குறைகூருர்.

திருநாவுக்கரசர் சமணம் சார்ந்தார். அதுகண்டு நொந்தாள், வளர்த்த சைவநெறியுடைய திலகவதி. அதேகவலையில் ஆழ்ந்தாள். இந்த இடத்தில் கனு ஒன்றுபடைத்து 'சூலை மடுத்து ஆட்கொள்வல்' என்று இறைவன்கூறினாற்போல சுவைபடச்செயலையும் இறையாக உணர்ந்து கூறியமை நோக்கற்பாலது.

சமணர்கள் நீற்றறையில் அப்பரடிகளை இட்டுவைத்தபோது ஆணைக்கு அஞ்சி இட்டவர் எல்லாம் சைவர்களாய் இருப்ப இடவைத்த 'அமண் ஆயிரந்' துறவிகளும் மன்னனுமே சமணராய் இருந்தனர் என்பது சென்ற தூதுவர் விடுக்கும் வேண்டுகோள் முறையானும் பிறவாற்ருனும் உணரலாம். அன்றி, உண்மை சிறிது விளங்குமாறு சேக்கிழாரும் 'சேமங்கள் செய்தமைத்தார்' என்பதாலும் உணரலாம். ஆகவே அன்புநெஞ்சம் சார்ந்த-சொல்வேறு செயல்வேறு படாத-அன்பர்களின் பாதுகாவலின் உதவியான் அடிகள் உய்ந்தனர். அவ்வாறு உய்வித்ததும் இறைமைச்செயல் என்றுணர்ந்தமையால்தான் "மாசில் வீணையும்" என்ற தேன்சுவைப்பாடல் மொழிந்தனர். அப்பரும் இயல்வன எல்லாம் இறைமையாக்கண்டமை இதனுன் உணரலாம். சேக்கிழாரும் இஃதிறைமைச் செயல் எனப்புனைதலும், அவ்வாறே அப்பர் சைவம் சார்ந்ததும் வீரட்டான இறைவன்மேல் இயல்பெழு கவியுணர்வால் பாடிய நாவின் திறன்கண்டு நாவுக்கரசுஎனப் பெயரிட்டனர் அன்பர்கள்; இச்செய்தியையும் இறைவன் பெயரிட்டதாக உயர்த்திக் கூறும் தன்மையும், வாலறிவன் நற்ருளை நல்லூரில் நெருங்கிப் பணிந்ததனை இறைவன் பாதமலர் சூட்டினுனெனவும்,

பெண்ணுகடத்தில் அடியவர் ஒருவர் சினவிடையொடு மூவிலைச்சூல மாய சிவசின்னம் சார்த்தியதைச் சிவப்பூதம் சார்த்தியதாகவும் கூறும் பண்பும் கண்டு மகிழ்தற்குரித்து.

சமணர்கள் தாங்கள் நஞ்சிட்டால் கொள்கைக்குமாரும் என்று கருதி முன்போல மற்றவரையே நஞ்சிடவைக்கின்றனர். ஆகவே நஞ்சிட்டவர் சமணரல்லாதவர் என்பது விளங்கும். “அமுதுசெயப் பண்ணினர்” ‘இடுவித்த பாலடிசில்’ என்னும் அடிகள் பிறவினையாகி முன் கருத்தை வலிவுறவைக்கும். ஆகவே உணவிட்டோர் அன்புள்ளத்தாலோ? நஞ்சுக்கு நாவரசர் மாற்றறிந்தமையாலோ? உய்ந்தனர் எனலாம். நஞ்சுக்கு மாற்றறிந்தமை எனும் கருத்து அப்பூதி அடிகளின் மகன் நஞ்சு பட்டதை நீக்கியமையான் வலிவுறும். சமணர்கள் கொலைக்களிருக எண்ணிக்கொண்டு விடப்பட்ட நற்களிறு, பழகிய பழக்கத்தாலோ, அகத்தூய்மை அமைதிகண்டோ? ஒதுங்கிச் செல்ல, அது கண்டவர் வெருட்ட, வெருண்டகளிறு வெருட்டியவர் மேலேயே பாய்ந்து இடர்ப்படுத்திற்று. இவை எல்லாம் பல்லவனுக்குச் சிறிது மனமாற்றத்தை உண்டாக்கி இருந்ததென்பதைச் சமண அடிகள் ஏவியபின்னே, ஏவினதாலும், கல்லொடு பிணித்துக் கடலினுள் பாய்ச்சுமாறு கட்டளையிடும்போது ‘சேமமுறக்கொண்டு போகி’ எனக் கூறுதலானும் ஒருவாறு உணரலாம். ‘தப்பித்துச் செல்லாமல் கொடு போகி’ என்று பொருள் கொண்டால் தப்ப விடுவார்கள் என்ற ஐயத்தாற் கூறியதாகக்கொண்டு, கடலில் பாய்ச்சியவரே காத்தனர் என்று கூடக்கூறவரும் ஆகவே அச்சேம அமைப்பாலோ அல்லது திருப்பாதிரிப்புலியூர் “மெய்த்தவக் குழாத்தின்” உதவியாலோ மீண்டனர் என்க. இத்தகு செயல்களில் எல்லாம் இறைமைகண்டு அழகுறக்கூறிய சேக்கிழார் திறன் வியந்து பாராட்டற்குரியது.

வீழி மிழலையில் வறியநிலையுணர்ந்த அன்பர்கள் பொது நோக்கால் நோக்காது வரிசையால் நோக்கியளித்த வாசிக்காசியினை இறையளித்ததாகவும், திருமறைக்காட்டடியவர்கள் அறியாத காரணத்தாலோ என்னவோ? அடைகதவைத் திறவாது காழி சம்பந்தர் வந்ததும் திறந்து பின் அப்பரால் மூடியதனையும், அதே செயல்பின் ஆய்மூரில் நிகழக் காழியார் வந்ததும் இறையைப் பணிந்ததனையும் இறையருளாகக் கூறியமையும் முன் திறத்தனவே ஆம்.

“பாடலிபுத்திரத்திலமண் பள்ளியொடு பாழிகளும்
கூடவிடித்துக்கொணர்ந்து குணத்தரயீச்சுரம்”

எடுக்குமளவிற்கு மனம் மாறிய பல்லவன் பழையாறைப்பாழியை ‘ஈசர்க்கு விமானமாக்கி விளங்க வைத்தமையையும் திருப்பைஞ் ஞீலியில் உண்டிகொடுத்து அழிபசி வருத்தம் வீடச்செய்த அன்பர் செயலையும், கையை சென்றபோது மெய்யறிவுறுத்தியவர் உதவிய செயலையும், புகலூர் சென்றபோது துவரத்துறந்திருந்த செயலையும்

(பின்பக்கம் பார்க்க)

"உருவெளித் தோற்றம்"

(வித்துவான்: தே. ப. சின்னச்சாமி)

நாம் சிலவற்றை உறுத்து நினைக்கின்றோம். சிலவற்றை உறுத்து நோக்குகின்றோம். அவைகள் உள்ளத்தில் அழுந்தி விடுகின்றன. நீக்கமறநின்று நிலைத்துவிடுகின்றன. அத்தகைய நினைவுகள், காட்சிகள் சில சமயங்களில் நமது கட்புலனுக்கு எதிராக வந்து தோன்றுகின்றன. இல்லை, தோன்றுவனபோன்று காட்சியளிக்கின்றன. இதனையே உருவெளித் தோற்றம் அல்லது தெளிவுக் காட்சி (Clainnoint Vision) என்பர் உளநூல் தெளிந்தார்.

மனோசக்தியானது இரண்டு வகைப்படும். ஒன்று வேட்கைக் கிளர்ச்சி அல்லது விருப்ப சக்தி (Desire Foree) மற்றொன்று சித்த சக்தி (Will Power) உருவெளித் தோற்றத்திற்குக் காரணமாக நிற்பது வேட்கைக் கிளர்ச்சியேயாகும். இதுவே ஆண்பெண் இனக் கவர்ச்சிக்கும் காரணமாகும். இவையெல்லாம் இயற்கைப் பிரமாணம் (Law of Nature) வழி நின்று இலங்குவனவாகும்.

பண்டைத் தமிழ் அகப் பொருள் இலக்கியங்களில் உருவெளித் தோற்றம் பற்றிய பல நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. தலைவனுக்கு தலைவியின் தோற்றம் காணப்படுவதும், தலைவிக்கு தலைவனின்

(முன்பக்க தொடர்ச்சி)

ஏற்ற முறையில் சிறப்புறப்புனைந்துரைத்தமையும் கண்டுமகிழற்குரியது. அப்பரடிகள் யான் என தென்னும் செருக்கு நீங்கிப் புகலூரில் புகழுடலை எய்தியதைப் பாராட்டும் முறைமையும் முன்னவற்றொடு சார்த்திய சேக்கிழாரின் மெய்யுணர்வு முதலாய திறன்களை உன்னுந்தொறும் வியக்க வைக்கிறது. பிறவும் இதனொடு சார்த்தி உணர்க.

இங்ஙனம் உட்பொதிந்த உண்மையறிதலே நோக்கமாகக் கொண்டு இத்தகை இறைநிலையொடு கற்பனைசால் இலக்கியங்களைக் கற்று நயங்காணல் வேண்டும். இறைஒன்று; அதைப் பல்வேறு முறையில் அவரவர் திறனுக்கேற்பப் புனைந்துள்ளனர். புனைந்துள்ளவற்றுள் மெய்யறிவைக் காணுமல் அவ்வாறு காணல் பக்திச்சுவைக்கோ? சமயத்துக்கோ? கடவுளுக்கோ? இழுக்கென்று கருதுவாராயின், அவரே அத்தகு இலக்கியங்கள் பயிலாது வழக்கறச் செய்கின்றவர்; அவரே உண்மைப்பொருள் காணும் திறனிலாதார், கண்மூடிப்பழக்கத்தவர்.

தோற்றம் புலப்படுவதுமெல்லாம் உருவெளித் தோற்றமே; அகப் பொருளில் "நோக்குவ எல்லாம் அவையே போறல்" காடுஞ் செடியும் அவளாகத் தோன்றுமென்கண்களுக்கே என்று கூறப் படுவதும் அன்னதேயாம்.

காப்பிய உலகில் சிறப்புற்று விளங்கும் கம்ப ராமாயணத்தில் உருவெளித் தோற்றம் பற்றியதொரு நிகழ்ச்சி வருகின்றது காண்போம்.

மாலை நேரம், சோலை சூழ் பூம்பொழில்கள், பிருந்தாவனத்தின் பொழிலிடமெல்லாம் பன்மலர்கள் பூத்துக்குலுங்குகின்றன. தென்னிலங்கை வேந்தன் தீம்பொழிற் காட்சியினைக் கண்டுகளித்து மகிழ்கின்றான். கொஞ்சுமொழி, நஞ்சுவிழி, வஞ்சியவள், சூர்ப்பனகை ஆண்டு வருகின்றாள்.

தன் அண்ணனிடம், பொய்யோஎனும் இடையாள் பொற்பார் பூங்கொடி சீதையின் சீரார் எழில் நலத்தை யெல்லாங் கூறுகின்றாள். அஞ்செஞ் சீரடிமுதல், அணியார் கோலமுடிமுதல் அனைத்து உருப்பையும் வருணித்து வியந்துரைக்கின்றாள்.

இராவணன் சீதையின் எழிலுருவை உள்ளத்தால் கற்பனை செய்து பார்க்கின்றான். தென்றல் தெளிதேனோடு மலர் மணத்தை வாரி இறைத்துக் கொண்டு வருகின்றான். காமத்தீயின் வயப்பட்டு மயங்கி இருக்கின்றான். சீதையின் உருவை உள்ளுறுத்து நினைத்த வண்ணமாக இருக்கின்றான். சீதையின் செம்மை சான்ற பெண்மையழகு அங்கு அவன்முன் தோன்றுகின்றது. சூர்ப்பனகை கூறியாங்கு அவ்வுருவம் காட்சியளிக்கின்றது. சீதையின் உருவெளித் தோற்றத்தைக் கண்டு வியந்துகொண்டிருக்கின்றான்.

தங்கையை அழைத்து,

"மைந்நின்ற வாட்கண் மயினின்றென வந்தென்
முன்னின்ற விவளாங்கொல் இயம்பிய சீதையென்றான்":—

மையுண்ட வாள் போலுங் கூர்மை பொருந்திய கண்ணையுடைய மயில் வந்து நின்றது போலும் என் முன்னே தோன்றுகிற இப்பெண்ணுரு தானோ சீதை யென்று?" கேட்டான்.

சூர்ப்பன்கையானவள் அதற்கு முன்னமே மயக்க நிலையில் இருந்தாள். ஆரணியத்தில், 'மையோ! மரகதமோ' மறிகடலோ! மழைமுகிலோ! என்று போற்றும். செம்மனத்தான் செங்கோலான் தண்ணளியான் தன் வண்ணத்தைக் கண்டு களித்தவளாதலால்

அப்பெருந்தகையின் உருவத்தையே நினைந்து உருகிக்கொண்டிருந்தாள். இராமனின் உருவெளித்தோற்றமே அவள் முன்னின்றது ஆகையால்.

"செந்தாமரைக் கண்ணொடுஞ் செங்கனிவாயினேடுஞ்
சந்தார் தடந்தோளொடுந்தாழ், தடக்கைகளோடும்
மந்தார கலத்தொடு மஞ்சனக் குன்றமென்ன
வந்தா னிவனகு மவ்வல்வில் இராமனென்றாள்".

சிவந்த தாமரை மலர் போலுங் கண்ணொடும், செங்கனி போன்ற வாயினேடும், சந்தனம் பொருந்திய விசாலமான தோளோடும், தாழ்ந்த பெரிய கைகளோடும், அழகிய மாலையணிந்த மார்போடும் நீல பர்வதம்போல வந்து இதோ நின்றவனகிய இவன்றன் வலிமையுடைய வில்லையேந்திய அந்த இராமன் என்றாள்.

இதைக் கேட்ட இராவணன் திடுக்கிட்டான். தங்கையைப் பார்த்து, 'இது என்ன புதுமை' எனக்கு இத்தோற்றம் ஒரு பெண்ணாகத் தோன்றுகின்றது. உனக்கு ஆணுருவாய்த்தோன்றுகின்றதே! காரணம் யாதென்றான்.

அவள் அண்ணனை நோக்கி, அண்ணா! நீ சதா சீதையின் உருவத்தை இடைவிடாது நினைத்துக் கொண்டிருக்கின்றாய். ஆகையால் உன் கண்ணுக்கு அவளுருவம் தோன்றியதென்றாள்.

இதைக்கேட்ட இராவணன், உண்மைதான்; உனக்கேன் இராமனுடைய உருவம் தோன்றியதென்று கேட்டான். சூர்ப்பனகை இராமன் மேல் தனக்குற்ற விருப்பத்தை அண்ணன் அறிந்தால் அவமானமென்றுணர்ந்து, அதை உள்ளத்தே மறைத்து,

'அந்நாள் அவன் என்னையித் தீர்வரும் இன்னல் செய்தான்
எந்நாள் முதல் யானும் அயர்த்திலனும் என்றாள்":—

என்றைக்கு அந்த இராமன் என்னை இந்தப்படி அவமானம் செய்வித்தானே? அன்றுமுதல் அவனைப் பழிவாங்கும் பொருட்டு மறவாது சிந்தித்துக்கொண்டிருக்கின்றேன் என்று இராவணனை ஏமாற்றிச் சமாதானங் கூறினாள்.

கம்பன் தன் செம்மைக்காப்பியத்தில் கண்ட இந்த உருவெளித் தோற்ற நிகழ்ச்சி அறிந்தின்புறத்தக்கதாகும்.

உறுத்து நினைந்த நினைவும், உறுத்துக்கண்ட காட்சியும் உருவெளித் தோற்றமாகத் தோற்றமளிக்கும். இதை ஒவ்வொருவரும் அவரவர் அனுபவத்தில் அறியலாம். மானசமரும சாத்திரம் (The mysteries of mind) கற்றவர்கள் நன்கு அறிவார்கள்.

பாரதியாரும் தமிழ் மொழியும்.

ச. பாலசுந்தரம்.

வாழ்த்து :—

1 இயலிசையாய் நாடகமாய் இருதிணைஐம்
பாற்சொல்லாய் எழிலோ டோங்கி
அயலகலா தகத்திருந்து சிந்தனையை
வளப்படுத்தி அணி பெருக்கிச்
செயலுறுவார்க் கறிவமிழ்தம் சேர்க்கின்ற
செந்தமிழே! தேவே! வானப்
புயலெனத்தண் கவிதைமழை பொழியவருள்
புரிகவெனப் போற்று வோமே.

வணக்கம் :—

2 புவியரங்கிற் கவியரங்காய்த் திகழும் பண்பார்
புலவர்மலி தஞ்சையினில் நிகழும் இந்தக்
கவியரங்கிற் றலைமையொடு வீற்றி ருக்கும்
கவிஞர்புகழ்க் கவிஞ! நகைச் சுவைக் கலைஞ!
செவியமிழ்தம் பொழியுமிசைப் பாடல் கூறித்
தென்றமிழைத் துறைதோறும் செழிக்கச் செய்யும்
தவமக! நல் லெழுத்தாள! நடிக! தேர்ந்த
சந்தநடை பயிலபல நாட்டுப் பாடல்.

3 தந்தவனே! விந்தமென விளங்கும் பண்போய்!
தமிழன்னைக் கொருபுதல்வ! திரைப் படத்தில்
விந்தைமிகப் புகுத்தியநல் லறிஞ! சான்றோர்
விரும்புதமிழ் மூன்றினையும் விளங்கக் கற்ற
சிந்தனையால் செந்தமிழைப் போற்றும் வாய்மைத்
திறமிக்கோய்! சுப்புவெனும் செம்மால்! என்றன்
வந்தனையும் வணக்கமுமிங் குரிய; ஈண்டு
வந்தொளிரும் கவிஞர்களுக் கென்வணக்கம்.

வருபொருள் :—

4 உடலோம்பிப் புலன்விரும்பிற் கிணங்கத் தங்கள்
உள்ளத்தைச் சிந்தனையை ஒடுக்கிக் கொண்ட
மடவோர்கள், மயக்கத்தால் மாண்பை விட்ட
மக்கள்மனம் மாசேற ஆசை காட்டித்
திடமான மொழிப்பற்றைத் தேசப் பற்றைச்,
செந்தமிழின் பண்பாட்டை, வஞ்சத் தாலே
படகேற்றி அனுப்பியநாள் தோன்றி, யிந்தப்
பாரதத்தின் விழிதிறக்கச் செய்த வீரன்.

5 பாரதியின் நினைவாக விழாக் கொண்டாடும்
பசியதமிழ் உள்ளத்தால் ஆசை கொண்ட
சீருடைய தேசிய சேவா சங்கத்தின்
சிறந்தகிளை யாய்த்திகழும், செம்மை பூண்ட
வீரர்திரு வ. உ. சி. இலக்கியப்பேர்
அவைக்கும், அவையத்தார்க்கும் வணக்கம், நன்றி!
காரெனச்செந் தமிழ்பொழிந்த கவியைப் போற்றக்
கவியரங்கு கூட்டியநல் லோரே! வாழ்க!

6. மொழிநுணுக்கம் ஆற்றலறப் பண்பு தூய
மொய்ம்பிவற்றுள் ஒன்றுமறி யேனைத், தேனின்
பிழிவைநிகர் பாரதியின் கவிக்கடற்குள்
பிறங்குதமிழ்ப் பெருமையினைப் பாடு கென்று
பழமைமிகு நண்பதனுல் பணித்து விட்டீர்
பனிமலையின் உச்சியினைக் காட்டென் பார்போல்;
பழியறியேன் கவிகளெனச் சிலசொல் கின்றேன்
பண்புடையீர் அன்பதனுற் பாலிப்பீரே!

7 மொழியென்னும் சொற்பொருளை மூதறிவாற் காணின்,
செழுமை விளங்கிச் சிலிர்க்கும்; அறிவுடம்பு
மூழ்கி யமிழ்ந்ததனில் முக்குளிக்க வேண்டுமெனின்
ஆழ்கடல்போல் நீண்டகன்று காட்டும்; அதன்மேலும்
வாழ்வின் வளங்காண வாய்ப்பதொரு சிந்தனைக்கு
ஊழ்முறையால் முற்றி முழுமைபெற நிற்பதெனும்
நேர்பொருளைக் காட்டும். நினைமின் பெருமக்காள்!
பார்படைத்த மாதேவன் பல்லுயிருந் தான்படைத்தான்
நீர்படைத்தான் காற்றை நெருப்பினெடு தோற்றுவித்தான்.
மாவிலங்கு வான்பறவை வண்ண மலர்மரங்கள்
யாவும் படைத்தானிஞ் ஞாலத்தில் மக்களைப்போல்
தேர்ந்த படைப்பில்லைத் தெய்வப் படைப்பினிலே.
ஓர்ந்துணரின் மக்களுக்கே உள்ளமொடு சிந்தனைமுக்
கால உணர்ச்சி கலையறிவு என்றிவற்றை
நூலோ டுணரும் நுண்ணறிவைத் தான்வழங்கிச்
சிந்திக்கச் செய்தந்த சிந்தனையை மக்களுக்குக்
காட்டுங் கருவியெனக் கன்னல் மொழி படைத்து
வாட்டந் தவிர்த்தானை வாயாற் புகழவொண்ணு.
முந்திப் பிறந்தவற்றுள் மூலமாய் நம்முடைய
சிந்தை பிறர்க்குணர்த்தித் தேர்ந்தவவர் உட்கருத்தை
விந்தையொடு காணும் வியன்கருவி பாடையன்றே.
மண்ணில் மனிதர் வளர்த்த பொருளில்லாம்
கண்ணின் உயிரின் கருதின் கடவுளினும்
எண்ணத்தைப் பேசி எழுதப் படைத்த செயல்
வண்ணம் பெரிதென்றல் வாய்மையினுள் வாய்மையிதை
உள்ளபடிக் காண்போம் உவந்து.

8 மலையொடு கடல்கான் மேகம்
வான்கதிர் விண்மீன் என்னும்
நிலைபொருள் எழுந்த தெந்நாள்
நினைந்திடின் மொழியும் அன்றே
தலைப்பொரு ளாகத் தோன்றிச்
சாவின்றிச் செழித்திங், கோங்கும்
கலைப்பொருள் உருவாய் மக்கட்
கருத்தள வளவாக் கொண்டு,

9 சிந்தையின் கருவாய், உள்ளத்
துணர்ச்சியின் விளைவாய் நின்று,
விந்தையுள் விந்தையாகி
வெளிப்படும்; மொழிச்செல் வம்நம்
தந்தையின் தந்தை தந்தை
தந்தைமுன் தந்தைக் கெல்லாம்
சொந்தமாய் அமைந்தென் றென்றும்
துணைசெயும் அழியாச் சொத்தாம்.

10 என்னுடலும் என்னுயிரும் எனக்குமட்டும்
இன்னுறவாய் யான்மகிழத் தாங்களிக்கும்;
பொன்மணிகள் தேடியவர் சொத்தாய் நின்று
போகும்பின் மீளும்பல் புன்மை செய்யும்;
நன்மொழியோ நாட்டுக்கும் நம்முன் னோர்க்கும்
நமக்கும்நம் மக்களுக்கும் சொந்த மாகிப்
பின்புவரும் பரம்பரைக்கும் சொத்தாய் நின்று
பெருமைதரும்; வரலாற்றைப் பேசி நிற்கும்.

11 ஆகாயம் காற்றெனுமிவ் விருபூதத்தின்
ஆக்கமென அறைவார்கள் மொழியைக்; கன்னற்
பாகான ஒலியால்நம் செவிக்க மிழ்தம்
பாய்ச்சியறி வோடுகலைப் பயிர் விளைத்து
நோகாத வாழ்வளிக்கும்; நுண்ணுடம்பால்
நோக்கரிதாய்ச் சொலவெளிதாய்த் தீயில் நீரில்
வேகாமல் நனையாமல் வீறு கொண்டு
விளங்குமொழித் தகவினையார் விளம்பவல்லார்.

12 எப்படியோ பேசுகின்ற திறனை மக்கள்
இழந்துவிட்டார் எனவைத்துக் கொள்வோம் பின்னர்
இப்புவியில் ஒழுக்கமொடு சமயம் சாதி
உரிமையொடு கடமை,பெண்டு பிள்ளை சுற்றம்
ஒப்புரவு மானம் அருள் நோன்பு காதல்
உண்டா? வீடுண்டாமற் றெவையும் இல்லை
அப்பொழுதே விலங்கினுங்கீ ழாவோம் அம்மா!
ஆண்டவனை நினைப்பதற்கும் மொழிதான் மூலம்.

13 கண்மணியும் உயிரும்நல் லுடம்பும் மக்கள்
கருதும்அரும் பொருள்களுளே சிறந்த வாகும்
எண்ணெழுத்தைக் காட்டியறி வுணர்வெ ழுப்பும்
எழில்மொழிபோல் ஏற்றமிவை பெறுமோ? யாழ்போல்
பண்விளையும் மொழியாலே காதல் பேசி
பால்மணக்கும் குழந்தைதரும் அமிழ்தம் மாந்தும்
வண்மையெலாம் பிறபொருளுக் குண்டோ? தேவை
வாழ்த்திவரம் வேண்டுவதும் மொழியாலன்றோ?

14 கருத்துணர்த்தும் வெறும்கருவி மொழியாம் என்று
கண்ணின்றி அறைகின்றார் சில்லோர் "இங்குப்
பொருத்தமிகு வாழ்வினுக்குப் பயனை நல்கப்
போந்தவெலாம் மொழிதாமே அவற்றுள் நன்கு
திருத்தமுற்ற ஒன்றினை நாம் கொள்வோம்" என்பார்
திறமாக வாழ்வதொன்றே குறிக்கோளென்பார்
வருத்தமிகும் அவர்கூற்றை ஆய்ந்து பார்த்தால்
மக்கள்வெறும் பொறியென்ப தவர்நினைப்பாம்.

15 உறுப்பழகு தெளிவுநலம் கல்வி கேள்வி
உடையதொரு தான்பெற்ற பிள்ளை மாற்றார்
வெறுப்புக்கிங் காளாகிக் காப்போ ரின்றி
விதிவயத்தால் மெலிந்தநிலை கண்ட பெற்றோர்
பொறுப்பாகத் தமைப்பேணும் பிள்ளை வேண்டிப்
போய்ப்பிறர்பால் கேட்பாரோ? தன் குழந்தை
கறுப்பான தென்றன்னைக் கடிவ துண்டோ?
காசில்லான் எனமனைவி ஒதுங்கு வாளோ?

16 அறிவழகு கல்விநலம் பெற்றிருக்கும்
ஆணழகன் ஒருசிறிது நோயுற் றுள்ளான்
நிறையறிவு சான்றஅவன் மனைவி அன்னோன்
நிலைகண்டு கணவனுமோர் ஆடவன்தான்
முறைபுரிய இயலாநோய் கொண்டான் நாமேன்
முழுதுமவ னை நம்பி இருத்தல் வேண்டும்
செறிவுடையான் பிறன்துணையைக் கொள்வோமென்று
சிந்திப்ப துண்டாஇந் நாட்டில்? சீ சீ!

17 வாழ்வதற்கு மொழிகருவி என்றால் இங்கே
வழங்குபொருள், உடல் உறுப்பு, மனைவி, மக்கள்,
சூழ்கின்ற சுற்றம்நம், உணவு யாவும்,
சொல்லப்போ னால்கருவி தாமே? பின்னை
மூழ்கின்ற உடல்நோய்க்கு மருந்து நாடி
முயல்வது வீண்தானே? நம் பிள்ளைகட்கு
ஏழ்வகையால் கல்விமுதற் பொருளைத் தேடி
எதற்காக இளைக்கின்றோம்? நமதென் றன்றோ?

18 தாய்மொழியை வளப்படுத்தும் நெறியை விட்டுத்
தகுதியில்லை எனப்பேசித் தவிக்க லாமோ ?
வாய்மைமிகு கருத்தொன்றை அவர்க்குச் சொல்வேன்
மக்களருஞ் சிந்தனைதான் மொழியே யன்றிக்
காய்கனிபோல் நீர் மழைபோல் விளைவதில்லை
கருத்துவளம் மொழிவளமாம் — கடன்மறந்து
நாய்களினும் கேடாகி அடிமை பூண்டு
நாறுமுடல் வளர்ப்பதுவோ நமது நாட்டம் ?

19 குளந்தேடி மழைபொழிவ தில்லைக் — கல்வி
குணம்பார்த்துப் பொருள்வருவ தில்லை; வீரர்
களம்பார்த்துப் போர்வருவ தில்லைக்; கட்டும்
கரைபார்த்து வெள்ளம்வர லில்லை; மக்கள்
வளம்வேண்டின் நீர்பாய்ச்ச, வருந்தித்தேட
வாய்க்குமெனல் உண்மையெனின் மொழியும் வாழ்விற்(கு)
உளவாகும் துறைதோறும் உதவவேண்டின்
உழைப்பூக்கம் மானம் உரம் வேண்டுமன்றே.

20 சிந்தித்தால் மொழிவளரும், செய்து செய்து
தேர்ந்துணர்ந்து பொருள்படைத்தால் வளரும் சொற்கள்
அந்திக்கண் நிலவினிலே அழகு மங்கை
அடியில்முடி வைத்திறைவன் பெயரைச் சொல்லி
தொந்திக்கே இரையூட்டித் தூங்கிக் கொண்டு
“சூழ்ந்தொளிரும் விஞ்ஞானக் கலையைக் கூற
செந்தமிழிற் சொற்களில்லை” என்று கூறிச்
செம்மாந்து தாய்பழித்துக் களிக்க லாமா ?

21 நிலவுக்குச் செல்லவழி சிந்தித் தோமா ?
நிறையுயிரின் பொறைகாணப் புகுந்தோ மாநாம் ?
ஒலிஉருவை வடிவாக்க முனைந்தோ மா ? வான்
ஒளிர்சுடரின் நிலைகாண விழைந்தோ மா ? நீர்
அலைகடலின் பயன்தெரிய ஆராய்ந் தோமா ?
ஆற்றல்அறி வியைளக்க முனைந்தோமா ? நாம்
மலிந்தபொருள் உள்ளஇடம் தேடிச் சென்று
மானமிழந் திரப்பதற்கே துள்ளு கின்றோம்.

22 அகத்தியனார் கடல்குடித்தார்—கடல்க டைந்து
அரன்நஞ்சும் அரியமிழ்தும் உண்டார், வானில்
திகழ்சுடர்விண் மீன்தொண்டு புரியக் கொண்டார்
திரிசங்கு சுவர்க்கத்தைப் படைத்தார் என்றும்;
புகுந்தழித்து மீள்கருவி கண்டார் என்றும்,
போய்ப்பறந்தார் விண்ணிலென்றும், புகன்றவெல்லாம்
நகைப்பதற்கே உரியவென இகழ்ந்தோம் அன்றி
நயந்தந்த கற்பனையை ஆராய்ந்தோமா ?

23 பறவைகண்டு வானூர்தி படைத்தாரல்லால்
பன்மொழியைக் கற்றதனல் இல்லை—கேட்கும்
முறையிழந்த செவியன், தொலை பேசி நன்கு
முகிழ்த்தோங்கும் ஒலிபெருக்கி உருவம் வாங்கி
செறியுநிழலியங்குபொறி யாவும் செய்தான்
'சீவன்சன்' அடுப்புலையில் ரயிலைக் கண்டான்
பொறித்துணையும் புலன்துணையும் அன்றி—ஆற்ருர்
புகழுமொழி மட்டுமிவை புரிவதில்லை.

24 பத்தியெனும் இறைப்பற்றை எழுப்ப இந்தப்
பழந்தமிழுக் காற்றலில்லை என்ருேர் அஞ்சப்
புத்தமிழ்த்தாய்ச் சித்திநிறை நால்வர் தந்தார்
பூந்தமிழின் திறங்கண்டு வியந்தார் மாற்ருர்.
மெத்தபெருங் காப்பியங்கள் விளைக்க வல்ல
மேன்மையில்லை என்றவர்கள் நாணுமாறு
முத்துநவ ரத்தினமாய்ப் பாலாத் தேனு
முக்கனியா இராமகதை கம்பன் தந்தான்.

25 "இசைவளனும் கூத்தியல்பும் இயம்ப வற்ருே?"
என்றவர்தம் தலைகவிழ இளங்கோ வந்தான்
திசைகமழும் எப்பொருளும் தமிழிற் செப்பித்
திருவள்ளுவன் தமிழ்ச்சீர் காட்டி நின்ருன்
வசைதவிர் நல் விசைபேசி உணர்ச்சி முற்றும்
வண்டமிழில் வடித்தெடுக்க இயலும், நல்ல
பசையொடரசியல் பாடக் கூடு மென்று
பாரதிதன் கவித்திறத்தாற் பறையறைந்தான்.

26 வேதம்போல் வாயுடையான் வெண்மையொளிர் உள்ளத்தான்
போதப் புரட்சி தரும் புந்தியான்—ஓதும்
தமிழ்த்தாய் அரியணையைச் சார்ந்தரசு கொள்ளச்
சமைத்தான்சொல் கேட்டல் தகவு.

27 பாரதத்துப் பன்னுன்கு மொழிகளுள்ளும்
பைந்தமிழ் தான் சுதந்திரப்பண் முதலிற் பாடி
வீரமுரசியம்பியது—வீறு கொண்டு
வெள்ளையனை வெருட்டியது பாரதிப்பா
ஆரியத்தால் வேறுபடா திணையாய் நிற்கும்
ஆண்மைபிற மொழிக்கில்லை எனவி யந்து
பாரதியார் புகழ்கின்ருர் தமிழ்த்தாய் வாழ்த்தில்
புண்பட்ட செந்தமிழ்த்தாய் மக்காள்! கேண்மின்!

28 "ஆன்ற மொழிகளி னுள்ளே—உயர்
ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்"
வான்றமிழ் ஆற்றலைப் பேசும்—கவி
வாய்மை மொழியினைக் காணுங்கள்மேலும்.

ஆத்திரங் கொண்ட கவிஞன்—நமக்
காணித்தரமாகச் சொல்வதைப் பாரீர்!
"நேத்திரங் கெட்டவன் காலன்—தன் முன்
நேர்ந்ததனைத்தும் துடைத்துமுடித்தான்
புத்தம்புதிய கலைகள்—பஞ்ச
பூதச்செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்தவளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினிலில்லை.
சொல்லவுங் கூடுவதில்லை—அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
மேற்குமொழிகள் புவிமிசையோங்கும்
என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ
இந்தவ சைஎனக் கெய்திடலாமோ?
சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்குசேர்ப்பீர்,"

29 காணுங்கள் பாரதிகூற்றைக்—கவி
காறியுமிழ்வதைக் கண்டுளம்நாணும்
பேணுந் திறங்குறைந்தோம் நாம்—இனிப்
பெற்றவள் வாழ்வு பிறங்கிடச் செய்வோம்.

30 "செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"
எந்தப் புலவனிந்நாட்டினிலே—தமிழ்
ஏற்றத்தைக் காட்டினன் பாட்டினிலே?

தாய்மொழி என்று நினைக்கையிலே—உளம்
தாமரை வாவிபோ லாகுதம்மா!
வாய்மொழி யொன்றை உரைக் கையிலே—இசை
வண்ண மெலாஞ் செவி சேருதம்மா!

அன்னைமொழி என்று சொல்லிடிலோ—நெஞ்சம்
ஆனந்தவெள்ளத்தில் மூழ்குதம்மா!
பின்னை ஒருசொல் லியம்பிடிலோ—உயிர்ப்
பேழையிலின்பம் நிறையுதம்மா!

31 தீயே நிகர்த்தொளி வீசுந் தமிழ்க்கவி செய்வனெனக்
காயே நிகர்த்தவர் உள்ளங் கனியக் கவிதைசெய்த
சேயே நிகர்தமிழ்ப் பாரதி போற்றத் திகழுதமிழ்த்
தாயே உலக மொழிகளின் தாயென்ப சான்றவரே.

32 தேனொத்த செந்தமிழ் ஆற்றலும் சீர்த்தியும்
தேர்ந்து தெளிந் துணர்ந்தே
மானத்தைவிட்டு மயங்கிப் பிறமொழி
வாழ்வு சிறந்த தென்னும்

கூனல்தமிழர் நிமிர்ந்து திறம்பெற
கூறுதல் கேளீரே!
"வான மளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழி"யென்ருன்

33 "சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே—அதைத்
தொழுதுபடித்திடடி பாப்பா"—எனக்
கல்லிற் செதுக்கி வைத்த கவியால்—தமிழ்க்
கடவுட் சிறப்பை தெளிவித்தான்.

34 "தேவர் வருகவென்று சொல்வதோ—ஒரு
செம்மைத் தமிழ்மொழியை நாட்டினல்
ஆவலறிந்துவரு வீர்கொலோ"—என
ஆற்றல் விளங்கஉரை செய்தனன்.
"அமிழ்தம் அமிழ்தம் என்று கூறுவோம்—நித்தம்
அனலேப் பணிந்துமலர் தூவுவோம்
தமிழிற் பழமறையைப் பாடுவோம்—என்றும்
தன்மை பெருமை புகழ் பாடுவோம்"

35 கண்டை நிகர்த்த கவிகோடிசெய்த கவிச்சரபம்
தண்டம் புரிந்து விநாயகன் தாளிடைச் சாற்றுகின்ருன்
"பண்டைச்சிறுமைகள் போக்கியென் நாவிற் பழுத்தசுவை
தெண்டமிழ்ப் பாட லொருகோடி மேவிடச் செய்குவையே"

36 நேசமுள்ள செந்தமிழ்த்தாய் நெஞ்சறிந்த பாரதியார்!
தேசமுத்து மாரியிடம் செப்புவதைக் கேளுங்கள்!

"சத்தியென்று நேரமெல்லாம் தமிழ்க்கவிதை பாடி
பத்தியுடன் போற்றி நின்ருல் பயமனைத்துந் தீரும்"
முத்திபெறத் தமிழ்மொழியே மூலமென ஆய்ந்து
மூதறிஞன் கூறியபின் வழக்குமுறை உண்டோ?

37 நாமமிகு வடமொழியோ டாங்கிலமும்
பிரான்சுமிக நாடிக் கற்று
சேமமிகு தெலுங்குடனே கன்னடமும்
கேரளமும் தெளித்த நல்லோன்
"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்குங் காணேம்"
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவவகை செய்தல் வேண்டும்"

38 என்றெடுத்துப் புகல்கின்ருன் ஏழுமொழி
கற்றறிந்த இயல்பி னுலே;
ஒன்றெடுத்து முழுதுமதைப் பயிலாத
ஓதியமர உலுத்தர் சில்லோர்

கன்றெடுத்துப் பால்கறக்கக் கச்சைகட்டித்
திரிகின்றார், காணின் மாற்றார்
மன்றெழுந்து சிரியாரோ? மானந்தான்
வேண்டாவோ? மாக்க ளாநாம்?

39 மாறுகூறும் மானமிலார்க்கிங் கே
வாளெடுத்துப் பேசுகின்றார் கேள் கேள் கேள்!
வேறுவேறு பாஷைகள் கற்பாய் நீ
வீட்டுவார்த்தை கற்கிலாய்நீ போ போ போ!

40 தேனமுதின் மேலுமருட் சுவைபயக்கும்
ஓசையெனத் தெளியச் சொல்லி
கானமுறு சொற்களுளே உயர்வு தமிழ்ச்
சொல்லென்று கண்டிசைத்து
வானளவும் பொருள்யாவும் அளந்ததுசெந்
தமிழ்என்னும் வாய்மை கூறி
மானமுற வாழ்துமெனின் வாழியசெந்
தமிழெனவான் கவிதை தந்தான்.

41 பாரதியின் தமிழ்ப்பற்றில் நூற்றிலொரு
பங்கேனும் பதிந்திருந்தால்
பாரினிடைச் செந்தமிழ்த்தாய் பல்கலைக்கும்
அரசாகிப்; பகை கொண்டோரும்
சீரதிகம் எனஒப்பிச் சிரந்தாழ்த்தி
நிற்கசிறந் திருப்பாள்; தெய்வ
வேரதிகம் உற்றதனல் வீணர்களைப்
பெற்றபின்னும் வீயாதுள்ளாள்.

42 மக்களுணர் விருக்கும்வரை மொழியிருக்கும்
வாயிருக்கும் வரையும்மொழி வளர்ந்துவாழும்
தொக்கசுவை யுள்ளமட்டும் சொற்பிழம்பாய்த்
தோன்றியசெந் தமிழ்ஒளிரும்—தோய்ந்த காதல்
மிக்கநிலை திகழும்வரை மொழிவிளங்கும்
விளைபசியும் கலையுணர்வும் வாழ்நாள்மட்டும்
ஒக்கவெழுந் தொலியுணர்வாய் உறவாய்நந்தம்
உயிரோடு கலந்து மொழித்தெய்வம் வாழும்.

நன்றியுரை:—

43 மருந்தெனச்சில் கவியிசைக்க வாய்ப்பளித்து
விருந்துதந்த பேரவையீர்! மேன்மை சான்றீர்
பெருந்தகவால் யானிங்கே பிதற்றிநின்ற
அருந்தமிழைச் செவிமடுத்த அவையீர்! நன்றி!

16—8—62-ல் தஞ்சை, வ. உ. சி. இலக்கியப் பேரவையின் சார்பில் நிகழ்ந்த பாரதி விழாக் கவியரங்கத்தில் பாடப்பெற்றவை.

அது — இது

(K. சோமசுந்தரம் பிள்ளை B. A., B. L., தஞ்சை.)

"இல்லை உண்டென்றெவர் பக்கமாயினும்
சொல்லவோ அறியாத தொழும்பன் யான்
செல்ல வேறொரு திக்கறியே னெலாம்
வல்ல நீ யெனை வாழ்விக்க வேண்டுமே"

என்ற தாயுமானச் செல்வரது திருப்பாட்டின் வழி, இறைவனை முன்னிட்டு மக்கள் அது (இல்லை) இது (உண்டு) என வாதாடி இடர்ப்பட்டு நிற்கும் நிலை தோன்றிடினும், 'இல்லை யில்லை யென்னின் ஒன்றுமில்லாததல்ல; என்று முள்ள இயற்கையாகி' என வரும் அவரது திருவாக்கான், இல்லது என்பது இறையின் இன்மையைச் சுட்டிய தன்றென்பதன் வழி, தெளியாரைத் தெளிய வைத்தநுட்பம், அறிவியலறிஞர் உலகை, இன்புறுத்துவதாகும். இறை, உயிர், உலகு என்ற இம்மூன்றினைப் பற்றிய தொடர்புகளையும் ஒட்டிய உண்மைகளையும் ஆய்ந்துணரப்பட்ட விஞ்ஞானத்தின் அடிப் படை தத்துவம், சைவ சித்தாந்தத்தைச் சார்ந்ததாக, மெஞ்ஞானம் முற்றிய மேன்மையர், மிக நுட்பம் செறிந்து திகழ வைத்தும் அது என்பதை இது தான் எனச்சுட்டிக் காட்டி தெளிவுற வரையறுத்து ரைத்தல் எளிதில் இயலாததொரு இயல்புடைத்தாயிற்று. ராபர்ட் பிரௌனிங் (Robert Browning)

"புலன்களால் என்னைப் போன்ற மானிடரே
பொருந்துவதில்லை. புகலுமெம்மொழிக்கு
வெறுப்பதை விழைந்தும் விழைந்ததை வெறுத்தும்
எள்ளியுரைத்தே ஏசுவர் என்னை
அதுவெனக்காட்டின் இதுவெனமொழிவர்
இடைவிடா தெண்ணி இடர்ப்படுகின்றேம்
எவரை நம்பி ஏற்றம் பெறுவேன்!"

என உணர்ச்சி வுந்துமாறு தன் மன அரங்கில் தோன்றியதைக் கூறி தனித்து, இறைப்பொருளினை நுகர முற்பட்டது, ஈண்டு உணரற் பாற்று.

தோற்றமும் உண்மையும் வேறு பட்டு நிற்கும், இப்பரந்த உலகின்கண் தோன்றுதல் பொன்றுதலின்றி என்றும் உள்ளது எதுவோ, அதுவே மெய்ப்பொருள். பொருளாவது உண்மை. உண்மை என்பது சார்பகன்ற மெய்த்தன்மை. இதுவே உள்ளது என்க. 'ஓர்த்துள்ளம் உள்ளதுணரின் ஒரு தலையாப், பேர்த் துள்ள வேண்டாப் பிறப்பு' என்ற குறள் இக்கருத்திற்கு அரண் செய்யும். 'பொருண்மை சுட்டலாவது' உண்மை சுட்டல் என்றார்

சேனுவரையரும். இத்தகைய பொருள் உலகெங்கணும் பரவியுள்ளது. உடலுக்கு உயிர் இருப்பது போன்று உயிருக்கும் உயிரான ஓர் உயர் பொருள் இருத்தல் வேண்டுமென்பதும் பொருந்தும்.

எவ்வகை யுயிர்க்கும் உயிரெனவிருக்கும் இயல்புடையதை, எக்காலத்தும் எதிலும் கருதிக்காண வேண்டுவது அறிவின் முடிபு. 'சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு' என்ருர் வள்ளுவர். செம்பொருட்டுணிவே! சீருடைக்கழலே! சிவபெருமானே' என மொழிந்தார் ஆளுடைய அடிகளும். ஆகவே செம்பொருளுடன் கலந்திருக்கும் அடைவே அறிவின் அந்தமாயிற் றென்னலாம்.

வாழ்க்கையினை நெறிப்படுத்துவதற்குரிய அறிவு கொண்டு வாழும் உயிர்களுக்கு பெருமிதம் அளிப்பது இறை உறையும் அன்னவர்களது இனிய உள்ளமே. உள்ளமே இறைவனது விளை நிலம். இறைபால் உள்ளம் உருதவர் உயரார். உய்ய, உளந்தோறும் நிற்கும் மெய்ப்பொருளின் அருளின்பத்தைப் பெறுவதில் ஈடுபடுபவர், தமது புலன்களுக்கு எட்டாத நிறைவினை அது என்பர். இத்தகைய நிறைவினை உருவாக்குவது மனனே. அது தன்னறிவிற் நிற்குங் காலை, மாசறு தூயது. மெய்ந்நூலார் தொல்காப்பியனுர் அறிவும் புலனும் வேறுபட நிறீஇ' என்றதினுன் ஐம்பொறி அறிவுகளைப் புலனென்றும், மனத்தின் மெய்ம்மையான உணர்வினை, அறிவு என வேறுபடுத்தி உணர்தல் வேண்டுமென்பது இங்கே உணரத்தக்கது. மனனல் அறியும் பொருள் 'அது' என்பதாகும். கண்ணினைக் கண் பார்க்கலாகாதது போல் அறியும் பொருள் அறியப்படுவதாகாது. எனவே அறியும் பொருள், வெறும் அறிவின் ஆற்றலைக்கொண்டு அறியப்படாத 'அது' தான். இந்த 'அது' நீ ஆகிருய் என ஓலமிட்டு அலறி அடங்கும் மறைகளின் கருத்தை, சித்தாந்தத் துணிவினர் 'அதுவானல் அதுவாவார். அதுவே சொல்லும்' எனப் பகர்வார். ஈண்டு 'அது' என்பது இறைவனைக்குறிக்கும். 'நீ' என்பது 'உயிர்.' அதுவாதலுக்குரிய சாதனத்தை, அருள் விளக்கத்தின் வழி காணுவது அறிவுடைமை; இதற்கு இறைவன் அருளும் விளக்கமான வகையை இறை யுணர்விலே படிந்த அடியார் வாழ்விற் காணத்தகும். அளவறி யொண்ணுத இறையின் உண்மைத் தன்மைக்கு, அறிவிற் சிறியாரும் உணர்ந்து இன்புறுமாறு, ஓர் திருவுரு கொடுத்த பெருந்துறைப் பிள்ளையின் சிந்தையில் எழும் அருளொளியின் தத்துவத்தை ஆயின், விளங்காத உண்மை எளிதில் பற்றுக் கோடாக விளங்கும். இறையின் தன்மையினை விளக்கும் ஓர் உருவினைக்காணின், மனம் தூய நினைவினை எங்கணும் உண்டாக்கி அதன்பால் செலல், இயற்கையே. எனவே கடவுளுணர்விற்கே வாழுமுயிர்களை அன்பராக்கி, வழி நடாத்தும் வரசகத்தைக் காண்குவம். அமுத மூறிய மணிவாசகரது திருவாசகம் இறையுணர் வால் எழுந்த ஒளியறிவாகும். இஃதொன்றே மக்களது அறிவை ஒளிவலியுடையதாக்கி, கடவுணிலை யுணர்ச்சியிற் றலைப்படுத்தும் பான்மையுடன் பேரின்பப் பெருவாழ்விலுறுத்தும்.

கண்ணுற் காணப்படாமல் மறை பொருளாயிருந்து உலகத்தை ஆக்கி இயக்கும் முதற் பொருள் யாவரும் அறிவரியாய் நிற்ப தென்பதும், அனுபவ அறிவு வாயிலான் உணரத்தக்க அதனைக் கண்டறிவாரைக்கேட்டறியோம் என்றார் பெருந்துறைப் பிள்ளை. அப் பொருள் 'கண் முதற் புலனாற் காட்சியுமில்லோன்' (திரு அண்டப் பகுதி) 'மாற்ற மனங் கழிய நின்ற மறையோனே' (சிவ புராணம்) என்பனவற்றால் புலனாலும் கலனாலும் காண்டற்கரிய பொருள் என பெறப்படும். அப்பொருளை இப்பெற்றியதெனக்கூற ஒண்ணாமையின் சேய்மைச் சுட்டாகிய 'அது' என்ற சொல்லால்

'அது பழச்சுவை யென அமுதென அறிதற் (கு)
அரிதென எளிதென அமரரும் அறியார்
இது அவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டு கொண்டிங்கெழுந்தருளும்"

(திருப்பள்ளி யெழுச்சி) என உணர்வு பெருகல் வேண்டி இங்ஙனம் பெருந்துறைப் பிள்ளை உய்த்துணர வைத்தார். இத் தெள்ளமுத அடிகளின் பொருளாற்றலைக் காண்குவம். இறைவன் பழத்தின் சுவை போன்று நிறைவான இன்பப் பொருள். அமுது பிறவா நெறி தரும் தன்மைத்து. உண்ணப்படும் உணவுமாயது. இன் சுவைத்தாதலின் இனியது. இம்மூவகைப்பண்புகளும் இறைவற் குளவாதல் பற்றி இறைவன் அமுதாயிற்று. அவன் காட்சி, கருதல், உரையென்னும் அளவைகளால் அறிதற்கரியவன். அறிவு, விழைவு, செயல் என்ற மூவகைப் பண்புகளும் இயல்பாகவுடைய எல்லா வுயிர்களையும் போன்று, இறைவனுக்கும அறிவாதி மூன்றும் அளவிலாத் தகையனவாய் சிறக்கும் வகையில் உண்டு. அறிவு முதலிய மூன்றினையும் ஒருயிர் இறைபாற் செலுத்தவே, அவனருளால், இவ்வுயிர், தகைமையுடன் எளிதாய் அவனாவது திண்ணம். ஆகவே அறிவிச்சை செயல் என்ற முப்பண்புகளை ஒருநெறிப்படுத்தி, இறைவனைக் குறிக்கொண்டொழுகி, அறிவு முதலாய மூன்றினையும் சிதறாது துய்த்தல் வேண்டுமென்பது ஈண்டு துலங்கிற்று.

இயற்கையறிவினனை அறிதற்கு, கலனும் புலனும் போதா தாகலின், அம்மூதறிவாளனை அவனருள் மெய்யுணர்வினால் நுகர்தல் கூடு மென்பது 'ஒட்டியுணரப்படுவான்' என்ற குறிப்பில் புலப்படுக் கப்பட்டுள்ளது. இறைவன் நுகருணர்வுக்குரியோனாதலான், அவன் பிரிப்பின்றி நின்றருளும் அவன் தன் முற்றுணர்வினால் உணரலா மாதலின், அம் முதல்வனை 'அவனருளே கண்ணாகக் காணுதல்' வேண்டும். அறிவரிய 'அது' மணிவாசகரது கண்களுக்கு அகத் தாகியும் அறியும் பொருளாகியும் நிற்கவே, அறியப்படும் பொருளாகிய 'இது', அது என்பதினுடைய தோற்றமாகவே வயங்கியது. நமது புலன்களுக்கு எட்டாத நிறைவாகிய 'அது' பெருந்துறைப்பிள்ளைக்கு குறைவிலா நிறைவாகி நின்றுளது.

(குறைவிலா நிறைவே! — கோயிற்றிருப்பதிகம்) புலன்களால் அறியக்கூடிய எல்லா இயற்கைப் பொருள்களில் 'அது' என்றதின் தன்மை ஊடுருவிச் செல்கின்றதை உணர்கின்ற வழி 'அது', அங்கு இங்கு எனுதவாறு நோக்கு மிடந்தோறும் எங்கும் நீக்கமற நின்று எல்லாமாய் நிறைந்துள்ளது புலனுகும். ஆகவே எங்கும் எல்லா மாயிருப்பவன் இறைவனையே 'அது' என்க, கால எல்லையைக் கடந்து நிற்கும் இறைவனை 'உம்பரும் அறியா ஒருவனே' (வாழாப் பத்து), ஒப்பில் ஒருத்தனே (திருச்சதகம்) 'என்னை ஆளுடைய ஒருவ போற்றி' (திருச்சதகம்). 'ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி' (போற்றித்திருவகவல்) என வாயார, உளம் மகிழ பெருந்துறைப் பிள்ளை இறைவனது ஒப்பற்றத் தன்மையினைப் புகழ்வாராயினர் மற்றும்.

> "நிலம் நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
> புலனுய மைந்தனே டெண்வகையாய்ப் புணர்ந்து நின்ருன்
> உலகேழெனத் திசைபத்தெனத் தான் ஒருவனுமே
> பலவாகி நின்றவா தோணேக்கம் ஆடாமோ"

என அடியார்கள் நடுவுள் தானும் அவர்களைப் போன்று தோள் கொட்டி ஆனந்தக் களிப்புறுவார். மற்றும் 'அவன் எனை ஆட் கொண்டருளினன் காண்க' என்று திருவாய் மலர்ந்தருளினர். பின்னர் இறைவனது தொன்மைக் கோலமே நோக்கி

> "குவளைக் கண்ணிக் கூறன் காண்க
> அவளும் தானும் உடனே காண்க"

என ஆணும் பெண்ணும் வேறுருவின் ஓருடம்பாய்த்திகழ்வதை மெச்சுவார் 'ஒருவர் என்னும் பெயர் நிலைக்கிளவி, இருபாற்கும் உரித்தே தெரியுங்காலை' என்ற தொல்காப்பியனுர் விதிப்படி 'ஒருவர்' என்ற இயற் சொல்லால் கூற ஒருப்பட்டு உலகர் முன்னே,

> "அருபரத் தொருவன் அவனியில் வந்து
> குருபரன் ஆகி அருளிய பெருமையைச்
> சிறுமை யென் றிகழாதே"

எனவும் எச்சரித்து, தான் கண்ட காட்சித் திறனையே, நுட்பமாக எண்ணி, ஐயமறவுணர்ந்து துணிந்து, உள்ளதை உள்ளவாறு தெளிவுடன் நேர்படக் கூறியருளினுர்.

இறைவனது பெருமை நிலையினையும், நுண்மை நிலையினையும், திருவண்டப்பகுதியில், பெருந்துறைப்பிள்ளை, அறிவு நெறியில் விளக்குங்கால், இறைவனது ஆட்சியில் நிகழும் செப்பமிக்க இயற்கை யுண்மையியல்பினையும், இயக்க முறையின் நேர்மை யினையும், கூர்த்தமதியால் உய்த்துணர்ந்து, நுண்மாணுழை புலமாகிய உட்கருவியாற் செய்யுளுலகத்திற்கு கொண்டு வந்து எடுத்தோதிய வனப்பு வியக்கற்பாலது. இவ்வியக்க முறைமையின் போக்கு கணிதத்தை யொட்டிய காரணக்காரியத் தொடர்புடன் திட்ப

நுட்ப அமைவொடு சீர்மையாகவும் நேர்மையாகவும் நிகழ்வது மணிவாசகருக்குத் தெளியப் படவே, இறைவன் தனக்கிணை யில்லாது தாக்கற்ற தனி முதல்வராய கணக்கர் என உளங்கொண்டு, அவர், கடந்து நின்றானை எங்குங் கண்டு நின்றார். மற்றும் கணிதத்தின் உண்மைகள்தான் மண்ணுலகங்களாக நின்று தோற்றமளிக்கின்றதை உன்ன உன்ன, உட்புறக்கருவிகளுக்கும் அப்பாற்பட்ட இறையாற்றலின் நிலையினைக் காண வாய்ப்புப்பெற்றார். அவர் தம் நெஞ்சம் சொற்கடந்த ஒன்றில் திளைக்க, மெய்யுணர்வு கைவரப்பெற்று மதவலிமிக்க பெருந்துறை முனிவர் தன்னையும் மறந்து நின்றார்,

"கயல் மாண்ட கண்ணிதன் பங்கன் எனைக்கலந்தாண்டலுமே
அயல் மாண் டருவினைச் சுற்றமும் மாண் டவனியின்மேல்
மயல் மாண்டு மற்றுள்ள வாசகம் மாண் டென்னுடைய
செயல் மாண்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ"

என்ற அவரது வாக்கினை நோக்குக.

கண் முதலிய அறிவுக் கருவிகளாற் காண்டற்கியலாத மிகச் சிறிய நுண்துகிளினையும் கணக்கிட்டுக கூறும் கணிதத்தின் இயல்பினை ஆயப்புகும் மணிவாசகருக்கு அண்ட கோளங்களின் தோற்றங்களும், ஆங்கு நிகழும் வியத்தகு அருஞ்செயல்களும் ஏனைய யாவும் வளப்பெருங்காட்சியாகவே வயங்கவே, அவர் காட்சிப்படி, தன் அறிவியல் திறனையும் உபயோகப்படுத்த எண்களைக் குறிக்கோளாகக் கொள்வது மிகவும் இயைபுடைத்தெனக் கருதி, அண்டம் அணுப்போல் சிறியதாக இறைவன் பெரியோனுதலை,

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக்(கு) ஒன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் றுன்னணுப் புரையச்
சிறியவாகப் பெரியோன் தெரியின்"

என நம்மனோர்க்குப் புலப்படுத்தி, தன் கலையறிவுடன் கடவுளறிவும் கருணையுள்ளமும், எளிதிற் புலனாக வைத்தார், மற்றும் இறைவன் 'ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதி' என்றும்

"சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற்கரிய
ஆதியே நடுவே அந்தமே"

என்றும், ஏகன் அநேகன்' என்றும் புகன்று அவனே ஒன்றாக முடிந்த பொருளாயுள்ளான் என மொழிவார். இறைவனது ஒளி பரப்பே அண்டங்களையும் ஆக்கிய தென்பதும், ஆக்கிய பின்னும்

ஓம்பியும் வருவதென்பதையும் நம்மனோர்க்கு உணர்த்த 'சோதியாய்த் தோன்றும் உருவமே' எனக்கூறி, வெளிப்பட்டுத்தானே விளங்கித் தோன்றும் இறைத்தன்மையினை நுண்மையாக அறிவுறுத்தினர். 'ஏகன்' என்ற அளவில் நில்லாது 'அநேகன்' என அடிகள் உரைப்பதினால், எல்லாம் வல்ல ஒருவன், தானே தானாய், தானே அனைத்துமாய் உள்ளான் என்பதும், அவ்வொருவன் எண்ணிலியாய் நின்று பல உலகங்களாயும், பல்லுலகியற் பொருள்களாயும், கலப்பினால் ஒன்றாயும், தன்மையால் வேறாயும் திகழ, பல்லுயிர்களாகவும் தோன்றுகின்றான் என்பதும் விளக்கமுற பெறப்பட்டது. இத்தகைய எல்லையற்ற தன்மையினை 'எண்ணிலி' என்ற சொல் குறிப்பதினால், இதனைச்சத்தான ஏகம் என்றுணர்க. 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 0 இந்த இலக்கங்கள் தனியாகவும் அல்லது சேர்ந்தும் வந்து எண்கள் உண்டாகின்றன என்பது அறிஞர் அறிவர். இந்த எண்ணிக்கையிலே காணப்படுவது அசத்தான ஏகம் என்பது கூறாமலே அமையும்.

இனி எண்ணிலி என்பதைப் பற்றி கணித முறைப்படி விளக்குவாம். இயன் முறை தெரிக்கும் கணிதத்தின் படி, எந்த எண்ணுடன் ஒன்றுமில்லாததாகிய '0' என்ற எண்ணைக் கூட்டினாலும், கழித்தாலும், கூட்டு எண்ணின் மதிப்பும், கழித்த எண்ணின் மதிப்பும் முறையே அதிகமாவதுமில்லை. குறைவதுமில்லை. எந்த எண்ணை '0' என்ற எண்ணினால் பெருக்கின், பெருக்குத்தொகை ஒன்றுமில்லாத '0' என்ற எண்ணேயாகும். ஆனால் எந்த எண்ணிக்கையையாவது ஒன்றுமிலாத '0' என்ற எண்ணால் வகுக்குங்கால் என்னவாகின்றதெனக் காண்குவம்.

$$\frac{10}{0}=?,\quad \frac{10}{5}=2,\quad \frac{10}{2}=5,\quad \frac{10}{1}=10,\quad \frac{10}{\frac{1}{2}}=20,\quad \frac{10}{\frac{1}{4}}=40,$$

$$\frac{10}{1/10}=100,\quad \frac{10}{1/100}=1000,\quad \frac{10}{1/1000}=10000,$$ இதனின்று

புலப்படுவது யாதெனின், வகுக்கும் எண், தன் மதிப்பில் குறையக் குறைய, ஈவின் மதிப்பு பெருகிக்கொண்டே வருகிறது. வகுக்கும் எண் '0' என்ற எண்ணாகில், ஈவும் எல்லையற்ற தன்மையினை எய்துகிறது, அதுதான் (Infinite) எண்ணிலி என்பதாகும்.

எண்ணிலியுடன் எவ்வளவு எண்ணிக்கைகளைக்கூட்டினாலும், கழித்தாலும், மதிப்பு எண்ணிலியாகத்தானிருக்கும். எண்ணிலி என்பதை உவமை முகத்தான் நன்குணர்த்த, நெடுங்கடலே ஏற்புடை எடுத்துக்காட்டாகும். 'மழை கொளக் குறையாது புனல் மிக மிகாது கரை பொருதிரங்கு முந்நீர்' எனவரும் மதுரைக் காஞ்சி அடிகளில் கடல் எனது முந்நீர் என மாங்குடி மருதனர் கணிதமுறைப்படி கூறிய நுட்பத்தினை நன்கு ஓர்ந்து, எண்ணிலிக்கு சிறப்புடை எடுத்துக் காட்டு மிகுதலும் குறைதலுமில்லா 'கரை பொரு திரங்கு முந்நீர்' எனக் கொள்க.

எண்ணிலியின் பண்பை தன் பண்பாகவுடைய இறைவனை, பெருந்துறைப்பிள்ளை, 'ஆதியுமந்தமுமாயினர்' (திருப் பொற் சுண்ணம்) என்பர். அந்தம் என்றால் முடிவானது என்பதாகும். எனவே எந்தப் பொருளில் படைப்பெல்லாம் தோன்றி முடி வாகிறதோ, அதுவே ஆதிப்பொருள். ஆறுகள் எந்த அலைகடலில் மருவிக் கலக்குமோ, அந்தக் கடலாவியே மழை நீராகி ஆருய்ப் பெருகும். அது போன்று அண்ட பிண்ட சராசரங்கள் யாவும் இறை யருளில் தோன்றி பேரூழியின் முடிவில் ஊழிக்கதிரோனிடம் ஒடுங்கும்.

'சென்று சென்றணுவாய்த்தேய்ந்து தேய்ந்தொன்றாம்
என்றிறை யியற்கை இயம்புதல் தகுமே' என்ற

சங்கற்ப நிராகரணம் இதற்கு சான்று பகருதல் கொண்டு விளக்கங் காண்க. ஒடுங்கின அண்ட கோளங்கள் யாவும் மீண்டும், புவனங் கடந்தவனிடமிருந்து தோன்றிடினும், இறை தன் நிலையில் பெருகு வதுமில்லை, குறைவது மில்லை, எது போதும் குறைவிலா நிறை வுடன் உள்ளான், அத்தகைய நிறைவுதான் முன் கணக்கின் கண் ஈவாக வந்த (Infinite) எண்ணிலியாகிய 'அது'. 'அது' என்பது தான் முதற்பொருளாகிய இறைவன் என்ற துணிபு பின்னும் வலி யுறுவதாயிற்று.

எண்ணிலியால் பெருக்கப்படும் ஒன்றுமில்லாததாகிய '0' என்ற எண்ணும் ஆழ்ந்து ஆயுமிடத்து ஒன்றுமல்லாத சூன்யமுமன்று. அந்த '0' எண், காட்சி அளவானும், கருதல் அளவையானும் என்றும் கலந்து நின்று, ஐம்பொறி காட்சிக்கு அப்பாற்பட்டு உளக் காட்சிக்கெளிதாய் மிளிர்ந்து இருப்பது. சூன்யத்திற்கு கணிதத்தில் இடமின்று, பெருந்துறைப்பிள்ளை, திருப்பாண்டிப்பதிகத்தின்கண், இறைவரை, 'ஒருவரை ஒன்றுமில்லாதவரை' என்பதால், மனமொழி மெய்களால்அடைதற்கரியதாய்அருவுருவமாய் எங்கும்ஒன்றுபோன்று விளங்கும், ஒருவர், ஒன்றுமில்லாத பாழ் அல்லது சூன்யமன்று. அவர் 'எண்ணிறந்தெல்லை யிலாதவர்'. எண்ணுக்குள் அடங்கியும் அடங்காமலும் அத்துவிதமாக யிருப்பவர். விரிநீர் வியனுலகின் கண். கூர்ந்து சிந்திக்கின், பாழ் என்ற ஒருபொருளுமில்லை யென்பது ஒவ்வும். பொருளெல்லாம் கட் புலனாவது; கருத்துப் புலனாவது; கலப்பாலும் புலனாவது. உலகம் உள்ள பொருள்: கட் புலனாவது. உலகையும் உலகுயிர்களையும் இயக்கும் முதல்வன் இறைவன். வாழுமுயிர்களின் நெஞ்சுகொள் கருத்துக்குப் புலனாவது அன்பு, அறிவு ஆற்றல் என்பவைகளே. அன்பின் ஆர்வவீற்றால் அருள் விளங்கும். அருளின் முதிர்வால் அறிவு துலங்கும். அறிவின் தெளிவின் வழி இறைவனை எய்தும் ஆற்றலின் ஒளிமிகும். இறையும் உயிர்களும் இரண்டறக் கலந்தின்புறுவது கலப்பாற் புலனாவது. இப்பேரின்பக் கலப்பால் 'இது' என்னும் உயிர் அப்பும் உப்பும் போன்று 'அது' என்ற இறையில் உறைந்து ஒன்றாகி நிற்கும்.

'புணர்ச்சியுள் ஆயிழை மேல் அன்புபோல்
உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்க வல்லார்க்கு
உணர்ச்சியில்லாது குலாவி உலாவி
அணைத்தலும் இன்பமது அது இது ஆமே!

எனத் திருமூலர் தெளிவுபட உரைத்தது உணரற்பாற்று.

ஒன்றும் ஒன்றும் ஒன்றுமே உலகனைத்து மொன்றுமே
அன்றும் இன்றும் ஒன்றுமே அனாதியான தொன்றுமே'

என்ற சிவசித்தர் வாக்கும் ஈண்டு சிந்தித்தற்குரியது.

எல்லாத் தோற்றப் பொருள்களோடு தோய்ந்தும் தோயாது, மறைந்து நின்றும், இயல்பாகவே பாசங்களினீங்கியோனாகி நின்றும், பாசங்கள் காரணமாக எய்தநின்ற இன்ப துன்பங்களை, இயல்பின் நீங்கி, அழிவின்றி நின்றதோர் ஆனந்த ஆற்றலுடையனாய் விளங்குகின்ற இறைவனை 'இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே' (சிவபுராணம்) என ஆளுடைய அடிகள் பொருணயம் நினைந்தருளியது இன்புறத்தக்கது. ஈண்டு அடிகள் இறைவனை 'இலான்' என்ற ஒருமைச்சொல்லால், அவ்வொரு முதல்வனையன்றி வேறில்லை என்றுணர்த்தி, ஒன்றுமிலார் என்று அவரதியல்பின் நுட்பத்தைத் தெளிவுபடுத்துவாராயினர். காணப்படும் பொருள்களும் கருதப்படும் பொருள்களும் இறைவனாஎன ஆயும்வழி அவை ஒவ்வொன்றினையும் இறைவனன்று என்று கழிக்கப்படுங்காலை இறைவனல்லாப் பொருளும் வேறில்லை என்ற உண்மை புலப்படுதலால் இறைவன் உள்பொருள் என

'ஒன்று நீயல்லை அன்றி யொன்றில்லை
யாருன்னை அறியகிற்பாரே'

எனப் பெருந்துறைப் பிள்ளை அருளியதும் இவண் காண்க.

இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீயாகத் தோன்றி

என்றார் நற்றமிழ்ப் புலவர் நக்கீரரும்.

இல்லென வேண்டா இறையவர் தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின்றானே!

என்பது திருமந்திரம். எனவே 'இல்லை', 'இலான்', 'இல்லது' என்பவை இறையின்மையினைக் குறிக்காது. அன்மையினைத் தெரிக்கும் பான்மையினைக்கண்டு பயன்கொள்க. மற்றும் பொதுவாக விரவிநிற்கும் பொருள் வேறாக நிற்கும் நிலையின்கண், 'அல்லை' எனச் சுட்டிக்கூறுதல் உலகியல்பு, அம்முறையிலும், இறை எப்பொருளிலும் கலந்தும் வேறாகிநிற்கும் நிலைமையினை உணர்த்த, மெய்யுணர்வுச் செல்வராய பரஞ்சோதியார்

'அல்லையீது அல்லையீது எனமறைகளும் அன்மைச்
சொல்லினுல் துதித் திளைக்குமிச் சுந்தரன்'

எனக் கிளர்ச்சியும் இன்பும்மிக்கு விளங்கப் பகர்வாராயினர்.

எண்ணிலியின் தன்மையிலும், இறைவனது தன்மையிலும் ஒப்பு நோக்கியபின், மீண்டும் முன்னர் கூறப்பட்ட கணித எடுத்துக் காட்டுகளின் வழி பிறிதொரு உண்மையும் புலப்படுவதால் அதனையும் ஈண்டுக் காண்குவம். முன் கணக்கின்கண் கண்டபடி பத்து என்ற எண்ணை ஐந்தால் வகுத்தால் ($\frac{10}{5}=2$) ஈவு இரண்டு ஆகிறது. மாற்றுப்பெருக்கல் வழி, அந்த ஈவினை ஐந்தால் பெருக்கின், வகுக்கப் படும் எண் பத்தாகிறது. இதுபோது ($\frac{10}{0}$ = எண்ணிலி $\frac{100}{0}$ = எண்ணிலி, $\frac{1000}{0}$ = எண்ணிலி) மாற்றுப் பெருக்கல் முறைப்படி, ஈவான எண்ணிலியால், ஒன்றுமில்லாத '0' என்ற எண்ணைப் பெருக்கினுல். ஒன்றுமில்லாத '0' எனும் பெருக்குத் தொகையில்லாது 10, 100, 1000 என்ற விடைகள் வன்மை வனப்புகளுடன் காணப்படுகின்றன, 10, 100, 1000 என்றதுபோன்ற எண்கள் தாம், ஆழிசூழ் உலகின் கண், இறைவனது படைப்பாற்றலில் விளங்கும் மாயா சத்திகள். இவை உலகம் தோன்றி ஒடுங்கக் காரணமாயிருப்பவை. இருளாட்சிக் குட்பயிற்றும் இம் மாயா சத்திகளினின்றும் தப்பிப் பிழைக்கும் வழியினைக் குறிப்பிக்க வேண்டி

*'மாறு கோடி மாயா சக்திகள்
வேறு வேறு தம்மாயைகள் தொடங்கின'

எனப் பெருந்துறைப் பிள்ளை, யாவரும் வியப்புறும் வண்ணம், நம் முள்ளத்திற் பொலிய வைத்தார். 'மாறு கோடி' என்பது ஈண்டு எண் மிகுதியையும் அளவின்மையையும் உணர்த்தியது. மிகப் பல பொருள்களுள்ள உலக இயந்தரத்து தோற்றத்திற்கு மூல காரணமாயுள்ளவை இம்மாயா சக்திகள். மற்றும் அவை திரிபுணர்ச்சி களை விளைவிக்க வல்லவை. விளக்கற்றம் பார்த்துக்கொண்டிருக்கும் தன்மையுடையதாதலின் மாயையினை 'மாயா இருள்' என்ருர் மணிவாசகர். இவ்விருளின் செயல் நிகழ்ச்சி, நெறியறியா மக்களை மயக்குறுத்தலே. மக்களும், அருளாட்சிப் பயிற்சியில்லாது முறுகிய உணர்விலாமடவோராகி, விளக்கற்றத்தைத் தாமே தோற்றுவித்துக் கொள்ளுவதும் வருந்தத் தக்கது.

இறைவனன்றி மாயா சக்திகளுக்கு இயக்கம் யாதுமின்று. எண்ணிலி எவ்வாறு எல்லையில்லாத நிறைவோ, அவ்வாறே இருள் வன்மைகளான இம்மாயா சத்திகள், எல்லையில்லாமல் போய்க் கொண்டிருக்கும் ஓர் குறைவே. இவைகள் தாம், தம் நிலைமாறிச்

---

* 'ஆறுகோடி' (பி—ம்) என்பது அளவின்மையைக் குறித்து நில்லாது. என்னெனின் அதற்குமேல், ஏழு, எட்டு, ஒன்பது, பத்து போன்றவை உளதாதலான்.

சென்று சென்று புலப்படாதவாறு தேயப்பெறும் குறைவினை யுடையன. எல்லையில்லாத குறைவை 'இல்லாமை' எனக்கூற இயலாது. இல்பொருளுக்குத் தோற்றமும் மாற்றமு மில்லை. இறைவனது படைப்பாற்றலில் விளங்கும் இவ்வுலகமும் அதன் கண்ணுள்ள பல்வகைப் பொருள்களும் இல்பொருள்களல்ல. அவை களில் இயங்குகின்றான் இறைவன். உலகியற் பொருள்களில் இறை வனது எல்லையற்ற தன்மை (Infinity) ஊடுருவிச் செல்கின்றதனால் மாறி மாறி நிலைத்திருக்கும் உலகம் உள்ள பொருளே. மற்றும் அது மெய்ப்பொருளின் நிழலாகும். எனவே உலகியற்கை கூறுபாடுகளில் அறிவைச் செலுத்தி இறைவனை அறிதல் வேண்டும் பேறு இன்றி யமையாததாயிற்று. 'இது' என்ற தெரி பொருள்களின் வழி, இவற்றை ஆக்குவானொரு தனி முதற்பொருளாகிய 'அது' என்பதின் சிறப்பியல்புகளைக் காண, மாயையாகிய திரை விலக வேண்டும். 'மாயை யெனும் திரையை நீக்கி நின்னை யார் காண வல்லார்' என்பர் பிறரும்.

இறைவனருளே கண்ணாகக் காணின், மாயா தோற்றங்களைத் தோற்றுவித்துக் கரந்து நிற்கும் வள்ளலையும் அவர் தம் மெய்யியல் பின் நன்மையையும் காண இயலும். உள்ளத்துறு துயரை ஒழிக்கும் இவ்வள்ளல் தேர்ச்சி அறிவிற்குப் புலப்படா ரென்பது

'மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார் முதற்பூதம்
பரத்தின் மறைந்தது பார் முதற்பூதமே'

என்ற திருமூலர் திருப்பாட்டால் தெளிவாகும். இதனால் இறை யுணர்வினைப்பெற்று அறிவு அன்பினும் மிகுந்து உளம் நெகிழும் அன்பர்க்குப் பரம்பொருள் காட்சியில் பார் முதலிய உலகப் பொருட் காட்சிகள் மறைந்தொழியு மென்றும், ஏனையர்க்கு, பரம்பொருள், உலகப் பொருட்காட்சியில் மறைந்து விடுமென்பது புலப்படும். தெளிந்த நீரில் திருமுகம் காண்பது போன்று, பணிசெய்து உணர் த்திய வண்ணம் உழைப்பதாகிய தெளியறிவின்கண், உயிர்கருவி' காரணம் யாவையும் நீத்து, அசைவற்ற நீர் போல் இறைவனது அருள்வழி நிற்பின், எழுதரிய உருவினனான இறை தன்னையும் காட்டி, ஆவியையும் காட்டும். இறைக்காட்சியில் இன்ப துன்ப உணர்வுகள் இரிந்தோட, மலச்சிதைவும், அன்புருவமாகலும் உடன் நிகழவே, உடலூழையும் ஏற்கும் இறை, உயிருக்கு இன்பவுரு வினனாக விளங்குகின்றானாதலின், அவ்வருள்நிலை இன்பத்தில் திளைத்த ஆளுடைய அடிகள் 'குணங்கள் தாமில்லா இன்பமே' என்றும்

'என்புள் உருக்கி யிருவினையை ஈடழித்துத்
துன்பங் களைந்து, துவந்து வங்கள் தூய்மை செய்து
முன்புள்ளவற்றை முழுதழிய உள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே'

சென்ற இதழின் தொடர்ச்சி.

தமிழ் இலக்கியத்தில் நாவல்கள்

ஏ. சுப்பிரமணியம்,

பச்சையப்பன் கல்லூரி, இளங்கலை இறுதியாண்டு, சென்னை.

துப்பறியும் நாவல் :-

திடுக்கிடுகின்ற நிகழ்ச்சிகளை அடுத்தடுத்து அமைத்து, அந் நிகழ்ச்சிகளுக்குத் தொடர்பானவர்களையும், காரணமானவர்களையும் பற்றிக் கூறிச் செல்லுவது இவ்வகை நாவலின் தன்மையாகும். இவ் வகை நாவல்களில் திடுக்கிடும் நிகழ்ச்சிகள் பெரும்பாலும் கொலை யாகவும் கொள்ளையாகவுமே அமையும். அவைகளைச் செய்தவர் களைக் கண்டுபிடித்தலே இதில் முழுமையாகக் கூறப்படும். அவ்வாறு கண்டுபிடிக்க முயல்பவர்களுக்குக் கொள்ளைக் கூட்டத்தினர் தரு கின்ற தொல்லைகள் பயங்கரமாக இந்நாவலில் விளக்கப்படும். தமிழில் வடுவூர் துரைசாமி ஐயங்காரின் மருங்காபுரி மாயக்கொலை, திகம்பர சாமியார் முதலிய நாவல்களும், ஆரணி குப்புசாமி முதலியாரின் மின்சார மாயவன் முதலிய நாவல்களும் சிறந்த துப்பறியும் நாவல்க ளாகும். தமிழ்வாணனின் மாயக்கள்ளன், கருகிய கடிதம்,

---

முன்பக்கத் தொடர்ச்சி.

என்றும், இறையன்புடையாரகத்தை உருக்கும் பான்மையில் அருளினர். இறைவனது வரம்பிலின்பத்தோற்றத்து மாட்சிமை வாய்விட்டுச் சொல்லும் தரத்த தன்ருதல் பற்றி 'உரையுணர் விறந்து நின்றுணர்வ தோருணர்வே' கண்டுங் கண்டிலன் என்ன கண் மாயமே' எனப் பெருந்துறைப்பிள்ளை மொழிந்தது உணர்ந்து இன்புறத்தக்கது.

எனவே, இத்துணையுங் கூறியவாற்ருல் எண்ணிலி எனும் இயலொளியுடைய பேரெண்ணும், இறைவனது தன்மை போன்ற தென்றும், முற்றறிவுடைய முதல்வனுகிய இறைவனை 'அது' எனவும், அதனை முதலாகவுடைய இவ்வுலகம் 'இது' எனவும், பெருந்துறைப்பிள்ளை உணர்த்தி, ஒருவரை ஒன்றுமிலாதவராகிய' இறைவனை, சத சத்தாகிய உயிர்கள், ஐம்புலன்களுக்குக் காட்சி யுளிக்கும் உலகியற்பொருள்களைக் கருவியாகக் கொண்டே, அவன ருளை நண்ணிப் பெறவேண்டும் மனத்தால், அறிதல் வேண்டுமென, மணிவாசகப் பெருந்தகை, தான் இன்பமீதூரக் கண்ட இறையுண் மைக்கு அழகு அலர்ந்து எழுமாறு உருக் கொடுத்த செம்மை நனி விளங்கும்.

சங்கரிலால் துப்பறிகிறார் என்னும் நாவல்களும் இக்காலத்தில் சிறந்த துப்பறியும் நாவல்களாகக் கொள்ளப்படுகின்றன.

பொழுதுபோக்கு நாவல் :-

சாதாரணமான நிகழ்ச்சிகளையும் உரை யாடல்களையும் அமைத்துப் பெரிதும் விருவிருப்போ, உணர்ச்சியோ இல்லாமல் செல்லும் நாவல்கள் பொழுதுபோக்கு நாவல்களாக அமையும். இவ்வகை நாவல்களைப் படிப்போர் நாவலிலிருந்து எந்தக் கருத்தை யும் எதிர்பார்க்கமாட்டார்கள். பொழுதுபோக்கவே இந்நாவல்கள் பயன்படும். க. நா. சுப்பிரமணியத்தின் 'ஒருநாள்' மாயாவியின் நூல்கள், எஸ். ஏ. பி. யின் நீ, சொல்லாதே. ஓவியம், முதலிய நூல்களும் இவ்வகையைச் சாரும். இன்று தமிழ்நாட்டில் பொழுது போக்கு நாவல்களை எழுதும் ஆசிரியர்களே அதிகமாக உள்ளனர். இவ்வகை நாவல்களால் தமிழ் இலக்கியம் பெரும்பாலும் எந்தவித மான பயனையும் பெறுவதில்லை.

முடிவு :-

மக்களின் மனநிலைக்கு ஏற்பவே இலக்கியம் அமைதல் இயற்கை. மக்கள் மனநிலை காலத்தோடு சேர்ந்தே அமையும். இப்போது நடந்துகொண்டிருக்கும் காலமும் இனி வருகின்ற காலமும் விஞ் ஞானத்தைப் பெரிதும் எதிர்நோக்கிப் புற உணர்வுகளையும் தேவை களையுமே வளர்க்கும். அவ்வகையான மனநிலை அமைந்தவர்களால் ஆழ்ந்து சிந்தித்தோ குறிப்பு, உரை முதலியவைகளின் துணை கொண்டோ இலக்கியத்தைப் படிக்கும் வழக்கத்தை அறவே விரும்ப மாட்டார்கள். படித்தவுடன் எளிதாக விளங்கி மகிழ்ச்சி தருகின்ற இலக்கியங்களையே நாடுவர். அவர்களுக்குக் கவிதையைப் போன்ற சிறிய அமைப்பில் பெரிய கருத்துக்களைத் தருவது சுவை பயக்காது. விரிவாக எழுதப்படும் நாவல்களே சுவையும் இன்பமும் பயப்பன வாகத் தோன்றும். எனவே இனி இலக்கிய உலகில் நாவலும் அவற்றுக்கு இனமான சிறுகதையுமே சிறந்த இடத்தைப் பெறும்; அவைகளையே எதிர்கால மக்கள் போற்றி வரவேற்பார். தமிழ் இலக்கியத்தை வளர்க்க விரும்பும் அனைவரும் தற்கால இலக்கியங்க ளான நாவல்களையும், சிறுகதைகளையும் சிறப்பாக அமைத்துத் தமிழ் இலக்கியத்தைப் போற்றி வளர்ப்பார்களாக!

சிறுகதை.

புலவர், ந. செகதீசன்,

ம. இ. உ. பள்ளி, ஈரோடு.

எண்ணமும் எழுத்தும் :—

எண்ணங்களின் வடிவங்களே இலக்கியங்கள். எண்ணங்கள் புதுமையும் மாற்றமும் மருவி வளருமாறே அவ்வெண்ணங்கட்குத் தருகின்ற வடிவங்களும் புதுமையும் மாற்றமும் மருவி வளர்தல் அறிவுலகில் யாண்டும். எஞ்ஞான்றும் நிகழ்ந்து வருகின்ற செயலாம். உடலுக்கு ஒரே வகை ஆடையை அணிந்து கொள்வதை வெறுத்து புதுவதும் அழகியதும் பொருந்துவதுமான ஆடையணிவதில் காட்டு கின்ற ஆர்வம்போலவே கருத்துகட்கு அணிவிக்கும் ஆடைகளாகிய இலக்கிய வடிவங்களைப் படைப்பதிலேயும் மனிதன் ஆர்வம் காட்டு கின்றான்.

தொல்காப்பியர் தம் காலத்தில் வழங்கிய இலக்கிய வடிவங் களாகப் பாட்டு, உரை நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்னும் ஆறுவகைகளை எடுத்துரைக்கின்றார் இவை ஒவ்வொன் றனை ஒட்டியும் பல இலக்கிய வடிவங்கள் பிறந்து வளர்ந்துள்ளன. பாட்டு, பலஉருவங்களை மருவிக் கவிஞனின் முனைப்பு, கிளர்ச்சி, விருப்பம், பொருளின் இயல்பு, தகுதி ஆகியனவற்றிற்கேற்பக் காலந்தோறும் புதுமைபெற்று வளர்ந்து வந்துள்ளது. அவ்வாறே உரைநடையும் வளர்ந்து வனப்பெய்தி வடிவம்பல கொண்டு உலவி வருகின்றது.

"பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்
உரைவகை நடையே நான்கென மொழிப" என்னுந்

தொல்காப்பிய நூற்பாவால் உரைநடை நான்கு வகைப்படும் என்பதனை உணருகின்றோம். இந்நூற்பாவால் இன்றைய புதுமை இலக்கியப் படைப்புக்களாகிய சிறுகதை, கட்டுரை, நகைச்சுவை ஆகியனவற்றிற்குத் தொல்காப்பியர் வழியமைத்துள்ளதை நாம் அறியவியலுகின்றது. இவற்றுள் கட்டுரை பற்றிய குறிப்பை, "கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்து' எனத்தொடங்கும் நூற்பாவிற்கு உரையாகக் "கட்டுரையாவது, பாட்டின்றித் தொடுக் கப்பட்டு வருவது," என்று இளம்பூரணர் எழுதும் உரையால் பெறலாம். பாட்டிடையே எழுதப் பெறும் பொருட்குறிப்பு, தனிக் கட்டுரை ஆகியன வரைதற்கிடமாக உரைநடை பொருந்தும் என்பதனைப்' பாட்டிடை வைத்த குறிப்பினானும் பாவின் றெழுந்த கிளவியானும்; எனச் சொல்லிச் செல்கின்றார் தொல்காப்பியர்.

வெறுங் கற்பனை பற்றியும், நகைச்சுவைதழுவியும் இயற்றப்படும் சிறுகதை, நெடுங்கதை, நகைச்சுவைத் துணுக்கு; கதை ஆகியன வற்றிற்கு உரைநடை விரிந்து கொடுக்கும் என்பதனைப் 'பொருளொடு புணராப் பொய்ம்மொழியானும் பொருளொடு புணர்ந்த நகைமொழியானும்' எனவரும் நூற்பாத் தொடர்கள் விளக்குகின்றன. இனிக் இக்கட்டுரையில் இப்புதுமைப்படைப்புக்களில் ஒன்ருகிய சிறுகதை வடிவம் பற்றி ஆய்வோம்!

அமைப்பு:—

"சிறுகதைகள் சீரிய பணிகள்" எனப்புகழ்ந்தார் ஓர் அறிஞர் (Short Stories are sacred Jems) அளவிற் சிறியதாய்ச் செறிவு வாய்ந்திலங்குவதே திறன்வாய்ந்த எழுத்தாளர் புனையும் சிறுகதையாம். அஃது ஒருமுறை உட்கார்ந்து படித்துவிடத்தக்கதாய். இருத்தல் வேண்டும். (It must be concise and condense, capable of being read in one sitting). மூவாயிரம் சொற்களுக்கு மிகாமற் புனையப் பெறும் அச்சிறுகதை, அரைமணியிலிருந்து ஒரு மணி நேரத்திற்குள் படித்துமுடித்தற்குரியதாக இருக்கவேண்டுமென எட்கர் அலன்போ எனும் எழுத்தாளர் கருதுகின்ருர். சிறுகதையின் சிறுமைக்கு எல்லை, அது கதையெனச் சுவைத்தற்குரிய அளவுபெற்று எத்துணைச் சுருக்கமாகவும் இருக்கலாம். ஏனெனில் நெடுங்கதைகளைப் படித்தற்கு வேண்டிய மனவெழுச்சி, ஓய்வு, சுவையுணர்வு ஆதியன அற்றகாலையிலும் கலையுணர்வீடுபாட்டிற்கு (Its economy is the outcome of our craze to cram within the shortest measure the maximum experience. We have no leisure for lengthy novels and yet we want to be taken out of ourselves. It is in our odd moments that the demand is made for the short story.) உற்ற துணையாக இருப்பது சிறுகதையே அன்ரே!

இனி, இச்சிறுகதை வகைக்கு ஓர் எடுத்துக்காட்டினைப் பார்ப்போம். தங்கத் தகடெனச் சிறுமீன் ஒன்று தடாகத்தில் மின்னியொளிர்ந்து நீந்திக் கொண்டிருந்தது. அதன் எதிரே ஒரு பெருமீன் வந்தது. சிறுமீனை விழுங்க அது தான் பெரிய வாயைத் திறந்தது. அதனைக் கண்டஞ்சிய சிறுமீன்,' இஃது என்ன கொடுமை; நாமிருவரும் ஓரினமல்லவா? இனத்தை இனம் விழுங்குவது முறையா? அறமா! என்று முறையிட்டுப்புலம்பிற்று! பெரியமீன் உடனே சிறியமீனைப் பார்த்து, 'அப்படியாயின், சரி! என்னை விழுங்கி விடு! என்று கூறி அதன் அருகே சென்றது. சிறுமீன் வாயைத் திறந்து பெரியமீனை விழுங்க முயன்றது; ஆயின் முடியவில்லை. 'உம்! சரி! நீயே என்னை விழுங்கிக் கொள்!" என்று தேய்ந்த குரலில் சிறுமீன் செப்பிற்று. பெரிய மீன் உடனே அச்சிறிய மீனை விழுங்கிவிட்டது".

இஃது உலகச் சிறுகதைப் போட்டியில் ஒருமுறை முதற்பரிசு பெற்ற சிறுகதை! இவ்வரிய கதையைப் புனைந்தவர் உருசிய நாட்டைச் சார்ந்த ஓர் எழுத்தாளர். இக்கதை அமைப்பில் சிறியது; கருத்தில் ஆழமானது; அறிவைத் தொடுவது. சின்னஞ் சிருர்க்குச் செப்பும் கதைபோலத் தோன்றினும் மக்களின் வாழ்வுப் போராட்டத்தைப் படம் பிடித்துக் காட்டி நம் சிந்தனைக்கு விருந்தாகின்றது இப்புனைவு!

சிறுகதை, ஒரு சிறு நிகழ்ச்சி; ஒருகாட்சி; வாழ்வின் ஓரியல்பு, மக்கட்பண்புகளில் ஒன்று, சுவைகளில் ஒன்று ஆகிய இவற்றில் ஏதேனும் ஒன்றனை ஒட்டிப்புனையப் பெறலாம். ஒருவர் வாழ்வின் ஒரு கூறுபாடு, ஒருநாளைய நிகழ்ச்சி, ஓர் சுவையான அரிய செயல், ஆகிய எதனையும் அடித்தளமாகக் கொள்ளலாம்.

அந்நிகழ்ச்சி மக்கள் வாழ்வுச் சார்புடையதாக அல்லது அவர் பின்பற்றி உணரத் தக்கதாக இருந்தாலன்றிச் சிறுகதை வெற்றி பெருது. மனிதன் ஒரு பல பட்டைக் கண்ணுடி; அக்கண்ணுடியில் ஒருபுறக் காட்சியைச் சுவையுற எடுத்துரைப்பதே சிறுகதை புனைவோர் தம் மரும்பணியாம். (The out standing quality of a short story is that it should deal with a single theme, highly degnified, emotion being sustained through out the story).

சிறுகதைகளைக் கருவால் சிறப்புடையன உறுப்பினர் படைப்பால் சிறப்புடையன, பின்னணியால் சிறப்புடையன என முத்திறப் படுத்தலாம். இவை மூன்றுமே சிறுகதைக்கு வேண்டப்படுவன எனினும் சிறுகதையாசிரியன் இவற்றுள் ஒன்றற்கே, தன்னுணர்வை ஈடுபடுத்திக் கொள்வதால், தலைமை கொள்ளும் இப்பண்புகளில் ஒன்றைக் கொண்டு பிரித்துணர்தல் வேண்டும்.

சிறுகதையில் சொற்சுருக்கமே முதற்கண் வேண்டப்படுவது. (There should be a compression of expression) சொற்கள் உணர்வின் வடிவங்களாக அமைந்து கற்போருக்கும் நிகழ்ச்சிக்குமிடையே தாமிருப்பதைக் காட்டாமல் விளங்குமேல் மிக மிகச் சுவை பயக்கும். இங்ஙனம் அமையப்புனைவதே எழுத்தாளர்தம் விழுமிய நோக்கமாதல் வேண்டும்.

கூறுபாடுகள் :—

சிறுகதையில் இயக்க ஆற்றல் ஒருமைப்பாடு, நோக்க ஒருமைப்பாடு, செயல் ஒருமைப்பாடு, உளப்பதிவியல் ஒருமைப்பாடு, ஆகியன அமைத்திருத்தல் வெண்டும். ஆசிரியன்தான் எடுத்துக் கொண்டது ஒரு குறிக்கோள் எனில், வேருென்று ஊடுருவி அதனாற்றலைக் கெடுக்காவண்ணம், அழுத்தமாகவும் தெளிவாகவும் அதனைப் புலப்படுத்திவிடவேண்டும். அவ்வாறே, செயல், உணர்வு

ஆகியனவற்றுள் ஓர் ஒருமைப்பாடு நிலவாவிடில் சிறுகதை பயனும் நயமும் அற்றுக்கற்போர் நெஞ்சைக்கவரும் ஆற்றல் தோற்று, வெற்றெனத் தொடுத்தலாக நின்றுவிடும். இத்தகு கூறுபாடுகளைத் தாங்கிநிற்கும் சிறுகதை இயற்கைக்குப் பொருந்தியதாக இருந்தாலன்றி எவராலும் விரும்பப்படமாட்டா! கற்பனை, வானில் பறக்கும் சருகுகளாக இல்லாமல் மண்ணில் வேரூன்றி விண்ணைத் தடவும் மரத்தின் அழகிய கிளைகள் போல விளங்கவேண்டும்.

கரு.

எழுத்தாளனின் படைப்பு நெஞ்சில் ஒரு சிறுகதைக்கு வேண்டிய கரு என்றோ ஒரு நாள் தோன்றியிருக்கலாம். அதற்கு உரு அமைவது பல நாட்கள், திங்கள்கள் ஆண்டுகளுக்குப் பின்னரும் நிகழ்வதுண்டு. சிறுகதையில் எளிய பொருள்களைக் கருவாகக் கொள்ளுதலே மிகச் சிறப்புடையதெனச் சிறுகதை உலகின் தந்தையாகிய உருசிய நாட்டுச் செகாவ் கூறுகின்றார். "பீட்டர் எவ்வாறு மேரியை மணந்து கொண்டான்" என்று எழுதினால் அதுவே சிறுகதைதான்' என்று அவர் கூறியிருப்பதை உற்றுநோக்கின் கதைக்கருவிற்கு மேல்உலகையும் கீழ் உலகையும் தேடிச் செல்லாமல், நின்றவிடத்திலிருந்து விழிகளைத் திருப்பிச் சுழலவிட்டு அன்றாட வாழ்வில் காணும் நிகழ்ச்சியினைச் சிறுகதையில் சொல்லோவியமாக்குவது எளிதும் ஏற்றதுமான செயலென அறியலாம். பிரெஞ்சு நாட்டுச் சிறுகதை வேந்தனாகிய மாப்பசான், எளியமக்களின் வாழ்வியலைக் கதைக்கருவாகக் கொள்ளினும், அவர்கள் வாழ்விடைக் காணலாகும் நாடகக் கூறுபாட்டிற்கே (Dramatic Element) சிறப்புத்தந்தார். செகாவின் கதைமுறையில் தெரிந்து மகிழலும், மாப்பசான் கதைமுறையில் வியந்து திளைத்தலும் பயனாக அமையும்.

கதையின் கரு நாட்டிற்கு நாடு வேறுபடும். ஏனெனில் கதைக்குரிய கரு சூழ்நிலையைத் தழுவி நெஞ்சில் முகிழ்ப்பது. பொதுவுணர்வுகளாகிய காதல், வீரம், இரக்கம், ஏக்கம் முதலாயவை யாண்டும் ஒருபடித்தாகவே இருப்பனவாம். இவற்றிற்கு அடிப்படை, சூழ்நிலை ஆகியன மாறுபாடுறுவது கால இட வேறுபாடுகளுக்கு ஏற்பவே நிகழும்.

முழுமை :—

நெடுங் கதையை நாடகத்திற்கும், சிறுகதையை நாடகத்தின் ஒரு காட்சிக்கும் ஒப்பிடலாம். ஆயின் நாடகத்தின் ஒரு காட்சியில் நாம் முழுமை எதனையும் காணல் இயலாது. சிறுகதையிலோ முழுமை அமைந்திருத்தல்வேண்டும். வாழ்வின் சிறு துண்டாகிய சிறுகதையினைப் படித்து முடிப்போர் உளத்தில் முழுமைப் பயன் (Effect of Jofality) ஏற்பட்டே ஆதல் வேண்டும். ஒரே அமர்வில் எழுதி முடிப்பதாலும், ஒரே மனவுணர்வில் தோய்வதாலும் இம் முழுமை தானேயாக அமையவல்லதாகின்றது. அஃதன்றியும் அவர் புனையும் சிறுகதை, கரு, உறுப்பினர்படைப்பு, பின்னணி

ஆகியவற்றுள் ஒன்றனையே முதன்மையாகக் கொள்வதாலும் முழுமை சிறுகதையில் முகிழ்க்கும் நெடுங்கதை யாசிரியரோவெனில் இம்மூன்றற்கும் தம் உணர்வைச் செலவிட வேண்டியவரா கின்றார். நெடுங்கதை விரிந்த பரப்பையுடையதாகலான் முழுமை பெறுதல் எளிதாகலாம். அளவிற் சுருங்கிய சிறுகதை முழுமை பெறல் அருமையாகின்றது.

பின்னணி :—

சிறுகதையில், அதன் அழகைப் பெருக்கவும், உணர்வை அழுத்தமாகக் காட்டவும், கற்பனைத்திறன் கொண்டு ஏற்ற இயைபான பின்னணியை அமைத்தல் வேண்டும். நீண்டபுனைவுரைகள், மிகுதியான பின்னணி, தேவையற்ற விளக்கம் ஆகியன கதையின் ஆற்றலைக் குறைத்துவிடக்கூடும் இசையரங்கில் மிடற்றிசையினை யொட்டி நரம்புக்கருவி, தோற்கருவி ஆகியன அமைந்து, சிறப்பூட்டி சிந்தைக்கு இன்பூட்டுமாறு போலவே, கதையின் உணர்ச்சியைக் கெடுக்காவண்ணம்—அதனை விஞ்சித் தலைமை கொள்ளா வண்ணம் பின்னணி அமைதல் வேண்டும். பின்னணி, கதைநிகழ்ச்சிக்குப் பொருத்தமாகவும் எளிதில் புரிந்து சுவைக்கக் கூடியதாகவும் இருத்தல் இன்றியமையாதது. தலைவனைப் பிரிந்து தனித்து நின்று வாடும் தலைவியின் நிலைக்குப் பின்னணியாகக் கொம்பிழந்த கொடி, துணையிழந்த பறவை ஆகியனவற்றை எடுத்துரைத்துத் துயர நிலையைச் சொல்லோவியமாக்கலாம். அவ்வாறன்றி அவள் சூழ்நிலையில் களித்து உலவும் காதலர் இணையாகப்பாடித்திரியும் பறவைகள், கொம்பைத்தழுவிக் கூத்தாடும் கொடி, ஆகியனவற்றைப் படைத்தும், அவளது தனிமைத்துயரைத்தக்கவாறு ஆழமாகப் பதியவைக்கலாம். இயைபான பின்னணி, முரணாக நின்றும் உணர்வை ஆழமாக்கும் பின்னணி என இருவகையில் பின்னணி அமையும். வற்றிக்கிடக்கும் ஒருசிறுவனின் துன்பநிழலை வாடிக் கிடக்கும் பயிரைக்காட்டி விளக்கலாம். அவ்வாறன்றி உண்டு மகிழ்வோர் மலர்ச்சியைக் காட்டியும், உண்ணாமையால் அவள்படும் உரைக்கவொண்ணாத்துயர்நிலையை எடுத்துக்காட்டலாம். இவ்விரு வகையில் ஆசிரியர்தம் திறனுக்கேற்றவாறு ஏதாவதொருமுறையில் பின்னணி யமைக்கலாம்.!

தோற்றம் :—

சிறுகதை இலக்கியம் தோன்றி ஒருநூற்றாண்டேயாகின்றது. முதலில் நெருங்காத எழுத்தாளர் தம்கடும் உழைப்பிற்கிடையே ஓய்வு நேரப் படைப்பாகவே சிறுகதை புனையத் தொடங்கினர். எனவேதான் சார்லசுதிக்கன்சு (Charless Dickens) சுகாட் (Scott) முதலியோர்தம் மிகச்சிறந்த சிறுகதைகளைக்கூடப் பெருமைக்குரி
வாகக் கருதாமற்போயினர். சிடீவன்சன் (R L. Steve
என்பார் குறிப்பிட்ட நோக்கத்திற்காகத்தான் பெருந்
சிறுகதைகளை எழுதி அதனை ஒருதுறையாகச் சிறப்பித்தார்.
தற்காலச் சிறுகதையோ, ஆவ்திரோன் (Nathinial Ha

முதலியோரால் தொடக்கம் பெற்று இன்றைய வடிவைப்பெற்று, பிரான்சு உருசிய நாடுகளின் சிறுகதைச் செல்வாக்கின் ஊடுறுவல் பெற்று விளங்குகின்றது.

வளர்ச்சி.—

முதன்முதலின் சிறுகதை என்பது நெடுங்கதையின் குறுகிய வடிவமென்றே கருதினர். ஆயின் இவையிரண்டும் குறிக்கோளாலும் முறையாலும் வேறுபாடுடையவையே. நெடுங்கதையாளர் துறை விரிந்து பரந்து செல்வது. அவர் எவ்வரம்பிற்கும் உட்படாமல் தாம் வகுப்பதையே வரம்பாகக் கொள்பவராகின்றார். சிறுகதையாசிரியர் கட்டுப்பாடுகளுக்கிடையே, எழுத்துப்பணி இயற்ற வேண்டியவ ராகின்றார். இன்று சிறுகதை இலக்கியம் தனக்கென ஒருவடிவம் பெற்று, வனப்புப்பெற்று வளர்ந்து வருகின்றது. வாழ்வின் வெளிப்படை உண்மைகளே இன்றைய சிறுகதைகளின் பண்பு நலனாகக் கொள்ளினும், கற்பனை நகைச்சுவை ஆகியனவும் விரவிச் சிறக்கப் புனையப் பெறுகின்றன. இவ்வாறு ஆங்கிலமொழியில் வளர்ச்சியைச் சிறுகதை உலகில் தோற்றுவித்தவர்கள் செச்டர்டன், சேகப் (Jacob. w) ஓ'என்றி, இலியானார்டுமொரிக் ஆகியோர் எனக் கூறலாம்.

தமிழில் சிறுகதைகள் :—

சிறுகதைக்கான நிகழ்ச்சிக்கூறுகள் அமைந்தனவாகச் சிந்தை கவரும் சங்கப்பாக்கள் பலவுண்டு. எனினும், மேலைநாட்டு முறையைச் சாலவும் ஒட்டித்தமிழில் சிறுகதைகள் அண்மைக் காலத்தே தான் அரும்பின. முதன்முதலில் வீரமாமுனிவர் (1680-1747) எழுதிய பரமார்த்தகுரு கதைகள் வெளிவந்தன. நகைச்சுவை பொதிந்த அக்கதைகள் மிகப்பலரால் வரவேற்கப் பெற்றன. கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தாண்டவராய முதலியார் எழுதிய பஞ்சதந்திரக் கதைகளும், வீரசாமிச்செட்டியாரின் வினோதரசமஞ்சரிஎனும் கதை நிறைந்தநூலும் வெளிவரலாயின. புதுமைப்பித்தன், கு. பா. இரா, ஆகியோர் அழகிய சிறுகதைகள் புனைந்து புதுமெருகேற்றிய இக்கலைத்துறை பலரைத்தம்பால் ஈர்ந்தது. கல்கி அறிஞர், மு. வ அகிலன், விந்தன், அறிஞர் அண்ணாதுரை ஆகியோர் திறன்பெற்று, வாழ்வொட்டிய பற்பல வண்ணச்சிறுகதைகள் தொடுத்தனர். தொடுத்து வருகின்றனர். இன்று எண்ணிறந்த எழுத்தார்வங்கொண்ட இளைஞர்க்கு இத்துறை வரவேற்பும், வாழ்த்தும் தந்து ஊக்கந்தருகின்றது ; ஆக்கமும் தருகின்றது !

முடிவு :—

சிறுகதை, மலையைப் படம் பிடிக்கும் புன்னுனிப் பனித்துளி! சுவை நிறைந்த கரும்பின் சாறட்ட கட்டி! சுண்டக்காய்ச்சிய பாலில் உண்டுபண்ணிய பாற்கட்டி! நெஞ்சைப்படம்பிடிக்கும் நிலைக் கண்ணாடி! இத்துறை செழிக்க இத்தரை பயனுறுக!

நைடதத்தில் ஓவியம்.

தி. நா. அறிவு ஒளி.

முன்னுரை:—

அதிவீரராம பாண்டியரின் அரிய படைப்பு நைடதமாகும். 1173 கவிதைகளாலான அந்நூல் 28 படலங்களாகி விளங்குகிறது. தேர்ந்த புலமை எழுச்சியில் பிறந்த கவிதைகளைக் கொண்ட இந்நூலின் பாக்கள் ஒவ்வொன்றும் பாணிக்கேற்ப ஆடலிடும் இளமையும் அழகுமுடைய ஆடலழகியின் ஆடலைப்போல் சாயலும், எழிலும், உணர்வும் செழித்துப் பொலிகின்றன.

படிக்கப் படிக்கச் சுவை குன்ருத அப்பாட்டுக்களே அதிவீரராம பாண்டியரின் காலத்துத் தமிழக மக்கள் வாழ்க்கை, கலைத்துறை, அறிவியல்துறை ஆகியவைகளை அறிதற்கு உதவுகின்றன.

வரலாறு :—

நெல்வேலிமாறன் (கி. பி. 1552 — 1564) என்ற பாண்டியனின் முதன் மகன்தான் அதிவீரராமன். 'சடையவர்மன்' என்ற சிறப்புப் பெயர்பூண்டு கி. பி. 1564 முதல் 1604 வரை அரசாண்டான். இவனுக்கு 'அழகன் சீவலவேள்' என்றும் ஒரு பெயர் வழங்குகிறது. தென்காசியில் குலசேகரமுடையார்கோயில் ஒன்றைத் தன் தந்தையின் நினைவாக எழுப்பினுன் அதிவீரராமபாண்டியன் கூர்மபுராணம், வாயுசங்கிதை, காசிகாண்டம், இலிங்கபுராணம், நறுந்தொகை, காமநூல் முதலிய வேறு நூல்களையும் இயற்றியுள்ளார். இப்பாண்டிய மன்னரின் இல்லக்கிழத்தியாரும், தமையனுரும் கல்வி கேள்வியிற் சீரிய புலமைச் செல்வராக விளங்கினர்.

உண்மைக்கலை உயரிய கொள்கை:—

நைடதத்தில் அதிவீரராமர், இருபத்திரண்டு பாடல்களில் கலைக் குறிப்புக்களை அளித்திருக்கிருர். பண்டைத் தமிழகம் பெற்றெடுத்த கலை, நாகரிகம், பண்பாடு, அறம், அறிவியல், குடியமைப்பு, வாழ்வமைதி, இலக்கியம், இலக்கணம், ஒழுக்கம், மரபு, சால்பு, உணர்வழகு ஆகியவை உலகம்முழுதும் பரவியிருந்தது. அப்பரவல் இன்றளவும் உலகில் வாழும் அளவுக்கு அப்போதே வேர்விட்டு ஊன்றியிருந்தது. தமிழரின் அறிவும், ஆற்றலும், உணர்வும், உழைப்பும், பண்பும் அத்துணை உயர்ந்ததாகவும் ஒப்பற்றதாகவும் விளங்கியது. தமிழர் நுண்ணறிவும், நுண்ணுணர்வும், நுண்ணேக்கும் வியக்கத்தக்கதாக இருந்த உண்மை உணரத்தக்கதாகும். இயற்கையோடியைந்து, இயற்கையையே வழிபட்டு இயற்கையை ஆட்சி செலுத்திய செந்தமிழரின் நுண்மாண் நுழைபுலம் போற்றற்குரியதுமட்டுமல்ல; கடைப்பிடித்தொழுகத் தக்கதுமாகும்.

தமிழர் நுண்கலைகளில் உலகிலேயே தலைசிறந்த நாகரிக வளத்தை உருவாக்கியிருந்தமையை வரலாறு தெளிவாகக் காட்டுகிறது. அந்த வளமார்ந்த 'கலை வாழ்க்கை' தமிழிலக்கியங்களிலும் தன் நிழலைப் பதிவு செய்துள்ளது. அந்தக் கலைத்துறைகளில் ஓவியக் கலை தமிழ் நாட்டிற்கே உரிய ஒரு தலைப்பொலிவும் எழிலும் வாய்ந்ததாக விளங்குகிறது. ஓவியக்கலைவளம் இலக்கியவாயிலாக உணர்த்தப் படுவதை ஆராய்ந்து தெளிந்து, பண்டைத்தமிழ் ஓவிய வரலாற்றுச் செழிப்பை அறிவோம்.

• தமிழரின் ஓவியக்கலை இயற்கைத்தன்மை வாய்ந்தது. உள்ளது உள்ளவாறே தீட்டிக்காட்டும் இயற்கைத் தன்மையது. தமிழ்நாட்டு ஓவிய இலக்கணம். இக்கொள்கைக்கு கோடிக்கணக்கான சான்றுகள் இலக்கிய, வரலாற்று, மரபு, வாழ்த்துறைகளில் உண்டு.

இன்று வாய்மை இயல் (Realism) என்றும், பிறவாறுகவும் மேலைநாட்டார் கூறும் கலை – இலக்கியக்கொள்கை பழந் தமிழரின் மிகப் பழங்கொள்கையேயாம். பண்டைத் தமிழகத்தின் பண்பாட்டுத் துறைப் பெயரர்களான சுமேரியர், எகிப்தியர், கிரேக்கர், உரோமர், சாலதியர், யவனர் ஆகிய இனத்தினர் தமிழ்க்கலைகளையும், மரபுகளையும், இலக்கணம் முறைகளையும்கண்டு,சுவைத்துத் தாமும் கவர்ந்து சென்று மேலும் அவற்றை ஓம்பிவளர்த்து, விரிவாக்கி இன்று ஞாலம் வியக்கப்பரப்பியுள்ளனர்.

தமிழக ஓவியக்கலையின் உண்மைகள் இன்னும் போதிய ஆராய்ச்சித்திறனோடு வெளியாக்கப்படவில்லை. இவ்விழிநிலை மாற்றப் படவேண்டும். தமிழரின் உண்மைக் கலைவளத்தை ஆராயப் பிற நாட்டு, பிறமொழி நோக்கு பயன்படாது. நம் நாட்டு வரலாறும், இலக்கியமும், கலைத்துறை நூற்களுமே உதவும். இனைய உண்மைகளைத் தொகுத்து, முறைப்படி ஆராய்ந்தால் நம்நாட்டுக் கலைகளின் மாண்பும், சால்பும், பண்பும், மேதைமையும், மேன்மையும் உள்ளது உள்ளபடி தெளிவாகும்.

உண்மையாக நாம் காணும் ஒவ்வொரு பொருளையும், அதன் இயற்கைத் தன்மையோடு, அப்பொருளின் உள்ளார்ந்த நுண்ணழகும், ஒட்பப்பொருளமைதியும், அழகுணர்வின் பயனும் புலப் படுமாறு பண்பாட்டோடு புனைந்துகாட்டுவதே தமிழ் ஓவியக்கலையின் இயல்பு.

'இயற்கையின் முருகியலை வடித்துக்காட்டுவதே ஓவியம்' என்பதே தமிழ் ஓவியக் கலைஞர்களின் கலைக்கொள்கையாகும். இதே கொள்கையைத்தான் யவன, எகிப்திய, உரோம, இத்தாலிய ஓவியக் கலைஞர்கள் பின்பற்றி வருகின்றனர்.

இந்நாட்களில் 'தற்கால ஓவியங்கள் முறை' (Modern Art) யானது உயிரற்றது; உண்மையற்றது; இயற்கைப் பகைமையது. அச்செத்தகலை இடைக்காலத்தின்பின் சில நூற்றுண்டுகளுக்கு முன்னரே பண்பில்லார் சிலரால் துவக்கப்பெற்றது. இக்கலைத் துறை

யில் புலமையோ, அழகாற்றலோ, அகவியல்பின் எழுச்சியோ, கலை யுணர்ச்சியோ, கைத்திறனோ எதுவும் கிடையாது. இந்தச் செத்த ஓவிய முறை' திறமையின்மையின் எடுத்துக்காட்டு. தமிழரை ஒத்த நாகரிக வளர்ச்சிபெற்ற முதியோரான சீனர், கிழக்கு, மேற்கு ஆசியா வின் பற்பலப் பகுதியினர் ஆகியோரின் ஓவியக் கலைமுறையில் திராவிடக் கலையின் சாயலும், வேர்ப்பண்பும், உள்ளுறை நுட்பமும், உயிர்ப்பும் பொலிகிறது, அந்தச் சீனக்கலையும், ஆசியப் பழம்பெரு நாடுகளின் பழங்கலைப் பாணியும் தமிழ்க் கலைமுறையைப் போன்றே இயற்கைத்தன்மை, உண்மைநிலை, வாய்மையியல் கொண்டொளிர் ' வதை உன்னுவோர் உணர்வர்.

வடநாட்டு ஓவியக் கலையாக இன்று பெரிதும் வளர்ந்துள்ள, கலைப்பண்போ, முருகுணர்வோ அற்ற 'செத்த ஓவியமுறை' போலி விளம்பரத்தாலும், பொய்முழக்கங்களாலும், தகுதியாரின் செல்வாக் காலும் 'மெய்யுணர்வுக்கொள்கை' உடையது எனப் பொய்யாக விளம்பரப்படுத்துகிறது.

எல்லா நல்ல கலையிலும் மெய்யுணர்வுக்கொள்கையும், ஆழ்ந்த—விரிந்த—நுண்ணிய நோக்கும், மென்னயமும், அழகும், பண்பாடும், சாயலும், விழுப்பமும் உண்டு. இத்தகுதிகளைப் பெறாத கலை; கலையே இல்லையே!

இவ்வாறிருக்க, தற்கால ஓவியமுறை (Modern Art)யில் மட்டும் கொள்கை உண்டு; மெய்யுணர்வு உண்டு; எனப் பொய்கூறி ஏமாற்றுவதை ஆன்ற அறிஞர் பெருமக்கள்கண்டு எள்ளிச்சிரிக்கவே செய்வர்.

தென்னாட்டு ஓவியக்கலைத் திறமை தமக்குக் கைவரப் பெறாமை யால், தாம் புகழ்பெற வாய்ப்பிராதென்று அஞ்சி, இத்தகு 'பழிசால் பயனில் கலையைப்' படைத்து, அது பண்புடையது; ஆழ்ந்தது; அரியது; பெரியது' என உலகரங்கில் அறிமுகப்படுத்தி முர சறைந்து ஏய்த்து நிற்கின்றனர்.

இத் 'தற்காலக் கலைமுறையும்' ஐரோப்பியக் கலைஞர் சிலரின் எச்சமாகவே அமைந்தது என்பதையும் இங்கு குறிப்பிட விழை கிறேன்.

இத்தகு பயனில்லாத—பண்பில்லாத—கலைமுறைகள் தமிழகத் தில் வலியத் திணிக்கப்பெற்றுப் பரப்பப்படுவதைக் கலைக் காதலர் களும், கலைச் சுவைஞர்களும் பொறுத்துக்கொள்ள முடியாது; பொறுக்கவும் கூடாது. ஆகவேதான் தமிழ்நாட்டுக்குரிய ஓவியக் கலையை —தமிழரின் பண்டை ஓவிய மரபை— ஆய்ந்துணர்த்த வேண்டிய இன்றியமையாக் கடமை நமக்கு அமைகிறது.

தமிழர் உயிரோவியம்' எனக் குறிப்பிடும் நுண்மை என்ன? ஆழ்ந்து எண்ணவேண்டும்: 'உயிரற்றதுதான் ஓவியம்' எனினும், உயிருள்ளதேபோல அத்துணை இயற்கைத் தன்மை வாய்ந்ததாகத்

தமிழ் ஓவியக்கலை விளங்கியதையே அச்சொல் சுட்டுகிறது. இனைய இயற்கை ஓவியக்கலை தென்னாட்டில்—தமிழ்நாட்டில்—பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே போற்றிப் பேணி வளர்க்கப்பட்டு வந்திருக்கும் வாய்மைக்கு இடைக்கால நூலான நைடதத்திலும் குறிப்புக்கள் உண்டு.

"பூகமடல் கீறிஇள வாளை புனல் காலு
மேகமிசை தாவிடும் விதிர்ப்பநகர் மன்னன்
ஓகையொடு அளித்த உயிரோவியம் நிகர்க்கும்
தோகை மன ஓலைகொடு தூதுவர் அடைந்தார்"

[நளன் தூதுப் படலம்: 3-ஆம் பாடல்]

தமயந்தி ஒப்பற்ற அழகுச் செல்வி. அவளழகை விளக்கத் தமிழ்ப் புலவருக்குச் சொற்களா இல்லை? வளமிக்க சொல்லாட்சிச் செழுமை உடைய தமிழில் பெண்ணழகை விளக்கக் கோடிக் கணக்கான சொற்கள் இருக்கின்றன. ஆனுலும் அவை போதவில்லை! கவிஞரின் உள்ளத்தில் ஊறியிருக்கும் அழகுணர்ச்சி அவ்வளவு சீரியது!

மக்களைவிட அழகாகப் பண்டைத் தமிழ் ஓவியக்கலை உயிரும் உணர்வும் பொருந்தி விளங்கியது. அதனுல் அழகுமிக்க கதைத் தலைவிக்கு 'உயிரோவியத்தை' உவமையாக்கினுர் புலவர். 'உயர்ந்த பொருளையும், சிறந்த பொருளையும்தான் உவமையாக ஆள வேண்டும்' என்பது தமிழிலக்கண நெறியாகும். அவ்வாருயின் உயிரோவியங்கள் பண்டைத் தமிழகத்தில் எவ்வளவு சீரும் சிறப்பும் ஆற்றலும் அழகும் உடையதாக இருந்திருக்கவேண்டும்; இதனுல் தான் அதிவீரராமர், 'உயிரோவியத்தை ஒத்த மயில் போன்றவளான தமயந்தி' எனக் குறிப்பிட்டார்.

நளன் தமயந்தியிடம் தூது செல்கின்ருன். தமயந்தியின் கன்னிமாடத்தை அடைந்ததும், அவள் தோழியர்கள் நளனைப் பார்க்கின்றனர். அவர்களுக்குச் சொல்லமுடியாத வியப்பு. நளனின் அழகு அவர்கள் கண்ணையும் கருத்தையும் கொள்ளைகொள்கிறது! அவனை ஒரு மாந்தனுக அத்தோழியர் கருதவில்லை. 'ஓவிய மேதையர் எழுதிய ஓவிய உருவில் ஒன்று' வந்து எதிரில் நிற்பதாக எண்ணினராம் அத்தோழிப் பெண்டிர்

"செழுமணிப் பித்திகைத் தலத்தில் தீதறு
மழவிடை அனையவன் வடிவம் தோன்றலும்
கழைஅமை தோளினுர் காளை பேரெழில்
எழுதிய உருவில் ஒன்(று) என்ன எண்ணினுர்"

(ந, தூ. படலம்: 71.)

எழிலுக்கு எல்லைகாட்டுவது ஓவியக்கலை. கண்ணையும் கருத்தையும் குளிர்விக்கும் கவின்விருந்து ஓவியம். ஓவியம் உணர்வைத்தூண்டும்.

ஆனால் ஓவியமானது உணர்ச்சியற்ற வெறும் புனை உருவம் தானே! இந்நுண்மையை ஒருபாடலில் அதிவீரராமர் குறிப்பிடுகிறார்:

"மண்ணுலகின் மடவரலை விழைந்தனன் நம் இறைவன்
எனவருந்தி மாழாந்
தெண்ணரி நம(து) எழில்நலனும் இளமையு நன்றாயவென
விகழ்ந்துகூறி
வெண்ணிலவு பொழிதரள முறுவலயி ராணிமுதல்
விண்ணில்வாழும்
ஒண்ணுதல் மங்கையர் மடநாண் மீதூர ஓவியம் போன்(று)
உணர்வு தீர்ந்தார்!"

(இந்திரபடலம்: 20)

பண்டைக்காலத்தில் வீடுகள் தோறும் சுவரில் ஓவியம் தீட்டியிருப்பர். இவ்வகை ஓவியந்தீட்டப் பெற்றக் கட்டிடக்கலை உண்மையை இன்னும் உணர்த்தும் சான்றாகக் காஞ்சிநகர் கைலாசநாதர் கோவிலும், செஞ்சிக்கு அண்மையிலுள்ள பனைமலைக் குன்றுக்கோயிலும் விளங்குகின்றன. இக்கோவில்களுக்கு இன்று சென்றாலும் சுவரெல்லாம், கோபுரமெல்லாம் அழியா நிறச்சுவடுகள் தெளிவாகத் தெரிவதைக்காணலாம்.

இன்று நம் வீடுகளில் அச்சிடப்பட்ட வண்ணஓவியங்களைக் கண்ணாடிச்சட்டமிட்டு மாட்டி ஒப்பனை செய்கிறோமன்றோ! வீடு அழகாகத் தோன்றுவதற்கு மட்டுமா இவ்வாறு ஓவியங்களை வீட்டில் அமைக்கிறோம்? நமக்குநாமே அழகுணர்ச்சியை ஊட்டிக்கொள்வதற் காகவும், முன்பின் அறிமுகமற்ற புதியோர் வீட்டுக்கு வந்தால் அவ்வோவியங்களைப் பார்த்துப் பொழுதைக் கழிப்பதற்கும் வாய்ப்புண்டு.

ஓவியம் கட்புலனைக் கவர்ந்து கருத்தை மயக்கி இன்புறுத்தும் அமிழ்தம். இதனால் உள்ளத்துன்பங்களும் அகலும். இத்தகுநிலை அன்றும் இருந்தமையை இலக்கியம் மெய்ப்பிக்கிறது:—

"தோட்டலர் மாலை நாற்றித் துறக்கமோ டுறழச் செய்த
வீட்டகந் தோறும் பைம்பொன் விளங்கிழை செவ்வி வாய்ப்பத்
தீட்டிய உருவு நோக்கித் தேறல் கொப்புளித்து மாந்தும்
பாட்டளித் தாம வேந்தர் பகற்பொழுது ஆற்றினரே."

(சுயம்வரப்படலம்: 21)

கவிஞர்கள் உயர்ந்த உணர்ச்சிகளை விளக்கப்புகும்போது, அளவுக்கு மீறிப்புகழ்வதோ, பழிப்பதோ, விலக்குவதோ இயல்பு. இதனை "உயர்வுநவிற்சி" என்பர். "உண்மையான ஒப்பற்ற அழகு ஓவியத்திலும் தீட்டிக்காட்ட இயலாததாக இருக்கும்" என்பர். உள்ளது உள்ளவாறே ஓவியம் புனைவதுகூடும் ஆயினும் இயற்கையை வெல்வது சற்று கடினமேயன்றோ? ஒப்பற்ற அழகுடைய ஆடவர், மகளிரை ஓவியப்புலவர்கள் ஓவியத்தில்

திட்டினுலும், முழு அழகையும் வெளியிடுதற்கு இயலாது தவிப்பராம். அத்தகு அழகினை உடையவன் நளன். ஓவியர்களால் எழுதமுடியாத உருவம்' எனக்குறிப்பிடும் வழக்கு பல புலவர்கள் மேற்கொள்வதாகும்.

"ஓவியர் எழுத ஒண்ணு வுலம்பொரு வயிரத்திண் தோள்
வாவுமான் தடந்தேர் அண்ணல் வனப்பினை நேரார்ஆகித்
தேவரில் வையம் காக்கும் அரசரில் செவ்வி வாய்ந்த
காவலர் திருந்த நோக்கார் கடைக்கணுல் நோக்கினுரால்"
(சுய. படலம். 90)

† இப்பாடலைப் போன்றே பேரழகி தமயந்தியும்,' ஓவியர் எழுத அரும் உருவப்பைங்கொடி' 'தீட்ட ஒண்ணு எழில் தெரிவை' என்று பல இடங்களிலும் குறிப்பிடுவார்!

அழகின்மீது கலைஞர்க்கும் கவிஞர்க்கும் கொள்ளை காதல்! அழகில் மயங்காத அறிஞனை இஞ்ஞாலத்தில் காணவேமுடியாது. கலையின் உயிர் நோக்கமே அழகு. அழகற்றதையும் அழகுள்ள தாக்குவதே ஓவியக்கலையின் உயர்க்கொள்கை.

பெண் அழகில் பித்தர்களாக மயங்கிக்கிடப்பவர்கள் கவிஞர்களும் கலைஞர்களுமேயாவர். பெண் அழகு கற்பனைக்குத் தூண்டுகோல். பெண்டிர்க்கு இயற்கையிலேயே அழகுணர்ச்சியும், அழகுக்கவர்ச்சியும் உண்டு, தம் உடல் அழகை மேலும் மேலும் ஒப்பனைவழி பேரழகுள்ளதாக ஆக்கிக்கொள்வதில் பேரார்வம். பெண்டிர் இவ்வாறு அழகுணர்ச்சிகாரணமாக கோலஞ்செய்துகொள்வது ஒரு கலையாக வளர்ந்தது நாட்டில். 'ஒப்பனைக்கலை' ஓவியக் கலையின் ஒரு பிரிவு.

கண்களுக்கு மை தீட்டுதல், வெற்றிலைபாக்குப் போடுதல், மருதாணி (அழகுவண்ணம்) விரல்உகிர்களுக்குப் பூசிக்கொள்ளல்,

---

† "ஓவியர் எழுதஅரும் உருவப் பூங்கொடிக்
கோவைவார்மணி வடக்கொம்மை வெம்முலைத்
தூவினேவுறும் எனச்சுடர்செய் பூணினுன்
ஆவியந் துகில் கரந்தமையத் தூவினுன்"
— (புனல் விளையாட்டுப் படலம் : 16).

"வாவியின் மருங்குநன் மணிகள் கோத்தெனத்
தூவியம் பொற்சிறை மென்புள் தோற்றலும்
ஓவியர் எழுதரும் உருவப் பைங்கொடி
காவியங் கண்இணை களிப்ப நோக்கினுள்"
— (காண்புகு படலம் : 6)

"காட்டினன் இருள்காலையில் காவலன் ஈத்த
தீட்டொணு எழில் தெரிவையைத் தேடினன் கொணர்ந்த
மூட்டு முத்தழன் முறைமையின் வளர்த்திடு சுவேதன்
வேட்ட யாவையும் கொள்கென அளித்தனன் வீமன்"
— (வீமன் தேடவிட்ட படலம் : 14)

அகில் மணம் ஊட்டிக்கொள்ளல், சந்தனம் பூசிக்கொள்ளல், கொண்டையிலும், மார்பிலும் பூச்சூடல், அணிமணி புனைவுகள் பூணல், முலைகளில், தோளில் 'தொய்யில்' எழுதுதல், செஞ்சீரடி கட்குச் செம்பஞ்சுக்குழம்பு ஊட்டிக்கொள்ளல், நுதலில்பொட்டிடல், கழுத்தில் மாலை பூணல், உடுத்தல் ஆகியவைகள் யாவும் ஓவியக்கலை நயம்பொதிந்த ஒப்பனைக்கலையாகும்.

அணிகலங்களை அணியும் நாகரிகம் தமிழகத்துக்குரிய தனிக்கலை. பொற்கொல்லத்தொழில் ஓவியக்கலையின் ஒருதலையாய பிரிவாகும். இதுபற்றித்தமிழிலக்கியம் மிகப்பல குறிப்புக்கள் நல்குகிறது. நைடதத்தில் அதிவீரராம பாண்டியர் ஓர் அழகிய உவமையாகப் பொற்கொல்லர் தொழிலை ஆள்கிருர். $

"விளங்கும் நூல்அச்சில் பொற்கொல்லர் மின்னும் வெள்ளிக் கம்பியைக்குறட்டினுல் இழுப்பதுபோல, பலகணியின் கண்களின் வழியாக நிலவின் ஒளிக்கற்றைகள் பாய்ந்து வருவதைச் சகோரப் பறவைகள் அருந்துகின்றன"—இவ்வுவமை எத்துணைக் கலைநலஞ் சான்று விளங்குகின்றது காண்மின்!

பெண்டிர் கலையுணர்ச்சிக்கு வித்திடும் பொற்கொல்லரின் புதுப்புதுக் கற்பனைகளில் தோன்றும் அழகுள்ள அரிய தொழிற்பாடு அமைந்த அணிகலன்களைப் பூணுவதால், பெண்டிரின் அழகு முன்னைவிடப் பன்மடங்கு மிகுதியாக விளங்கும்.

ஆனுல், கவிஞர்கள் தம் கதைத் தலைவியரின் இயற்கையழகைச் சிறப்பிக்கும் நோக்கோடு, "அழகுள்ள அணிகலத்துக்கே அப்பெண்ணின் அழகு தனிப்பொலிவை உண்டாக்குகிறது" என்பர். இதை நம் கவிஞர், "அணங்கினுக்கு அணிசெய்வார்போல அணியினுக்கு அழகு செய்தார்" எனப்பாடுகிருர்.

பண்டைக்காலப்பண்புள்ள நாகரிகங்களில் தலை சிறந்தது பெண்டிர் உடலில் தொய்யில் எழுதுவதாகும் பெண்களின் மார்பகத்திலும், தோளிலும் தொய்யில் எழுதுவர். காதலன் தன் காதலியின் நகில்களிலும் தோல்களிலும் அழகுமிக்க ஓவியங்களைப்

$ "நன்கமைந்த சாளரத்து நகைநிலாக் கொழுந்தை
அன்பினீடுகூர் வாயினுல் சகோரங்கள் அருந்தல்
மின்செய் வெள்ளி வெண்கம்பியை விளங்குநூல்அச்சில்
பொன்செய் கம்மியர் குறட்டினுல் வாங்குதல் போலும்!"
—(நிலாத்தோற்றுபடலம்:).

('சகோரம்' என்ற பறவை, இலக்கியத்தில் குறிப்பிடப்படும் ஒரு பறவை, இப்பறவை நிலவின் ஒளியை, உணவாக உட்கொள்ளும் எனப்புலவர்கள் குறிப்பிடுவர்.)

புனைவான். ※ கரும்பு உருவமும், பல்வகைப் புனைபூங்கொடிகள் உருவமும் வரைவது வழக்கமென்று நூற்சான்றால் அறிகிறோம். இத்தொய்யில் எழுதும்கலை தமிழர் கலை, தமிழகத்துக்கே உரிய பண்பாடு, தமிழரின் வீட்டுத்தனி அறைகளிலும் பண்டைக் காலத்தில் ஓவியக்கலை சிறப்பிடம் பெற்றிருந்த சீர்மையை நாம் உணரவேண்டும் மாதர் கொங்கையைக் குறிக்கும் இடங்கள்தோறும் அதிவீரராமர் 'தொய்யில் வெம்முலை' என்றே குறிப்பிடுகிறார்! உடலில் ஓவியந்தீட்டி உளமகிழும் ஒப்பற்ற ஒள்ளிய நாகரிகத்தைக் கலையுணர்வோடு ஆழ்ந்து, ஆராய்ந்து எண்ணிப்பார்க்கவேண்டும். எத்துணை சீரிய பண்புக் கொடிமுடியிலிருந்து இத்தமிழ்க் கலையாக்கம் பிறந்துள்ளதென் றெண்ணினால் உடல் சிலிர்க்கும்; உள்ளம் உருகும்; உயிர் உவக்கும்; அறிவுவியக்கும். பெண்களின் அழகுக் கலையுயர்ச்சியின் எல்லை இத்தொய்யில் வரையும் பழக்கமே யாகும். †

※ இன்னும், பண்டைமரபுப்படி நிகழும் திருமணங்களில் 'சந்தன நலங்கு' என நிகழும் நிகழ்ச்சி 'தொய்யில்' எழுதும் கலையின் மாற்று உருவமேயாகும்)

† "மையரிக்கண் வதனமங்கை வடிவமைந்த சீறடிச்
செய்யபங் கயங்கள்உண்டு உமிழ்ந்த செய்யகதிர் கொலோ!
தொய்யில் வெம்முலைத் தடம்சுமந்து நொந்துவாடிய
வையநுண் மருங்குல் மெய்அழன்று எழுந்த வெம்மையே"
— (கைக்கிளைப்படலம்: 9)

"ஐயரிக்கண் மாதின்மெய் யழன்றவெம் மையாற்றலாத்
தொய்யில் வெம்முலை புதைத்த தோடுஅவிந்த தாமரை
மையன்மா மதத்தயானை நளன்மணந் திவ்வாறுதன்
கையினாற் பிடிப்பனென்று காட்டுமாறு போன்றதே."
— (கைக்கிளைப்படலம்: 16)

"தொய்யில் முலைகள் பசப்பூரத் துணைவர்பிரிந்து துயருழந்த
மையல்மடவார் உயிர்கவர்வான் கூற்றம்போல வருமதியே!
ஐயம்இலைஉன் உடல்களங்கம் அழலும்கொடிய விடமன்றே!
வெய்யபகுவாய்க் கரும்பாந்தள் விழுங்கிஆற்றாது—
[உமிழ்ந்ததுவே — (சந்திராபாலம்பனப்படலம்: 8)

'வெய்யஅரவின் பருவாயின் விடுத்தமடமான் எழில்நோக்கி
மையல்கூர்ந்த நெஞ்சினனாய் வரிவில்தடக்கை வயவேடன்
தொய்யில் முலைமேல் புல்லுதற்குத் தொடரத்துஞ்சா
[அருங்கற்பின்
தையல்முனிந்து நோக்குதலும் சாம்பராயிற்(று) அவன்
[உடலே." — (பிரிவுறுபடலம்: 24)

பெண்டிர் கொங்கைமீது மலையினின்றும் கொண்டுவந்த மணச் செஞ்சாந்து பூசுவது பண்டைய வழக்கம். இப்பூச்சும் ஓவியக்கலை ஒழுங்குடனே இயல்வதாகும். $

தலைவிக்குத் தோழியர் கலையழகு மிளிர ஒப்பனை செய்வது பண்டைய வழக்கமாம். மை கண்ணுக்குத் தீட்டலும், கூந்தல், தோள், மார்புகளில் பூச்சூட்டலும், கையிலும் வளை பூட்டலும், இடையில் மணிமேகலை பூட்டலும், காலில் சிலம்பணிவித்தலும், வளை திருத்தலும், மார்பில் முத்தணிபுனைவித்தலும், உடலில் அழகுமிகத் தொய்யில் ஓவியம் தீட்டலும் மரபு என்ற உண்மையைப் பலபாக்களில் விளக்கமாக அதிவீரராமர் குறிப்பிடுகிறார். ‡

$ "புரிகுழல் புலரவாசப் பூம்புகை ஊட்டிவிண்டு
முருகுயிர்த் தினவண்டார்க்கும் முல்லையஞ் சூட்டுவேய்ந்து
வரிமுலை முகட்டில் தெய்வமலையச் செஞ் சாந்துபூசி
எரிமணிக் கலாபம் வீக்கிஇழைபல திருத்தினரே!"
— (சுயம்வரப்படலம்: 102)

‡ "ஐயரிசிதறுமழை மதர்நெடுங்கண் அஞ்சனம் எழுதுவார்சாந்தத்
தொய்யில் வெம்முலையின் நிலவுகொப் புளிக்கும்தூமணிப்
[பிறைவடம் அணிவார்;
மையிருங்கூந்தல் வகிர்ந்து தேன்முரலு மாட்டுவார்
பூந்தொடை புனைவார்;
நையுநுண்மருங்கில் கதிரொளிபரப்பும் நகைமணிமேகலை
[புனைவார்." — (சு. ப: 54)

"சில்லரிச்சிலம்பு பஞ்சிமேற்பனிக்கும் சீரடிக்கவின்செய்புனைவார்
எல்வளைதிருத்தி ஆடமைப் பணைத்தோள் எழில்பெறத்
[தொய்யில் வரைந்திடுவார்
அல்லியக் கமலமென்மலர் கவற்றும் அடியினில் அலத்தகம்
[அணிவார்
வில்லுமிழ் ஒருகாழ்முத்தணி அணிவார் விரைகமழ்
[தெரியல்கை புனைவார்." (சு. பு:)

மகளிருக்கு அழகுசெய்யத் 'தொய்யில்' ஓவியம் வரையும் பழக்கம் நாளடைவில் சிறப்புள்ள விலங்குகளுக்கும் அவற்றினுடலில் 'தொய்யில்' எழுதும் பழக்கமாக மாறி விளங்கியது. யானையின் மாமுகத்தில் தொய்யில் எழுதுவதைக் கவிஞர் குறிப்பார்.

"கொய்யுளைக் கலினமாவின் குரத்துகளெழுந்துவிம்மி
வையகமுழுதுஞ் சூழ்போய் மறிகடற் கிடங்குதூர்த்து
மொய்பெருத சலத்தோடு முரணியெண் டிசையும்காக்கும்
தொய்யில் மாமுகத்த யானைக்கவுட் குழிதூர்த்தவன்றே."
— (சு. ப: 3)

இப்பழக்கத்தின் சாயல் இன்றும் மாட்டுப்பொங்கல் விழாவில் படுகிறதை நாம் அறிவோம். மாடுகளுக்கு வண்ணந்தீட்டி ஒப்பனை செய்வரன்றோ நம்நாட்டு சிற்றூர்புற மக்கள் இது பண்டைமரபினை இன்னும் காட்டும் அருஞ்சான்றாகும்.

நெற்றியில் ‘பொட்டு’ அணிதல் நல்லழகுக் குறியீடு. தற்கால மகளிர் பொட்டிடுவதில் பலவகை முன்னேற்ற முறைகளைக் கண்டுள்ளனர். வகைவகை புனைகொடிகளை நெற்றியில் பண்டும் எழுதிக்கொண்டிருந்தனர் பெண்டிர். நெற்றியைப் பிறைநிலவோடு ஒப்பிடுவர்புலவர். அத்தகு பிறைதுதல்கொண்ட பெண்ணின் நுதலைப் பார்த்து உலகினர், ‘அது நிலவுதான்’ என நம்பிவிடுவார்களோ; என்று அஞ்சித் தலைவியின் தோழியர் நெற்றிக்குப் பொட்டிட்டு, அதை ‘நெற்றியே’ என நிலைநாட்டுகின்றனராம்.

“வேற்றுருக் கொண்டுமாதின் விளங்குவாள் முகத்திற்சேர்ந்த
கூற்றினைத் தடங்கண்ணென்ன அஞ்சனம் குலவத்தீட்டிக்
கீற்றிளந் திங்கள் அன்று கிளர்ஒளி நுதலேயென்று
தேற்றுவார் போலச்செய்யத் திலகமும் எழுதினரே.”
— (சுயம்வரபடலம் 103.)

இலக்கிய உணர்வு குன்றுமலே கலைக்குறிப்புக்களைப் பாடல்களில் குறிக்கவேண்டிய இன்றியமையாமை புலவர்க்கு அமைவதால் கலைத் துறைக் குறிப்புக்களை ஆங்காங்கு சிதறிய துகள்போலவே அமைத் துள்ளனர்.

மைகூட்டுங் கலையை ஆசிரியர் ஒருபாட்டில் கூறுகிறார். விண்மீன்களை எழுத்துக்களாகக் கற்பனைசெய்து, உலகைச் சூழ்ந்த இருள், அணிவான்கூட்டும் மை, என உருவகம்செய்த கற்பனைத் திறம் மிக்க எழில் வாய்ந்ததாம்.

“தோட்டு மென்மலர்ப்பூங்கணை துரப்பமெல்லளி நாண்
பூட்டுபைங் கிழைகுழைத் (து) எதிர்வேனிலான் புகழைத்
தீட்டுதாரகை எழுத்தொளி சிறந்திட அணிவான்
கூட்டுமையெனச் செறிந்த கூரிருட் பிழம்பே.”
— (மாலைப்படலம்: 11.)

அதிவீரராமரின் காலத்தில் ஏடு எழுத்தாணியோடு இறகும் மையும் ஆட்சிசெலுத்திய வரலாற்றுச் செய்தியை இப்பாட்டால் உணர் கிறோம்.

தமிழ்நாட்டில் அரிய கலைத்துறை நூல்கள் அளவின்றி இருந்தன. பிறநாட்டினர் தமிழகத்திற்கு வந்து பல கலைகளிலும் பயிற்சிபெற்று, நம் கலைச்செல்வங்களையும், கலைநூல்களையும்

எடுத்துச் சென்றனர். அக்காலத்தில் யார் எக்கலையில் தேர்ச்சிபெற எண்ணுகின்றனரோ, அவர் அந்தக்கலை நூற்களைக் கசடறக்கற்று தேர்ச்சி பெற்றபின்பே கலைஞராக விளங்குவர்.

தமிழ்நாட்டில் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே ஓவிய நூல்கள் பல இருந்தன. நைடதத்தில் 'சிற்பநூல்,' 'வடிவமைநூல்' பற்றிக் குறிப்பிடப்படுகிறது. எனவே அதிவீரராமர் காலத்தில் சிற்பம், கற்றச்சு, ஓவியம் ஆகியவை பற்றிய கலைநூற்கள், இலக்கண நூற்கள் பற்பல இருந்தன. இவ்வுண்மையை,

"சிற்பநூல் கழியக்கற்றோர் சித்தரித் தென்ன வாய்ந்த
பொற்புறு நெடியவேற்கண் பூங்கொடி வதுவை வேட்டுப்
பற்பல தேய வேந்தர் தொகுதலிற் பாடை தேர்வான்
அற்புடன் எவரும் தேவபாடையின் அறைவர் மாதோ!"

— (சு. ப: 7)

"வடிவமை நூலிற் சொல்லும் வனப்பெலாம் அமைத்து [வேதன்
கடிமலர்ச் செங்கை வண்ணங்காட்டிய உருவு கொல்லோ
வடுகணை வேனிலானின் னமுது கோல் தோய்த்துத் தீட்டும்
படிவமோ உயிரை வாட்டும் பாவைதன் வடிவந்தானே?"

— (நளன் தூதுப்படலம் : 89)

சிற்பநூலில் சிலைகள் செய்யும் முறைகள், அளவுகள், குடுயீடுகள், படியெடுக்கும் முறைகள், அழகு இலக்கணம் ஆகியவைகள் வரையப்பட்டிருக்கும். இத்தனைக் கலையறிவும்பெற்றே சிற்பம், சிலை முதலியன அமைப்பர் ஓவியக்கலைஞர், பாவை குறிப்பையும் அதிவீரர் குறிக்கிறார்:

"வெவ்வராவினை விண்தொடர் மந்தரம் பிணித்துக்
கவ்வை மிக்கெழக் கடவுளர் கடைந்திடுங்காலைப்
பவ்வ வெண்திரை உயிர்த்த செம் பதுமை வாள்முகம் போல்
தெய்வ ஒண்கதிர் பரப்பி மீது எழுந்தது திங்கள்"

— (நிலாதோற்றுப் படலம் : 1)

ஓவியக்கலையின் இடைக்கால வளத்தின் இயல்பை நைடதத்தில் அதிவீரராமப்பாண்டியர் தந்த குறிப்பால் நனியறிந்தோம்.

ஓவியக்கலையின் ஒள்ளிய சிறப்பை ஒவ்வொரு அறிஞரும் மிக அழகாக உணர்ந்து தத்தம் இலக்கியத்துள் போற்றிப் பாராட்டிக் குறிப்பிட்ட மாண்பை என்னெனப் போற்றுதல் கூடும்?

வாழ்க தமிழ் ஓவியக்கலை!

அறிவன் கோயில்

வித்துவான். சி. கோவிந்தராசனுர்
விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

(உரிமை ஆசிரியருக்கு)

அண்ணல்வாயில்—அறிவன் கோயில்:

அறிவன், அறவோன், அறிவுவரம்பு இகந்தோன்; செறிவன், சினேந்திரன், சித்தன், பகவன் என்று சமணச்சாரணராற் கூறப் பட்டதாகச் சிலப்பதிகாரம் கூறும் அறிவனுகிய சமணதேவரின் சிறப்பினையும், அச்சமயம் தென்னுட்டில் மேற்கொண்ட செயலையும் பலசான்றுகளைக் கொண்டு கூறவியலுகின்றது.

சென்ற பதினேழாண்டுகளாக, தமிழகத்தின் பலபகுதிகளிலு முள்ள பழைய கல்வெட்டுகள், பழம்பொருள்கள், சிற்பவோவியங்கள் ஆகியவற்றை நேரிற்கண்டு, இதுவரையில் அவற்றைப்பற்றி வெளிவந்துள்ள ஆய்வுரைகளையும் கொண்டு ஆராய்ச்சி செய்யும் துறையில் ஆர்வமுடன் யான் முயன்று செல்லும் நெறியில் இடை யிடையே பல வரலாற்றுண்மைகளையும் புதுமைகளையும் காணலா னேன். அவற்றுள், பண்டைக்காலக் கல்வெட்டுகளில் கோனுடு என்று கூறப்பெறும் இன்றைய புதுக்கோட்டைச் சீமையின் பகுதிகளில் சமணரின் வாழ்க்கை மிகுதியாக இருந்தமைக்குரிய சின்னங்கள் செறிந்து கிடந்தமைபற்றியே, அதனை ஒருவாறு ஆராய்ந்து கூறுமுகத்தான் 'அறிவன் கோயில்' என்ற தலைப்பில் இதுகாறும், எளியமுறையில் வரலாறு கொண்ட சிற்றண்ணல் வாயில் மலையை இலக்காகக்கொண்டு அதனைச் சார்ந்து பழமையின் சின்னங்களாகத் திகழும் ஊர்களையும், இடங்களையும் விளக்கி, வேண்டிய இடங்களில் விளக்கமாகப் படங்களையும் அமைத்து எழுதலானேன்.

அறிவன் என்ற பெயர், காமனை வென்ற சமணதேவரின் ஆயிரத்தெட்டு திருநாமங்களுள் ஒன்றென்பதை, கவுந்தியடிகளின் வாயிலாக "காமனை வென்றோன் ஆயிரத்து எட்டு நாமம் அல்லது, நவிலாது என் நா" "அருகர், அறவன், அறிவோற்கு அல்லது என் இருகையும் கூடி ஒருவழிக் குவியா" என்னும் சிலப்பதிகார அடிகள் உணர்த்துகின்றன. இத்திறங்கொண்டே அண்ணல் வாயில் அறிவன் கோயில் பெயர் பெற்றது. அத்தகைய அறிவன் கோயில் தக்கநிலையில் விளங்கிய ஞான்று, எத்தகைய அமைப் புடனும் சிறப்புடனும் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் நிகழ்ந்ததோ அந்நிலையை வரலாற்றுக் கண்ணுடியில் காண்பதே அறிவன் கோயிலின் நிறைவாகும்.

சிற்றண்ணல் வாயில் மலைக்கு நேர்வடக்கே இரண்டு கல் தொலைவில் அண்ணல் வாயில் என்னும் சிற்றூர் அமைந்துள்ளது.

"அன்னவாசல்" என்று இப்பொழுது அழைக்கப்படும் இவ்வூருடன் மிக்கதொடர்புடையதே சிற்றண்ணல் வாயில் மலை. வரலாற்றில் ஊரும் மலையும், நெருங்கிய தொடர்புடையது. சமணத்துறவிகள் மலையில் குகைவாழ்க்கையை மேற்கொண்டு தவமியற்றினர். அருக சமயத்தை மேற்கொண்டொழுகிய மக்கள் ஊரில் வாழ்ந்தனர். துறவிகள் தங்கள் வழிபாட்டிற்கென்று மலையில் குகைக்கோயிலை அமைத்து அதில் சமணதேவர் ஐவரையும் திருவுருவாக்கி வணங்கி வந்தனர். ஊரில் இல்லறங்கொண்டு வாழ்ந்த அருகர், நாளும் வழிபாடு செய்தற்கென்று ஊரின் வடபால் கோயிலும், பள்ளியும் அமைத்து அதில் தக்கசாரணர் பணிபுரிய ஆவனசெய்து வைத்தனர். அச்சமணர் கோயிலே அண்ணல் வாயில் அறிவன்கோயிலென்று பிற்கால சோழர்களின் கல்வெட்டுகளால் அறியப்படுகின்றது.

யான் இப்பகுதியைப் பன்முறை சென்று ஆராய்ந்தபோது, ஊரின் வடபாலுள்ள குளக்கரையில் செறிந்து நின்ற நாகதாளிக்குள் நலிந்து கிடந்த இரண்டு சமணதேவரின் சிலைகளை ஊரிலுள்ளார் கண்டு, அவற்றை எடுத்து அருகில் நிறுத்தியுள்ளமையைக் கண்டேன். சிற்பச் செறிவுடன் திகழும் பெரிய சிலையின் உயரம் ஐந்தடியாகும். அதனோடு வைக்கப்பட்டுள்ள சிறிய சிலையின் உயரம் நான்கடியாகும்.

பெரியவடிவில் உள்ள சமணதேவரின் தலை தனித்துப்பொருத்தப் பட்ட சிற்பமாக இருந்தமையால் அறிவிலிகள் எளிதில் சிதைத்து விட்டனர். இன்று இச்சிலை தலையின்றிய தோற்றத்திலும் ஒரு தெய்வீக சக்தியோடு காட்சியளிக்கின்றது. இச்சிற்பச் சிலையை நல்ல விளைவுள்ள கல்லில் செதுக்கியிருப்பதால், ஆங்காங்கு தட்டிப்பார்த்தால் வேறுபட்ட இனிய ஓசைகள் எழுகின்றன. மற்றொரு சிலை சிற்பச் சிறப்பில்லையாயினும் நன்னிலையில் உள்ளது.

சமணதேவரின் சிலை தனித்து அமைக்கப்படுவது மரபில்லை. ஒரே கல்லில் சிற்பம் சித்தரிக்கப்பட்டிருக்கும். அசோகமரத்தின்கீழ் அரியாசனத்தில் அருகதேவரின் திருமேனி நிலையில் திரியாது அடங்கிய தவப்பொலிவுடன் உட்கார்ந்த நிலையிலோ அன்றி நின்ற நிலையிலோ அமைக்கப்பட்டிருக்கும். தலைக்கு மேலாகச் சமணதேவர் என்பதற்குரிய சின்னமாக, சந்திராதித்தியம், நித்திய விநோதம், சகலபாசனம் என்று சமண நூல்கள் கூறுவதும், "திங்கள் மூன்றடுக்க திரு முக்குடை" யென்று சிலப்பதிகாரம் சுட்டுவதுமாகிய முத்துக்குடை, இரத்தினக்குடை, பொற்குடை ஆகிய முக்குடையும் ஒன்றன் மேலொன்றாக அமைக்கப்பட்டிருக்கும். அவற்றுடன், தேவதுந்துபி, தெய்வத்துவனி, வெண்சாமரை, மலர்மாரி ஆகிய காட்சிகளும்[o] சிறியவடிவில் தேவரைச் சூழ அமைக்கப்பட்டிருக்கும்.

ஒரே கல்லில் மேலேகூறிய எல்லா நிலைகளையும் தெளிவாகச் செதுக்கியே வழிபாட்டிற்குரியதாகச் சமணமக்கள் அமைத்துவந்தனர். இத்தகைய சிற்பப்பொலிவின் சிறப்பைத் தெளிவாகச் செதுக்கி

யுள்ளதைப் பெரிய சிலையில் காணலாகும். இச்சிலையின் பழமையினைக்கொண்டு ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் அதற்கிருந்த மதிப்பினை வரலாறுபெற்று வளரும் கற்பனையுள் காண்பாம்.

காலைநேரம். கிழக்கே படர்ந்துள்ள முகிற்கூட்டத்தைக் கிரணக் கைகளால் தழுவி எழுகிருன் கதிரவன். அண்ணல் வாயில் அறிவன் கோயிற் பொன்விமானம் மின்னலைப்போல் ஒளிருகின்றது. கோயிலிலிருந்து எழும் மணியோசை திசையெல்லாம் பரவி ஓங்காரிக்கின்றது. பன்னூறுசமணர் தூயவடிவுடன் பணிந்து நிற்கின்றனர் நறுமணப்புகை கமழ தெள்ளிய விளக்கொளியில் தேவரகமாகும் கருவறையுள் தெய்வீகமண்டபத்தின் நடுவே பெரிய அருகதேவரின் சிலை அமைக்கப்பட்டுளது. தேவரை மலரும் செந்தாமரை மலர்கள் அழகு செய்கின்றன. அமைதியுடன் அருச்சகர் வழிபாடு செய்கிருர். எதிரே பணிந்து நிற்கும் யாவரும் ஒரே நிலையில் ஒரே குரலில் அமைதியாக மந்திரம் ஒலிக்கின்றனர். ஊரிலுள்ள மக்களின் மனம் சமணக்கோயிலிலிருந்து எழும் மணியோசையிலும், மந்திர ஓங்காரத்திலும் மயங்குகிறது. இவ்வாறு அறிவன் கோயிலில் வழிபாடு திகழ்ந்த சின்னுழிகையின் பின் கோயிலின் ஒரு பகுதியாகத் திகழும் அறிவன் பள்ளியில் சிருர்களின் நெடுங்கணக்கொலி எழுகின்றது. அமைதிநிலவ சமண உபாத்தியாயர் பாடம் சொல்லத் தொடங்குகிருர். பள்ளியின் உள்ளே உயர்ந்து பாந்துநிற்கும் மண்டப விதானங்களிலும், அகன்ற கூடச் சுவர்களிலும் கண்ணுக்கினிய உயர்ந்த வண்ணவோவியங்கள் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன.

வழிபாடு முடிந்தவுடன் அருகசமய ஆச்சாரியரும், சாரணரும் கலைஞரும் அவ்வவர்பணியை ஆர்வத்துடன் செய்யத் தொடங்குகின்றனர். அப்பொழுது, அவ்வறிவன்கோயில் ஓர் கலைக் கோயிலாகவே காட்சியளிக்கின்றது.

“இறையகத்தைச்சார்ந்து சூழ்ந்துள்ள திருச்சுற்றுலையில் எழில் மிகுந்த கொடியோவியங்களால் அழகு செய்யப்பட்டிருந்த அறைகள் பலவிருக்கின்றன. பாலி மொழியிலும், தமிழ் மொழியிலும், பிற மொழிகளிலும் எழுதப்பட்ட சுவடிக்கட்டுகள் தக்கமுறையில் வரிசைப்படுத்திவைக்கப்பட்டுள்ளதுஓரறையுள். சமயக்கருத்துக்களையும், நீதிகளையும், கண்டுபிடிப்பாக அமையும் கலைவளர்ச்சிக் கருத்துக்களையும், மருத்துவ முறைகளையும்கொண்ட நூலகமாக அவ்வறை விளங்குகின்றது. அடுத்துள்ள அறையில் சமணப் பெரியார்கள் பலர் ஆய்வுசெய்து நூல்பல வியற்றிக்கொண்டிருக்கின்றனர். அவருள் பாலி மொழியில் வல்லுநரும், தெலுங்கு கன்னடம் ஆகிய மொழிகளில் தேர்ச்சிப்பெற்றவரும் தமிழில் தனியார்வமுடையவரும் இருக்கின்றனர். அடுத்ததோரறையில் மருந்துகளின் வாடை வீசுகின்றது. சிந்தனையின் சுவட்டைத் தெள்ளிதின் புலப்படுத்தும் முகப்பொலிவுடன்கூடிய சமணத் துறவியொருவர் பச்சிலைக் குவியல்களின் நடுவே ஏதோ ஒரு கிழங்கை ஆராய்ந்துகொண்டிருக்கிருர்.

கற்குழிவில் அரைக்கப்பட்டும், எடுக்கப்பட்டும், குப்பிகளில் அடைக்கப் பட்டும் மருந்துகள் இருக்கின்றன. மருந்துப் பொருள்களை முறை யாக நீருக்கும் தீக்குழியும் ஒருபுறம் அமைக்கப்பட்டுள்ளது. சித்த மருத்துவ முறைகளைப் பயிலும் சில சாரணர் தலைவருக்கு உதவி செய்யக் காத்துள்ளனர். அடுத்த அறையில் ஆசிரியர் அறிவுப் பொலிவுடன் ஞானச்சுடரொளியாய் அமர்ந்து ஆர்வமும் செற்றமும் இப்பகுதி அகல நீங்கிய வீரனுதற்குரிய விழுமிய சாரணர்கட்கு சமய தத்துவங்களையும், கோட்பாடுகளையும் முறையாக எடுத்துக்கூறுகிறார். சமணச் சாரணரின் பயிற்சிக்கூடம் போலும்! அடுத்தொரு அறைமுழுமையும், இயற்கையாகக்கிடைக்கும் வண்ணக்கற்களும், வண்ணமலர்களும், பச்சிலைகளும் குவிக்கப்பட்டுள்ளன. துறவி யொருவர் அவற்றைப் பனஞ்சாற்றை விட்டு அரைத்துத் தூய வண்ணங்களையும் கலவை வண்ணங்களையும் உருவாக்க முயலுகின்ருர். ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு அழியாதிருக்கும் வண்ணங்களைக் கண்டுபிடிக்கும் இடம் போலும்! அவ்வண்ணக் காரத்துறவியர்க்கு மாணுக்கர் பலர் உள்ளனர். அடுத்து நிற்பது சிற்ப ஓவியசாலை. கல், கல் என்று சில்லொலிசெய்யும் உளிவன் மையால் உருப்பெறும் சிற்பக்கலையின் நுட்பங்களையும், தூரிகையின் மெல்லொழுக்கால் துகிலும் சுவரும் மதிப்புறும் கண்ணுக்கினிய வண்ணவோவியங்களின் முறைமையினையும் மாணவர் இங்கு கற்கின்றனர். சாரணச்சிற்பி யொருவர் சமணதேவரின் திருவுருவை உயிர்ப்புடன் கல்லில் துலங்கச்செய்கிருர். துறவியொருவர் அவர்களிடையே நின்று உளியாலும் தூரிகையினுலும் பெறும்பயனை அவர்கட்கு முறையாக உணர்த்துகிருர். கோயிலைச்சார்ந்த பள்ளியில் சிருர்கள் கல்விபயிலுகிருர்கள்." இவ்வாருகக் கதிரவனின் செயலைப் போல் நாளும் முறையாகப் பணிபுரியும் கலைக்கூடமாகவும் கோயிலாகவும் அண்ணல் வாயில் அறிவன்கோயில் திகழுகின்றது.

காலச்சகடம் சுழன்றது. வல்லான் வகுத்த வழியில் எழுந்த சமயத்தென்றல் புயலாகியது. அறிவன் கோயிலும் பள்ளியும் அதற்கிலக்காகிச் சரிந்து மண்மேடாகியது தெய்வச்சிலைகள் சிதைந்து புதைந்துபோயின.

அன்று தெய்வத் திருமேனிகளாகத் திகழ்ந்த அவைகள் இன்று குளக்கரையிலுள்ள தென்னஞ்சோலையில் சிதைந்த சிற்பக்கற்களாக நிற்கின்றன. சிறந்த கலைக்கோயிலாகத்திகழ்ந்த அண்ணல்வாயில் அறிவன் கோயில் இன்றில்லை. அண்ணல் வாயிலும் அன்ன வாசலாகத்திரிந்தது. ஆனுல், அவற்றின் புகழையெல்லாம் தன்னகத்தே கொண்டு, சென்ற காலத்தின் திறனுக்கோர் சான்ருக நின்று திகழுகின்ற அருகதேவரின் சிலை வரலாற்றுக் கண்ணுடியாக நின்று, தனது பழைய கதையை வருவோர்க்குரைத்து வளமுடன் அமைந்து விளங்குகின்றது.

நலம்.

வள்ளுவர் வகுத்த கேண்மை.

வீர. மெய்யப்பன் B. E.
(துணைப்பொறியாளர், பி. டபிள்யூ. டி., செங்கோட்டை.)

1 உருகியெழும் கவிஞனவன் உணர்வைப் போல
உயிர்குளிரத் தாவிவரும் அருவி நீரில்
ஒருநாளும் குளித்தறியார் உள்ளூர்க் காரர்
உட்கார்ந்த இடம்விட்டு நகர மாட்டார்
அருவிபற்றி என்நண்பர் கதைய ளப்பார்
அண்ணுச்சி குற்ருலம் எவ்வா றென்பார்
குறளருவி எமதென்பார் குளிக்க மாட்டார்
குற்ருல நண்பரைப்போல் பலபே ருண்டே!

2 வள்ளுவனுர் வகுத்திட்ட கேண்மை பாட
வந்துவிட்டேன் ஆனுலும் எனக்கோர் எண்ணம்!
உள்ளபல சொல்லிலெலாம் தேர்ந்தெ டுத்தே
ஒவ்வொன்ருய் எடைபோட்டுத் தட்டிப் பார்த்து,
கொள்கவெனக் குறள்வடித்துக் கொடுத்த வேந்தர்
குறிப்பிட்டுக் காட்டுகின்ற கேண்மை தன்னை
அள்ளியெடுத் தென்சொல்லில் அடைப்ப தென்ருல்
அதுகடலைக் குடத்திற்குள் அடைப்ப தாகும்!

வேறு

3 வள்ளுவர் செய்த திருக்குறள் — அது
வாழ்க்கையின் உன்னத ஓவியம்
கொள்ளவும் தள்ளவும் வேண்டிய — பொருள்
கூறிடும் செந்தமிழ் மாமறை.

4 கல்விக் கிரண்டதி காரமும் — பெரும்
கடவுட் கிரண்டதி காரமும்
சொல்லிய வள்ளுவர் நட்பினைப் — பற்றிச்
சொல்லுவ தைந்ததி காரமாம்!

5 ஏனிது போலவர் பாடினுர் — இதை
எண்ணி யுணர்ந்திட வேண்டும் நாம்
தேனென வேதினம் பேசுவார் — பொய்
தேங்கிய நெஞ்சிலே மாசுளார்.

6 நண்பரைப் போலவே நண்ணுவார் — பலர்
நாடக மாடிகள் மண்ணிலே!
உண்மையில் நண்பராய் வாழுவார் — நமக்
குண்டெனி னும்குறை வெண்ணில!

7 நன்றிது தேர்ந்திடல் இன்றியே — சென்று
நட்பதால் கேடொரு கோடியாம்
என்று விளங்கிடக் கூறுமே — குறள்
என்னும்நூல் ஐந்ததி காரமே!

8 அன்பெனெல் வாழ்க்கையின் ஆணிவேர் — அந்த
அன்பிலே பூப்பதே கேண்மையாம்
என்றுரைக் கும்குறள் வேதமே! — அழ(கு)
ஏய்ந்திட நன்கெடுத் தோதுமே!

வேறு

9 வானமெ னும்பெரு வீதியிலே — மதி
வந்தெழில் சிந்திவளர் வதுண்டு
தீனர்கள் கைதவழ் பாத்திரமாய் — அது
தேய்ந்தொளி மங்கிமறை வதுண்டு.

10 காலமெ லாம்விழி கண்டுவரும் — இந்தக்
காட்சிநம் வள்ளுவர்க் கோர்புதிய
கோலம் புனைந்திரு நட்பளக்கும் — ஒரு
கோவினை யேவந்து தந்துதவும்!

11 நீல நிறம்பெறு வான்கடலில் — மெல்ல
நீந்திடும் பொன்பிறைத் தோணியைப்போல்
சீலமி குந்தவர் நட்புறவு — வந்து
சேர்ந்து நிறைமதி யாகிடுமாம்!

12 வானில் எழுந்திடும் வட்டநிலா — என
வந்திடும் பேதையர் நட்புறவோ
மேனி மெலிந்திடும்; கூன்பிறையாய் — அது
மெல்ல மறைந்திடும் நாளடைவே!

13 பேதையர் கொண்டிடும் நட்பினிலும் — பெரும்
பேரறி ஞர்பகை கோடியுறும்
ஊதியம் என்பது பேதையரின் — நட்பை
ஒப்புதல் இன்றியே நீங்குவதாம்!

வேறு

14 கேடகத்தே கொண்டிடுவார் ; ஆனல் அன்புக்
கிளர்ச்சியிலே சிரிப்பதுபோல் சிரித்து நிற்பார்
ஊடகத்தே ஒருசிறிதும் சிரிக்க மாட்டார்!
உதட்டளவில் உன்னைப்போல் உண்டோ என்பார்
தேடுமெழில் தாமரையை முன்னே நீட்டிச்
சேறுள்ளே வைத்திருக்கும் குளத்தைப் போல்வார்
நாடகத்தில் சேராத நடிகர் இந்த
நாட்டினிலே நண்பரெனப் பலபே ருண்டே!

15 ஒட்டியிருந் துறவாடிச் சத்தை யெஃல்லாம்
உறிஞ்சிப்பின் புயல்வந்தால் உதிர்ந்து கீழே
பட்டென்று விழுகின்ற பழத்தைப் போல்வார்
பலருண்டு பலருண்டே அவரை நம்பிக்
கெட்டலையக் கூடாதென் றெண்ணி யெண்ணிக்
கேடர்களின் முகத்திரைகள் கிழிந்து போக
வெட்டொன்று துண்டிரண்டாய் எடுத்துக் கூறி
விளக்குகிருர் வள்ளுவனர் கேண்மை தன்னை!

வேறு

16 பட்டடைக் கல்லென ஒன்றிருக்கும் — கொல்லன்
பட்டறை தன்னிலே நின்றிருக்கும்.
வெட்டிடும் வேலை வரும்வரைக்கும் — உலை
வெந்த இரும்பினைத் தாங்கிநிற்கும்.
வெட்டு விழுந்திடும் வேளையிலே — உளி
வெட்டிட வேதுணை யாகிவிடும்.
பட்டடை போலிருந் தேய்த்துவரும் — நண்பர்
பற்பலர் பற்பலர் பற்பலராம்.

17 நேரில் இனித்திடப் பேசிடுவார் — செயல்
நேரெதி ராகவே செய்திடுவார்.
ஊரினில் மன்றில் பழித்திடுவார் — அவர்
ஒட்டிட விட்டிடில் கெட்டிடுவோம்!

18 கேளென நம்மை யிடித்துரையார் — மிகக்
கீழெனும் செய்கை தடுப்பதிலார்
தோளினிற் கைகளைப் போட்டிடுவார் — நட்பில்
தோய்ந்தவர் போலவே காட்டிடுவார் - அவர்
தூக்கிடும் தாம்பினை மாட்டிடுவார்

19 நன்கு சிரித்த முகத்துடனே — வந்து
நாவில் இனித்திடப் பேசிடுவார்
புண்புரையோடிடப் பார்ப்பவராம் — வெளிப்
பூச்சிலே நோயை வளர்ப்பவராம்!

20 தீச்செயல் கண்டு பொறுத்திடுவார் — உடன்
தேக்குதல் இன்றியே ஊக்கிடுவார்
காய்ச்சலில் வீழ்ந்தவன் வாய்கசக்க — அதில்
கற்கண்டு கொட்டிடும் பித்தர்களாம்!

21 தன்பழி நாணுவார் தக்கவர்கள் — அவர்
தாரணி போற்றிடும் உத்தமர்கள்
பொன்னெனினும்கொடுத் தன்னவரின் — நட்பைப்
போற்றி மகிழ்ந்து வளர்த்திடுவோம்!

விருத்தம்

22 தன்னரும் பூம ணத்தைத்
தாவெனக் கேளா தள்ளிச்
சென்றிடுங் காற்றைப் பார்த்துச்
செடிமறுத் துரைப்பதில்லை;
ஒன்றிய நட்பில் வந்த
உரிமையால் செய்தசெய்கை
நன்றெனத் தலையை ஆட்டும்;
நடனமே செய்து காட்டும்.

வேறு

23 ஆடை யிழந்திடில் தாவிவந்தே — உடை
ஆகவே மாறிடும் கைகளெனத்
தேடியும் ஓடியும் வந்துதவித் — துயர்
தீர்ப்பது நட்பிற் கிலக்கணமாம்.

24 போட்டுப் புடைத்திடும் நல்முறமாம் — மிகப்
பொங்கிப் பொழிந்திடும் வெந்துயரம்!
ஒட்ட மெடுத்திடும் பொய்யுறவே — அதில்
ஒட்டி யிருந்திடும் மெய்யுறவே!

விருத்தம்

25 உள்ளுக்குள் வெம்பகையை வைத்துக் கொண்டே
உறவாட வருவாரை உடனெதுக்கித்
தள்ளாமல் சிலகாலம் நண்பரைப்போல்
தக்கபடி நடியென்று துணிந்து சொல்வார்
முள்ளுக்கு முள்ளென்பார் கேண்மை பற்றி
முழுதாய்ந்து சொல்லிடுவார் குறளின் வேந்தர்
வள்ளுவனார் அவர்வகுத்த கேண்மை, பாட்டில்
வடித்தேனே கெடுத்தேனே முடித்தேன் நானே!

கானகநாடன் சுனையில்!

சுரைக்காயும்—அம்மியும்

சுரைக்காயும்-அம்மியும் :—

நம்மவர்களில் சிலர் அடிக்கடி "சொன்னான் சுரைக்காய்க்கு உப்பில்லை என்று" "விரையொன்று போட சுரையொன்று முளைக்குமா" என்னும் பழமொழிகளைச் சொல்லக் கேட்கிறோம். இந்தப் பழமொழிகளை எதற்காகச் சொல்லுகிறார்கள் என்று தெரிந்து கொள்வதற்கு முன் சுரைக்காயைப் பற்றிச் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

சுரைக்காய் என்பது ஒருவகைக் காய், இது சிலசமயங்களில் குப்பைமேடுகளில் தானாகவே முளைத்து வீட்டுக்கூரைகளிலும், மாட்டுக்கொட்டகைகளிலும், மரங்களிலும் ஏறிப்படர்ந்துக் காய்த்துப் பலன் தரும். இந்தக்காயின் வடிவம் ஏறத்தாழ குடம், சொம்பு, இவற்றின் உருவத்தைப்போல் அமைந்திருக்கும் வீடுகளிலுள்ள சில பாத்திரங்களைக்கூட "சுரைக்காய்க்குவளை" "சுரைக்காய்ச் சொம்பு" என்று பெயரிட்டுச் சொல்வதைப் பார்க்கிறோம்.

இந்தக்காயை மக்களில் சிலர் கறிசமைத்துச் சாப்பிடுவார்கள். இதை மருந்தாகவும் பயன்படுத்துவார்கள். நன்றாக முற்றின சுரைக்காயை உள்ளே குடைந்துக் குடுக்கையாகப் பயன்படுத்து வார்கள். நமது நாட்டில் மதுவிலக்கு இல்லாதபோது மரமேறிகள் சுரைக்குடுக்கைகளில் மதுவை எடுத்து இடுப்பில் கட்டித் தொங்க விட்டுக்கொண்டு மரத்திலிருந்து இறங்குவது பழக்கமாக இருந்தது. இப்பொழுதுகூடப் பதனீர் இறக்குகின்ற மரமேறிகள் இச்சுரைக் குடுக்கைகளை உபயோகிப்பதைப் பார்க்கிறோம். தவிரவும் சிலஏழை மக்கள் தங்கள் வீடுகளில் இக்குடுக்கைகளில் ஏதேனும் பொருள் களைக் கொட்டிவைப்பார்கள்.

ஊழிக்காலத்தில் உலகம் அழியும்போதுத் திரும்பவும் உலகம் தோன்றுவதற்காக ஒரு சுரைக்குடுக்கையில் ஓர் ஆணும் பெண்ணும் மிதந்துகொண்டிருப்பார்கள் என்று நமது பெரியோர்கள் சொல்லுவார்கள். ஆனால் அது உண்மையாய் இருக்குமா என்று கேட்டால், அது ஆராய்ச்சிக்குரியது. அது உண்மை என்றோ, உண்மை இல்லை என்றோ, என்னால் சொல்வதற்கு இயலாது. சுரைக்குடுக்கையைப்பற்றி இப்படிப் பலவகையிலும் பேச்சுக்கள் நடைபெறுகின்றன என்பதை அறிகிறோம்.

ஒருவரை ஒருவர் பேசிக்கொண்டிருக்கும் பொழுதுசற்று பேச்சு முற்றிப்போனால், ஒருவர் மற்றொருவரைப்பார்த்து அவன்என்ன சொன்னான் என்று கேட்கிறார். அதற்கு அவர் "சொன்னான் சுரைக்காய்க்கு உப்பில்லை" என்று பதில் சொல்லுகிறார் என்ன

கருத்தில் இவ்வாறு அவர் சொன்னுரென்பதைச் சற்று சிந்திப்போம். சுரைக்காய்க்கு உப்புச் சிறிதளவு இருந்தால் போதுமானது. இதை ஒரு பொருட்டாக நினைந்து சுரைக்காய்க்கு உப்பில்லை என்று சொல்லுவார் அரிது. இது ஒரு பெரியகாரியமும் இல்லை, இதைச் சொன்னதினுல் குறையும் இல்லை.

அதுபோல அவன் பேசினதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவுங்கூடாது; அப்படி எடுத்துக்கொள்வதினுல் அதுஒரு பெரியகாரியமும் இல்லை; என்னும் உட்கருத்து விளங்கிக் கிடக்கின்றது.

அப்பனைப் போலப் பிள்ளையும் இருக்கிருன் என்பதற்குத் "தந்தையர் ஒப்பர் மக்கள்" என்றும் தாயைப் போல பெண் இருக்கிருள் என்பதற்கு "தாயைப்போல பெண்ணு நூலைப்போல சேலை" என்பதும் பழமொழிகள்' இன்னும் அவனைப் போல் அவன் பிள்ளை இருக்கிறது என்பதை "அப்பனுக்குத் தப்பாமற்பிள்ளை பிறந்திருக்கிறது" என்றும் உலகத்தவர் பேசிக்கொள்வதுண்டு, இதேக்கருத்தை வெளிப்படுத்த நம்மவர்கள் சுரைக்காய்ப் பழமொழி ஒன்றைச் சொல்லுவார்கள். அது என்ன என்ருல் அதுதான் "விரையொன்று போடச் சுரையொன்று முளைக்குமா?" என்பது. இந்தப்பழமொழி சொல்லவேண்டியதின் காரணத்தைச் சற்று ஆராய்வோம். தகப்பன் இல்லாதபோது அவன் பிள்ளையை ஏமாற்றிவிடலாம் என்று சிலர்எண்ணிக்கொள்வதுண்டு. அரிச் சந்திரன் பொய்சொல்ல மறுத்ததினுல், அவன் பிள்ளை "உலோக தாசனையாவது பொய்சொல்ல வைக்கலாம் என்று கோசிகமுனிவன் நினைத்தான். ஆனுல் அதுபலிக்கவில்லை. இப்படிச்சிலர் எண்ணுவ துண்டு. ஆனுல் அவன் பிள்ளை அவனைவிட கெட்டிக்காரனுக இருக்கிருன். சோடைபோகமாட்டான் என்ற கருத்தை வெளிப் படுத்துவதற்காக இந்தப் பழமொழியைச் சொல்லுகிருர்கள். எப்படி யென்ருல் உயர்ந்த பலனைத்தருவதற்காக இடப்பட்ட விதை அதற்கு மாருக எளிதாகக் கருதப்படும் சுரைக்கொடியாக முளைக்காது என்பதற்காகச் சொல்லவந்த பழமொழிஇது.

ஏட்டுச்சுரைக்காய் கறிக்காகுமா? என்பது மற்ருெரு பழமொழி ஏட்டில் எழுதிய சுரைக்காய், சுரைக்காயைப் பற்றி ஓரளவு அறி வதற்கும், சுரைக்காய்ப் படத்தைப் பார்ப்பதற்கும் இயலுமேஅல்லாமல் கறிசமைத்துச் சாப்பிடப் பயன்படாது. சுரைவிதை போட்டுமுளைத்து வளர்ந்து படர்ந்து ஆடுமாடு மேயாமல் காப்பாற்றினுல், பருவம் வந்தபோது பலன் தரும். அஃதேபோல எந்தச் செயலும், சொல் லிலும் ஏட்டிலும் இருந்தால் போதாது. பயன்தரத் தக்க முறையில் பாடுபட்டு அனுபவத்தில் பலன் கை வருவதற்குரிய வினைகளைச் செய்தல் வேண்டும. அப்பொழுதுதான் அது பயனுடைத்தாகும். அவ்வாறின்றி வீணே சொல்லுவதிலும் எழுத்திலும் பயன்தராது, என்பதற்காக இந்தப் பழமொழி வழங்கப்படுகிறது.

இனித் தமிழ்ப் புலவர்களால் இந்தச் சுரைக்காய் எப்படிக் கொண்டாடப்படுகிறது என்று கவனிப்போம்.

"சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை."

என்பது, ஓர் இலக்கண மேற்கோட் செய்யுள். இதில் காடுகள் சூழ்ந்த இடத்து வாழும் தலைவனுடைய நாட்டில் ஓடும் நீரருவியில் சுரைக்காய் உள்ளே அழுந்திவிடும். அம்மியானது மேலே மிதக்கும். மலையைப்போல் உயரமான யானைக்குத் தண்ணீர் நிலைக்காமல் நீத்தாக இருக்கும். முயலுக்குத் தண்ணீர் நிலையாக இருக்கும்; என்று வெளிப்படையான பொருள் தோன்ற இருப்பது இப்பாட்டு. ஒன்றுக்கொன்று பொருந்தாது உலக நடைக்கு நேர்மாருகச் சொல்லப்பட்டது இது.

உடனே புலவரைப்பார்த்து நல்லது புலவரே! யானை நீந்தும் தண்ணீர் முயலுக்கு எப்படி நிலையாக இருக்கமுடியும் என்றுகேட்டான். உடனே புலவர், வல்லவர்கள் செய்யும் உயர்ந்த செயல்களையும் உன்நாட்டு எளியமக்களுஞ் செய்துமுடிப்பார்கள் என்னுங் கருத்து விளங்கச் சொன்னேன் என்ருர்.

இப்படி நகைச்சுவை தோன்றச் சொன்னவைகளைக் கேட்டு கானகநாடன் மகிழ்ந்துப் புலவரைப் பாராட்டினுன். ஆனல், இலக்கணக்காரர் வேறுபெருள் கூறுவார்கள். எப்படி எனில்,

சுரை ஆழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயலுக்கு நிலைஎன்ப
கானக நாடன் சுனை.

அம்மி ஆழ, சுரைமிதப்ப, முயலுக்குநீத்தாம் கானகநாடன் சுனை, யானைக்கு நிலைஎன்ப, என்று தனித்தனிப் பிரித்துப் பொருந்தும்படி சொல்லிக்கொள்ளவேண்டும் என்பர். அதாவது எப்படிச் சொன்னுல் பொருந்துமோ அப்படிச் சொல்லிக்கொள்ளவேண்டியது. இதை "மொழிமாற்றுப் பொருள்கோள்" என்பர் இலக்கணக்காரர்.

"ஏற்ற பொருளுக் கியையு மொழிகளை
மாற்றியோ ரடியுள் வழங்கன் மொழிமாற்றே!"
— என்பது நன்னூல் சூத்திரம் 413.

மொழிமாற்றென்பது; தனக்குள்ளதைக் கொடுத்துப் பிறர்க்குள்ளதை வாங்கும் பண்டம்மாற்றுதல்போல் இருத்தலால் இவ்வாறு சொல்லப் பட்டது. எனினும் இம்மொழி மாற்றுச்செய்யுளால், இலக்கணமேற் கோள் ஒன்றைத் தவிர வேறு எவ்வித பொருள் நுட்பமும் இல்லாது போகும்.

இதைச்சொன்ன புலவர் என்னகருத்துடன் சொல்லி இருப்பார் என்று சிந்திப்போம். கானக நாடனை நகைச்சுவைதோன்ற பரிகசிக் கிருர் புலவர். உனதுநாட்டு நீர்சுனையில் சுரைக்காய் கீழே ஆழ்ந்து

விடும். அம்மி மேலே மிதக்கும். யானை நீந்தும் சுனையில் முயல் நடந்துபோகும் என்றார்.

அதைக்கேட்டக் கானக நாடன் புலவர்கள் எதை எப்படிச் சொன்னாலும் அதற்கு ஓர்காரணம் கற்பித்துரைப்பார்கள். இதுதான் வழக்கமாயிற்றே என்றார். உடனே புலவர், கானகநாடா! நான் உள்ளதை உள்ளவாறே சொன்னேன். உன் நாட்டில் ஏழை எளியவர்கள் எல்லாரும் உயர்ந்த நிலைமைக்குவந்து அடக்கமாக வாழ்கின்றனர். செல்வந்தர்கள் அனைவரும் அடக்கம் இல்லாமையால், தங்கள் நிலைமை தடுமாறி கஞ்சிக்குப் பஞ்சாகப் பறக்கிறார்கள். ஆகையால் உன் நாட்டில் ஏழைமக்களுக்கு சலுகை அதிகம் என்னும் குறிப்புவிளங்க "சுரையாழ அம்மி மிதப்ப" என்னும் பழமொழியைச் சொன்னேன் என்றார். இதைக்கேட்டக் கானகநாடனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

சுரை மிதத்தலும் அம்மி ஆழ்தலும், யாவரும் எளிதில் உணரக் கூடியனவாகும். இதற்கொரு இலக்கியம் செய்யவேண்டியதுஇல்லை. இலக்கியம் இன்றி இலக்கணம் இல்லை. எனவே இச்செய்யுள், தொன்று தொட்டு வழங்கிவருவதோர் பழமொழியே போலும். அடைபொதுவாக்கிப் பொருள்வேறுபட மொழியும், ஒட்டணிபோல இருக்கின்றது. என்றாலும் அம்மி மிதப்பதும் சுரை ஆழ்வதும் உண்மைக்கு மாறுபட்டது. இவ்வுண்மைக்கு மாறுபட்ட கருத்தால் விளங்கும் நீதியினை உணர்த்துவதற்காகவே இவ்வெடுத்துக்காட்டுச் செய்யுள் தோன்றி இருக்கவேண்டும். இடத்திற்கேற்பச் சொற்களை மாற்றி அமைத்து இயற்கையாக உள்ளது எதுவோ அதனையே அறிவிப்பதற்குரிய மொழிகள் இடம்மாறி நின்றதால் மொழிமாற்றாகி இலக்கணமேற்கோளாகவும் நின்றதெனப் பிற்காலத்து இலக்கண உரையாசிரியர்கள் இச்செய்யுளை எடுத்துக்காட்டினர்போலும். அழகிய எளிய சொற்களால்ஆகி ஆழ்ந்த கருத்துடனே பழமொழியாகவும், இலக்கண மேற்கோளாகவும் நீதியை உள்ளடக்கியதாகவும், உள்ள இந்த எடுத்துக்காட்டுச் செய்யுள் மிகப்பழயகாலம் முதல் வழங்கப் பட்டது என்பதற்கு ஐயம்இல்லை.

ஒருசமயம் சங்ககாலப் புலவரில் ஒருவராகிய "முன்றுரை அரையனார்," என்னும் புலவர் பெருமான் ஒரு மலைநாட்டு அரசனைப் பார்க்கின்றார். அவனிடம் பின்வருமாறு பேசுகின்றார்.

மலையிலிருந்து விழுகின்ற ஒளி விளங்கும் அருவிநீரை உடைய மலைநாடனே! புகழ்நிறைந்த குடியில்பிறந்த அறிவு நிறைந்தவர்கள் வறுமையால் வாடி நிற்பதைக் காண்கின்றோம். நல்லகுடி மரபின் வரிசையில்சேராதவர்களாகிய கீழோர்கள் செல்வத்தால்தலைநிமிர்ந்து பெருகிநிற்கின்றனர். இவ்விருசெயலும் "சுரையாழ அம்மி மிதப்ப" என்னும் பழமொழியைப்போல இருக்கிறது என்கின்றார்.

உண்மையில் ஆழவேண்டியது மிதந்தும் மிதக்கவேண்டியது ஆழ்ந்தும் இருத்தல்போலச் செல்வம் பெறவேண்டியவர்கள் வறுமை

சொற்பொருட்டிறனுய்வு:

"விழுப்பம்"

(புலவர். நடேச - நாராயணன்)

தெள்ளுதமிழ்ப் பாவலராம் வள்ளுவர், மனிதவாழ்வின் இன்ப துன்ப நிலைகளை நெடிதாய்ந்து அவ்வாய்வினுன்பெற்ற வாழ்வியல் அடைவுகளை, உளவியல் நுண்மைகளை ஆன்ருேர் உளங்கோடற்கு ஏற்ற செந்நெறிகளாக — வாய்மைமிக்க நன்னெறிகளாக — ஒருங்கு தொகுத்து என்றும் நின்று நிலவுமாறு குறட்பா வடிவிலே அருட்பாக் களாக யாத்து அருந்தமிழர் செந்நெறிக்கே அரணுமாறு செய்துள்ளார்.

கூனகடல் ஞாலத்துக்காரிருள் நீக்கும் கதிரவன்போல மனவிருள் கடியும் மாண்பினைப்பெற்றுக் கன்னித்தமிழின் கருவூலமாக விளங்கும் அத்திருக்குறள், பன்னிப்படித்து உன்னித் தெளியவேண்டிய உயர்ந்த பல கருத்துக்கள் மன்னிக்கிடக்கும் மாத்தமிழ்ப் பனுவலாகும்.

அத்தகைய பனுவலில் தெய்வ மணங்கமழுந்தேனருவித் தீந்தமிழால் வையப் பெரும்புலவன் வள்ளுவன்ஆக்கிய செய்யகுறள் ஒன்றின் செஞ்சொற்பொருள் தன்னை ஐயமறக்காண்போம் ஆழ்ந்து.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் (131)

என்பது தமிழ்தேரும் வள்ளுவனின் அமிழ்தூறும் அருள்வாக்கு.

உயிரினும் ஒழுக்கத்தையே மேலாகக்கருதி ஓம்புதல்வேண்டும். ஏனெனில் அவ்வொழுக்கமே சிறப்பினைத் தருதலான் என்க. இனி உயிரினை எவ்வண்ணம் பேணுகின்ருேமோ அவ்வண்ணமே ஒழுக்கத்தையும் பேணுதல்வேண்டும் எனும் கருத்தமைய, "உயிரென ஓம்பப்படும்" என்று உயிர்க்கும் ஒழுக்கத்துக்கும் ஒத்த நிலைதந்து உரைத்

யுற்றும், வறுமை அடையவேண்டியவர்கள் செல்வம்பெற்றும் இருப்பது "சுரையாழ்தலும், அம்மி மிதத்தலும்" இயற்கையில் பொருந்தாதவாறுபோலாகும். சான்ருேர் வருந்தி நிற்கக் கீழோர் பெருகிநிற்றல் பொருந்தாததொன்ருகும் என்பது இவர்கருத்து. இதை

"உரைசான்ற சான்ருேர் ஒடுங்கி உறைய
நிரையுளர் அல்லார் நிமிர்ந்து பெருகல்
வாரைதாழ் இலங்கருவி வெற்ப! அதுவே
சுரையாழ அம்மி மிதப்பு."

என்னும் பழமொழிப் பாடலால் அறியலாம். -(பழமொழி நானூறு 123)

திருப்பாராயினும்போதும். அவ்வாறு கூறினும் யாப்புக் கெடாதாம்; தளையும்தட்டாவாம். இருப்பினும் ஞாலமேதையான நற்றமிழ் வள்ளுவர் அங்ஙனம் இயம்பினாரல்லர்.

உயிரைக்காட்டிலும் ஒழுக்கத்தினையே உயர்வாகக்கருதி ஓம்புதல்வேண்டும் என்னும் பொருள் புலனுமாறு 'உயிரினும்' என 'உம்' தந்து அமைத்தார். அவ்வாறு உயிரினும் பெரிதுபோற்றி ஓம்புதல்வேண்டும் என்பார், அதற்கான ஏதினையும் (காரணத்தையும்) எடுத்த எடுப்பிலேயே தொடுத்துச் செப்புகின்றார், 'ஒழுக்கம் விழுப்பம்தரலான் அதனை உயிரினும் ஓம்புதல்வேண்டும்' என்று மொழியமைப்புச் சீர்மையான் முறைப்படுத்தி உரைக்கின்றார்.

விழுப்பம் என்ற கிளவிக்குச் சிறப்பு என்பதே பொருள் எனக் கொள்வர் பலரும், அற்றாயின் விழுப்பம் எனும் விழுமியசொல், வெறும் சிறப்பைமட்டுமே குறிக்கின்றதுகொல்? வெறும் சிறப்பை மட்டுமே தருவதனாலேயே வள்ளுவர் அதனை—அவ்வொழுக்கத்தை—உயிரினும் உயர்வாகக்கருதி ஓம்புதல் வேண்டும் என்று ஓதியிரார். ஏனெனில், வெறும் சிறப்பை ஒழுக்கம் ஒன்றினால்தான் பெறமுடியும் என்பதன்று; வேறுசெயல்களானும் சிறப்புப் பெறல்கூடும்.

கேட்டார்ப்பிணிக்கும் தகையவாய்க்கேளாரும் வேட்பமொழியும் சொல்லாற்றலானும் சிறப்பு எய்தல் இயலும். வெற்றிமகள்தன்னை வேட்டுமணம்புரியும் வீரத்திருவாலும் சிறப்பு எய்தல்கூடும். இன்ப மீந்து இதயங்கவரும் இசையாற்றல்,தன்னானும் இனையசிறப்பெய்தல் ஒல்லும். சுருங்கக்கூறின் எக்கலைதன்னின் எவன் ஏற்றம்உறினும் அக்கலைதன்னான் அவன் சிறப்பெய்தும்.

இவ்வாறு ஒழுக்கம் ஒன்றான்மட்டுமின்றிப் பிறதிறன்களானும் சிறப்பு எய்தல்கூடும் என்பதைச் செங்கைக்கனிபோல் செவ்விதின் தெளிகின்றோம். அற்றாயின் வள்ளுவர், ஒழுக்கம் ஒன்றான்மட்டுமன்றிப் பிறிதானும் பெறவல்ல சிறப்பை இங்குக் குறித்திரார். குறித்திருப்பின் தவறாகமுடியும். அதனான் சிறப்பைத்தரும் ஒழுக்கத்தை உயிரைவிட ஓம்பவேண்டுமெனின் அவ்வாறே சிறப்பைத்தரும் பிற கலைகளையும் உயிரினும் ஓம்பவேண்டும்என்று கூறவேண்டிய நிலைக்கு வள்ளுவர்ஆட்பட்டு இடருற்றிருப்பர்.

ஆகவே வள்ளுவர், வெறும் சிறப்பைத் தருவதனாலேயே ஒழுக்கத்தை உயிரினும் ஓம்பவேண்டும்என்று கூறியிரார்எனத் தெளிய வேண்டும். ஒருகால் ஒழுக்கத்தை ஏத்தும்வேட்கை மிகையான் விளம்பினராயின் அதனை உயிர்க்கு அடுத்த நிலையிலோ, அன்றி உயிர்க்கு ஒப்பாகவோ உரைத்திருக்கலாம். கல்வியை அவர் உயிர்க்குஒப்பாகக் கூடக் கூறவில்லை. கண்ணை ஒப்பதுஎன்ற அளவிலேயே கூறிச் சென்றார். (குறள் 329) ஆனால் ஒழுக்கத்தையோ கல்விக்கு ஈடாகச் சொல்லாமல் அரிய உயிர்க்கும் ஒப்பாகச்சொல்லாமல் உயிரினும்

மேன்மைப்படுத்திச் சொன்னார். உயிரைவிட உயர்ந்ததாக எண்ணி ஓம்புதல்வேண்டும் என்றார். உயிரினும் உயர்ந்த இடத்தையே ஒழுக்கத்துக்குத் தந்தார்.

கல்வியானும் தரவியலாத ஏன், உயிரானுமே தரவியலாத சிறப் பொன்றை அவ்வொழுக்கம் தருதல்வேண்டும். அங்ஙனம் தரக் கூடியதாக இருந்தாலன்றி வள்ளுவர் அதனை உயிரினும் உயர்த்தி யிரார். வெறும் 'சிறப்பு' என்ற பொருளைமட்டும் தருவதனாலேயே வள்ளுவர் அவ்விழுப்பம் என்ற சொல்லைப் பெய்யவில்லை. அச் சொற்குச் 'சிறப்பு' என்பதன் விரிவாகப் பிறிதோர் ஆழ்ந்தகன்ற நுண்ணிய பொருளை அவர் கருதியிருத்தல் வேண்டும். அவர் கருதிய அப்பொருள் யாதாயிருக்கக்கூடும் என்பதை அவர் வாக்கின் அகச் சான்றுகளாலேயே ஆராய்ந்து தெளிவிப்பதையே இக்கட்டுரையில் எமது நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

இயற்கை உயிரின் இன்றியமையாமையை மனிதனன்றிப் பிற உயிரினங்களும் உணர்ந்திருக்கின்றன. பாம்பும் பல்லியுங்கூடப் பிறரான் உயிருக்கு ஊறுவருமென்று உணர்ந்தால் ஓடி ஒளிந்து, தம் உயிரைக் காத்துக்கொள்ளுகின்றன. ஈயும் கொசுவும்கூடத் தம் உயிருக்குப் பிறவற்றான் இறுதிவருமென்று உணர்ந்தவுடன் பயந்து ஒடுங்கிப் பறந்து ஒளிகின்றன. இத்தகு தாழ்ந்த உயிரினங்களுங் கூட உயிரின் இன்றியமையாமையை உணர்ந்துள்ளன என்பதை அறிகின்றோம்.

பிற உயிரினங்கட்கு உயிர்தான் உயர்வானது. உயிரினும் சிறந்தது அவைகட்கு ஒன்றும் இல்லை. ஆனால் மனிதன் வெறும் உயிர்மட்டும் உள்ளவனாக இருந்துவிட்டால் போதுமா? அப்படி யிருக்க உண்மையில் யாரும் ஒப்பார். ஒருவன் தவறொன்றுசெய்யின்—ஒழுக்கமற்ற ஓர் செயலை மேற்கொள்ளின் — அவனைப்பார்த்துப் பிறர் 'நாயே' 'கழுதையே' என்று இகழ்வதைக் கேட்டிருக்கலாம். அந்த இகழ்வை எவரும் ஏற்றுக்கொள்ள உடன்படுவதில்லை. வெறும் உயிராகமட்டும் இருந்துவிட்டால் போதும் என்று எண்ணுபவ னல்லன் மனிதன். அவ்வாறு ஏதோ ஒருவகையில் உயிராக இருந்து விட்டால்போதும் என்று ஒருவன் கருதுவானேயாயின் தன்னை நாயே கழுதையே என்று இகழ்பவர்களை ஏன் வெறுக்கவேண்டும்? நாயும் ஓர் உயிர்தானே! கழுதையும் ஓர் உயிர்தானே! மரமானால் என்ன, மாடானால் என்ன, உயிராக இருக்கவேண்டும், அவ்வளவு தானே?

ஆனால் மனிதனோ தான் கழுதை என்று இகழப்படுவதை எந் நிலையிலும் விரும்புவதில்லை. நாயாக இகழ்ந்தால்தான் என்ன என்று அமைதியுடன் பொறுத்துக்கொள்வதில்லை. அஃதாவது எந்த உயிரின் தன்மையாவது இருக்கட்டும், உயிர் இருந்தால் போதுமானது என்று எண்ணுபவனல்லன் மனிதன். மனிதனாகமனிதத்

தன்மை உள்ளவனாக இருக்க விரும்புகின்றான். ஆகவே அதற்கு ஒழுக்கமாக நடந்து மனிதத் தன்மையனாக விளங்க வேண்டும்.

உடல் உறுப்புக்கள் அமைந்துவிட்டதனாலேயே ஒருவனை மனிதனாகக் கொள்ளமுடியாது. பண்பு என்னும் ஒழுக்கம் இல்லையேல் அவன் மனிதனாகான்.

உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு (993)

இதனால் பண்பாகிய ஒழுக்கமே ஒருவனை மனிதனாக்குகின்றது என்றும் வெறும் உறுப்புக்கள்மட்டும் அல்ல என்றும் தெளியலாம்.

ஒழுக்கம் என்னும் பண்பு இல்லையாயின் அவன் எவ்வளவுதான் கூர்த்தமதி படைத்தவனாயினும் மனிதனாகக் கருதப்படான். பின் எவ்வாறு கருதப்படுவான்? வள்ளுவரே கூறுகின்றார் கேண்மின்!

அரம்போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்
மக்கட் பண்பில்லா தவர் (997)

மனிதன் மரமாகின்றான். எப்போது? பண்பில்லாதபோது, பண்புவழி ஒழுகாக் காரணத்தான் ஆறறிவுடைய கூரறி மனிதன் ஓரறிவுயிராத் தாழ்த்தப்படுகின்றான்.

ஒழுக்கம் தரும் சிறப்பை உறுப்புக்களான் தந்திடல் இயலாதென்பதை 'உறுப்பொத்தல்'' (993) என்ற குறளானும், கூர்மையான கல்வியறிவானும் தந்திடல் இயலாதென்பதை 'அரம்போலும்' (997) என்ற குறளானும் அறிந்தோம்.

எனவே உறுப்புக்களானும் கல்வியறிவுகளானும் தரவியலாத ஒன்றை ஒழுக்கம் தருகின்றது என்பதை அறிகின்றோம். அந்த ஒன்றுதான் விழுப்பம். இதனால் விழுப்பம் என்பதன் உள்ளார்ந்த பொருள் விளங்குகின்றதன்றோ? 'விழுப்பம்' எனின் இதுகாறும் 'சிறப்பு' என்றுமட்டுமே கொண்டிருந்தோம். ஆனால் ஈண்டோ ஒருசிறு விளக்கத்துடன் அதன்பொருளை உணரவேண்டியுள்ளது. இனி 'ஒழுக்கம் விழுப்பம்தரலான்'' (131) என்ற குறளில் வரும் விழுப்பம் என்ற சொற்கு, வெறும் சிறப்பு என்றுமட்டும் பொருள் கொடாமல், 'மனிதனாகிய, மனிதத்தன்மையாகிய சிறப்பு' என்றே பொருள் கோடல்வேண்டும். அவ்வாறுபொருள் கொள்ளவேண்டியதன் இன்றியமையாமையை இனியும் காண்போம்.

மானமும் ஓராற்றான் ஒழுக்கத்துடன் அடங்கக்கூடியதே. எனவே தான் உயிரைவிட மானத்தைப் பெரிதாகச் சொன்னார். உயிரை இழப்பதா, மானத்தை இழப்பதா என்ற இக்கட்டான நிலைக்கு மனிதன் ஆளாக்கப்பட்டால் அவன் உயிரைத்தான் இழப்பான்; இழக்கவேண்டும். மனிதனுக்கு உயிர்பெரிதன்று மானமாகிய ஒழுக்கமே பெரிது.

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னர்
உயிர்நீப்பர் மானம் வரின் (969)

இதனானும் மானமாகிய ஒழுக்கமே உயிரினும் சிறந்தது என்பது பெறப்படும்.

பண்பு, மானம் முதலியவை அனைத்தும் ஒழுக்கத்துள் அடங்கிய கூறுகளே. இத்தகைய ஒழுக்கம் உள்ளவனே மனிதன். அதனைக் கொள்ளான் மனிதனாகான் என்பதை வாழ்வியல்மேதையாம் வள்ளுவப்பெருந்தகை திட்டவட்டமாகத் தெளிவிக்கின்றார். ஒழுக்கம்இலான் தாழ்ந்த பிறப்பாகக் கருதப்படுவன் என்கிறார்.

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும் (134)

பிறப்பொழுக்கம் குன்றக்கெடும் என்றார். அஃதாவது ஒழுக்கம் குன்றுமானால் பிறப்புக்கெடும் என்றார். "சிறப்பொழுக்கம் குன்றக் கெடும்" என்று பகர்ந்தாலே போதுமானது. அவ்வாறு சொல்வதால் தளையும் தட்டாது; எதுகையும் குன்றாது; பொருந்தியேவரும். ஆனாலும் வள்ளுவர் அவ்வாறுகூறாமல் பிறப்பைத்தான் குறிப்பிட்டார். ஒழுக்கம் குன்றுமானால் அவனுடைய சிறப்புக் கெட்டு விடும்என்று சொன்னாலே போதாதோ? இருப்பினும் வள்ளுவர் 'பிறப்புக்கெடும்' என்றே கூறியுள்ளார். கெட்டு என்னவாம்? விடையை வள்ளுவர் வாக்கான்கேண்மின்

ஒழுக்கம் உடமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும் (133)

கெடுவதோடுமட்டுமன்றிக் கீழ்ப்பிறப்பாகவும் ஆகுமாம். இக்குறளின் கருத்தை நினைவில் வைத்துக்கொண்டு முதற்குறளில் (131)வருகின்ற விழுப்பம் என்ற சொல்லை உன்னின் அதன் பொருள் இனிதே விளங்கா நிற்கும். அஃதாவது 'விழுப்பம்' என்ற சொற்குச் 'சிறப்பு' என்ற பொதுப்பொருள்சாலும் எனினும் ஈண்டு இக்குறளைப்பொறுத் தமட்டில் 'மனிதனாகிய — மனிதத்தன்மையாகிய — சிறப்பு' என்றே பொருள்கோடல்வேண்டும். ஈண்டு விழுப்பம் எனும்கிளவி சிறப்பு, மேன்மைஎன்ற பொருள்களைமட்டும் தருவதாக அமையாமல் பிறப்பைக்குறிக்கும் — மனிதத்தன்மையைக் குறிக்கும் — சொல்லாகவே அமைகின்றது.

அதனாற்றான் மேற்கண்ட மூன்றாம் (133) குறளில் ஒழுக்கமற்றான் இழிந்தோனாவன் என விளம்பாமல் இழிந்த பிறப்புக்கு ஒப்புவான் எனும்பொருள் புலப்படுமாறு "இழுக்கம் இழிந்த பிறப்பாய்விடும் என்று திட்டவட்டமாக விளக்குகின்றார்.

ஆகவே இழுக்கமானது ஒருவனைத் தாழ்ந்தபிறப்புக்கு ஒப்பான வனாகச்செய்து அவனுக்கு இழிவைத்தரும் என்றால் ஒழுக்கமானது உயர்ந்தப்பிறப்பாகிய—மனிதனாகிய—மனிதத் தன்மையாகிய—சிறப்பைத்தரும் என்றே பொருள் கொள்ளல்வேண்டும். ஈண்டுமீண்டும் அக்குறளைப்படியுங்கள்,

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் (131)

ஒழுக்கத்தை உயிரைவிடச் சிறந்ததாகப் போற்றவேண்டும் என்று கூறியதற்குக் காரணம், அஃது உயிரான்தரவியலா ஒப்புயர்வற்ற மனிதனுகிய சிறப்பைத்தருவதனுன் ஆகும். எனவே இனி. விழுப்பம் என்றசொற்கு வெறும் ' சிறப்பு ' என்றுமட்டுமே பொருள்கோடாமல் மனிதனுகிய சிறப்பு என்றேகொள்வோமாக. இவ்வாறு கொள்வதே வள்ளுவர் கருத்துக்கும் நோக்கத்துக்கும் ஒவ்வக்கூடியதாகும்; அரண் செய்யக்கூடியதுமாகும்.

மறுப்பும், விளக்கமும்.

இனி,

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்ருரோ டேனை யவர் (410)

என்ற குறளில் கல்வி யொன்றே மனிதனுக்கிவிடுகின்றது என்கிருர். அஃதாவது மனிதனுவதற்கு ஒழுக்கமேவேண்டும் என்பதின்று. கல்வி இருப்பினும் சாலும் என்கிருர் வள்ளுவர். அவ்வாறிருக்க மனிதனுகிய சிறப்பை ஒழுக்கமே தருகிறது என்று நீவிர் உரைப்பது எங்ஙனம் ஏற்புடைத்தாம் என்று சிலர் வினவக்கூடும்.

கல்வி ஒருவனை மனிதனுக்குகின்றதுஎன வள்ளுவர் கூறுவது உண்மைதான். ஆனுல் அவர் வெறும் கல்வியைமட்டுந்தான் குறிப்பிடுகின்ருரா என்பது வினு. வள்ளுவர் அவ்வாறு குறிக்கவில்லை. " கற்ருரோடு " (410) என்பது கற்று ஒழுகுகின்றவர்களோடு - அஃதாவது ஒழுக்கம் உடையவர்களோடு — என்று தான் பொருள் கொள்ளல் வேண்டும். ' நூல் ' என்பதற்கு அடையாக வந்த ' இலங்கு ' என்ற சொல் இவ்வாறு கருதத் தூண்டுவதாக உள்ளது.

கல்வி ஒன்றே மனிதனுகிய சிறப்பை அளித்துவிடும் என்று கருதுகின்றவர் அல்லர் வள்ளுவர். கருதுவராயின்,

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் (140) என்றும்

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பில்லா தவர் (997) என்றும்

கூறியிருக்கமாட்டார். பல கற்றும் உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார் அறிவிலாதார் என்கிருர். உலகத்தோடு ஒட்டப் பேசுதல் என்ருே எழுதுதல் என்ருே கூருது உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல் என்றே கூறிஞர். இதனுன் நாம் அறிவது என்ன? ஒருவன் எவ்வளவுதான் கற்றிருந்தாலும் உலகத்தோடுஒட்டி நடக்கின்ற ஒழுக்கத்தைக் கற்காவிட்டால் கல்லாதவனுகவே கருதப்படுவான். (" உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே " உயர்ந்தோர் என்பது ஒழுக்கத்தில் உயர்ந்தோரையே குறிக்கும். எனவே உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல் என்பது ஒழுக்கத்தோடு நடத்தல் என்பதையே குறிக்கும்.)

(தொடரும்)